Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

17 வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

நதி 17 | பாலம் 06 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 15, 2007



வாகன விபத்துக்களில் நட்டஈடு

05



கன்னியாகுமரி முக்கடல்களின் சங்கமம்

06

INDEPENDENT ART FILM SOCIETY

6ஆவது தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா செப்ரெம்பர் 16, 2007
படைப்புக்கள் கிடைக்க வேண்டிய இறுதி நாள் ஆவணி 15, 2007
416-857-6406 / 416-450-6833

# மட்டக்களப்பில் மரங்களின் கீழ் பல்லாயிரக்கணக்கானோர் தவிப்பு!

## கதறி அழும் குழந்தைகள்! மயங்கி விழும் சிறுவர்கள்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்து அடிப்படை தேவைகள் எதுவுமே கிடைக்காது ஏங்கித் தவிக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் எதுவுமே சென்றடையவில்லை. இதனை அரசாங்கமும், அரச உயர் அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

பசியால் கதறி அழும் குழந்தைகளின் அழுகுரல் கேட்கின்றது என்றும், பசியால் சிறுவர் மயங்கி விழுகின்றனர் என்றும், சில கர்ப்பிணிப் பெண்கள் வீதியில் குழந்தைகளை பிரசவித்துள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பலர் மரங்களில் உள்ள பழங்களை உண்டு உயிரை தக்கவைத்துக் கொண்டுள்ளனர்.

இதே சமயம் மூன்றாவது நாளாக படுவான்கரையில் வான்வெளித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. சிறீலங்காவின் விமானங்கள் மட்டக்களப்பு படுவான்கரை, ஈரளக்குளப் பகுதியில் இந்த வான்வெளித் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இந்த தாக்குதலில் விடுதலைப் புலிகளின் முகாம் தாக்கி அழிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ள போதும், இதனை தமிழீழ படைத்துறைப் பேச்சாளர் இளந்திரையன் அடியோடு மறுத்துள்ளார். “அப்படி ஒரு முகாம் தாக்கி அழிக்கப்படவில்லை. விமாக் குண்டுகள் காட்டுப் புறங்களிலேயே வீழ்ந்து வெடித்துள்ளது” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் “பல்குழல் எறிகணைத் தாக்குதல்களையும், விமானத் தாக்குதல்களையும் உடன் நிறுத்துக” என்று நோர்வேத் தூதுவரிடம் தமிழர் தேசிய கூட்டமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

நோர்வே தூதுவர் ஹன்ஸ் பிரஸ்கரைச் சந்தித்து மட்டக்களப்பு நிலைமைகள் தொடர்பாக விளக்கம் அளித்த தேசியக் கூட்டமைப்பினர், சிறீலங்காப் படையினரால் தமிழ் மக்கள் சந்தித்துள்ள அவலங்கள் குறித்தும் தெரியப்படுத்தி உள்ளனர்.

இந்த சந்திப்பின் போது மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான அரியநேந்திரன், ஜெயானந்த மூர்த்தி, கனசபை, தங்கேஸ்வரி ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

இதேவேளை சிறீலங்காவில் இடம் பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தாம் கவலை கொண்டுள்ளதாகவும், சிறீலங்கா ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் சுவீஸ்சர்லாந்தின் வெளிவிவகாரத்துறையின் தலைவர் மைகேலின் கமி ரே தெரிவித்துள்ளார்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Bright Future of Your Child
உங்கள் குழந்தையின் சிறப்பான எதிர்காலம்
is determined by these equations.
Education = Intelligence + Characters
Performance = Knowledge x Believe x Action
பின்வரும் சமன்பாடுகளால் தீர்மானிக்கப்படுகிறது
கல்வி = அறிவுத்திறன் + பண்புகள்
நிறைவேற்றுத்திறன் = அறிவு x நம்பிக்கை x செயல்

Classes for Children 7 to 16 years old
KG Master
416.725.5112 or 416.763.0332
www.kgmaster.com
Also see Page 15

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC
(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!

Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM Veedu Mortgages Inc.

Buy & Sell Residential and Commercial

Raj A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3

வாழ்வு-வியாபாரம்-முதலீடு

HomeLife GTA Realty Inc., Brokerage *
Shiva Sharmah
Sales Representative
416-666-5515
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

நாட்டு நடப்பைக் கவனித்து வந்தால் பொது அறிவு மட்டுமல்ல பணவரவும் கூட வாய்ப்புள்ளது. நிதியம் சம்பந்தமாக கனடிய பணச் சந்தையில் நடைபெறும் மாற்றங்களையும், அது கனடியர்களை எவ்வாறு பாதிக்கின்றது என்பதையும் தெரிவிப்பதுமே இக்கட்டுரைத் தொடரின் நோக்கம். பணச் சந்தை என்று குறிப்பிடும் போது பங்குச் சந்தை, வங்கிகள், வைப்புகள், அடமானக் கடன்கள், மற்ற கடன்கள், வட்டி வீதங்கள் என்று பொதுவான பல நிதிசம்பந்தமான விடயங்களைக் குறிப்பிட உள்ளோம். தேவைப்படும் இடங்களில் வருமானவரி, சேமிப்பு என்று பணச்சந்தைக்கும், தனிநபர் நிதியத்துக்கும் சம்பந்தமான விடயங்களையும் ஆராய்வோம்.

மார்ச் மாத முதல் வாரத்தில் எதிர்பார்த்ததைப் போல Bank of Canada வட்டி வீதத்தை மாற்றவில்லை. மே 2006 வரை தொடர்ந்து ஏழுமுறை வட்டியைச் சிறுகச் சிறுக கட்டிய Bank of Canada, அதன் பின் வட்டியை மாற்றாமல் அப்படியே வைத்துள்ளது. இந்த ஆண்டு விலைவாசி ஏற்றம் ஒன்றிலிருந்து இரண்டு சதத்துக்குள் இருக்கும் என்று Bank of Canada மதிப்பிடுகின்றது. பொதுவில் இது நல்ல செய்தியே. அமெரிக்காவில் வீட்டு விற்பனை, குறிப்பாக புதிய வீடுகளின் விற்பனை குறைந்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் கனடாவில் வீட்டு விற்பனை 17சதம் 2007 ஜனவரியில் கூடியிருக்கின்றது. வங்கிகளுக்கு இடையே நிலவும் போட்டி, வாடிக்கையாளர்களுக்கு நன்மையைப் பயக்கின்றது. Bank of Canada வீட்டு வட்டி வீதத்தை சமீபத்தில் குறைக்கவில்லை என்றாலும், வங்கிகள் நிரந்தர மாறாத வட்டி வீதத்தைச் சற்றே குறைத்துள்ளன. மாறும் வட்டியில் வீட்டுக்கடனை வைத்திருப்பவர்களுக்கு, இதனால் எந்த மாற்றமும் ஏற்படாது. புதிதாக வீடு வாங்குபவர்களும், வீட்டுக்கடனைப் புதுப்பிப்பவர்களுக்கும் இந்த வட்டிக்குறைப்பு நிலையான வட்டி வீதத்தைத் தேர்ந்தெடுக்கும் போது நன்மை பயக்கக்கூடியதாக அமையும்.

வங்கிகளுக்கு இடையே வீட்டு கடனுக்கு இருக்கும் போட்டி ஒரு புறமிருக்க, வீட்டுக் கடனை காப்புறுதி (Insurance) செய்யும் CMHC மற்றும் GENWORTH க்கு இடையிலும் போட்டி அதிகரிப்பதாகவே தோன்றுகின்றது. இதனால் மீண்டும் வாடிக்கையாளர்களுக்கே பயன். இப்போது இதன் பயனாக வங்கிகள் 40வருட காலம் வரை வீட்டுக்கடனைத் திருப்பிச் செலுத்த சம்மதிக்கின்றன. ஓரளவு குறைந்த வருமானம் உள்ளோரும், நியாயமான முறையில் வீட்டுக்கடன் பெற இந்த 40 வருட கால கடன் திரும்பச் செலுத்துதல் (Amortization) வழிவகுகின்றது. ஏற்கனவே எளிமைப்படுத்தப்பட்டுள்ள வேறு சில வீட்டுக்கடன்களையும் இங்கே குறிப்பிடலாம். நல்ல கடன் சரிதமும், நிரந்தர வேலையும் உள்ளவர்கள் சொந்த பணமே போடாமல் 100 சதவீதம் கடனில் வீடு வாங்க இப்போது முடியும். சுயதொழில் புரிவோருக்கும், வீட்டுக்கடன் கொடுப்பதில் உள்ள சில கட்டுப்பாடுகளை வங்கிகள் தளர்த்தியுள்ளன.

பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி ஒரேநாளில் சீனப் பங்குச் சந்தையில் விலைகள் ஒன்பது சதம் சரிந்தன. இதன் பாதிப்பு உலகெங்கிலும் தெரிந்தது. ரொறொன்ரோ பங்குச்சந்தையிலும் மார்ச் முதல் வாரத்தில் விலைகள் வெகுவாகச் சரிந்தன. ஓரளவு மீண்டது. மீண்டும் சரிந்தது. பல காரணங்கள் சொல்லப்படுகின்றது. எல்லாவற்றிற்கும் ஆரம்பமாகச் சொல்லப்படுவது சீனப் பங்குச் சந்தையின் சரிவுதான்.

இந்த ஆர்.ஆர்.எஸ்.பி காலத்தில் பங்குச் சந்தையிலோ, மியுச்சுவல் பண்ட்ஸிலோ முதல்முறையாக பணத்தையும் போட்டவர்களுக்கு இந்தச் சரிவு அதிர்ச்சியைத் தரலாம். பழக்கப்பட்டவர்களுக்கு பெரிய அதிர்ச்சி ஒன்றும் இருக்காது. விலைகள் ஏறுவதும், இறங்குவதும் பங்குச் சந்தையில் சகஜமே. நீண்ட கால சேமிப்பிற்கு பங்கு சந்தை சிறந்த இடம். 1950 களிலிருந்து கிடைக்கும் புள்ளி விவரங்களின்படி எந்த பத்து ஆண்டை எடுத்துக்கொண்டாலும், பங்குச் சந்தையில் விலைகள் கூடியே வந்துள்ளன. ஆகக் குறுகிய காலத்துக்கு என பங்குச் சந்தையில் முதலீடு செய்பவர்களுக்கு இலாபமும் வரலாம். நட்டமும் வரலாம். ஆனால் திட்டமிட்டு, நீண்ட காலத்துக்கு என பங்குச் சந்தையில் முதலீடு செய்பவர்களுக்கு, கடந்த கால புள்ளி விவரங்களின் அடிப்படையில், நியாயமான இலாபம் கிடைத்தே வந்துள்ளதாக தெரியவருகின்றது.

கடைசியாக வரி இல்லாமல் வாழ்வா? வாழ்வில் நிச்சயம் இரண்டு என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள். ஒன்று மரணம், மற்றது வரி.

கனடிய வருமான வரி படிவத்தைத் தாக்கல் செய்ய கடைசி திகதி ஏப்பரல் 30 ஏற்கனவே பாதிக்கு மேற்பட்டவர் வருமான வரி படிவத்தைச் சமர்ப்பித்து விட்டதாக கனடா ரெவின்யு ஏஜன்சி தெரிவிக்கின்றது. 2006க்கான வரியைக் குறைக்க ஆர்.ஆர்.எஸ். பியில் முதலீடு செய்யக் கடைசி நாள் மார்ச் 1. முடிந்து போய்விட்டது. மார்ச் 1 அடித்த பனிப்புயலின் காரணமாகச் சிலரால் இந்த வருடம் ஆர். ஆர். எஸ் பியில் பணம் போட முடியாமல் போய்விட்டது. உண்மை! அதற்குத் தான் எதையும் கடைசி நிமிடத்துக்கு தள்ளிவைக்கக் கூடாது என்பது. பலபேர் கடன்வங்கி ஆர்.ஆர். எஸ். பியில் முதலீடு செய்திருக்கிறார்கள். இதுசரியா, திட்டமிட்டுச் செய்திருந்தால் இது சரிதான். ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கி இந்தக் கட்டுரையை இப்போதைக்கு முடிப்போம்.

ஒருவர் ஆர்.ஆர்.எஸ். பியில் 15,000 முதலீடு செய்கிறார். அதற்கு 6 சதவீதத்தில் கடன்வாங்கியிருக்கிறார். அவருடைய வரிவீதம் 40சதவீதம். அந்தப் பணத்தை மியுச்சுவல் பண்ட்ஸ்ஸில் முதலீடு செய்திருக்கிறார். வருவாய் வருடத்துக்கு 7.5சதவீதம் என்று கொள்வோம். மேலும் ஆர்.ஆர்.எஸ். பி எடுப்பதனால் வரும் வரி ரிபண்ட்டுக்கான காசோலையைச் செலவழிக்காமல் கடனிலேயே கட்டி விடுகிறார். மேலும் ஆர்.ஆர்.எஸ் பி கடனை இரண்டு வருடங்களில் அடைத்து விடுகிறார். அவருடைய நிதியம் எப்படி இருக்கும் என்று உங்களுக்கு சற்றே விவரிக்கிறேன்.

| | | |
|---|---|---|
| $15000 க்கு கிடைத்த வரி ரிபண்ட் | $6,000 | |
| கடனில் திருப்பிச் செலுத்தியது | $6,000 | |
| இந்தக் கடனுக்கு ஆன வட்டி | $2067.66 | |
| கடனுக்குக் கட்டும் மாதத்தவணை | $178.05 | |
| ஆர்.ஆர்.எஸ்.பி யில் செலுத்திய பணம் | $15,000 | |
| 10 ஆண்டுகளில் ஆர்.ஆர்.எஸ்.பியின் வளர்ச்சி | | $30915.47 |
| 20 ஆண்டுகளில் ஆர்.ஆர்.எஸ்.பியின் வளர்ச்சி | | $63717.76 |
| 25 ஆண்டுகளில் ஆர்.ஆர்.எஸ்.பியின் வளர்ச்சி | | $91475.00 |

பாருங்கள்!
15,000 கடன் வாங்கினீர்கள். கனடா ரெவின்யு ஏஜென்சி உங்களுக்குக் கொடுத்த வரி ரிண்ட்டோ 6,000 ஆகக் கடனுக்கு வட்டியுடன் நீங்கள் திருப்பிச் செலுத்தியது. 11067.66 மட்டும் இந்தப் பணம் பத்து ஆண்டுகளில் ஏறத்தாழ மூன்று மடங்காகவும், 20 ஆண்டுகளில் ஆறு மடங்காகவும் வளர்த்திருக்கின்றது. இல்லையா?

**பெரி. முத்துராமன்**



# உலகின் அதி கூடிய பணக்காரர்கள்

ஒவ்வொரு ஆண்டும் அதிகூடிய பணக்காரர்களை வரிசைப்படுத்தி வெளியிட்டு வருவது FORBES சஞ்சிகை. 2003ஆம் ஆண்டில் 476 பில்லியெனர்ஸ் இந்த உலகில் வாழ்ந்தனர். 2005 இல் இந்த எண்ணிக்கை 671 ஆக அதிகரித்தது. இந்த வருடம், 2007இல் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. அதாவது இந்த எண்ணிக்கை 946 ஆக அதிகரித்துள்ளது. இவ்வருடமும் பில்லியெனர்ஸ் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பவர் அமெரிக்காவைச் சேர்ந்த பில் கேற்ஸ் (Bil Gates) ஆவர். இவ்வருட பெறுமதி 56 Billion us$ (1,000 Million = 1 Billion). அதாவது 56,000 Million $ பெறுமதி உடையவர். கடந்த வருடத்தை விட மொத்த பெறுமதி அதிகரித்துள்ளது. இதற்கு உலகின் பொருளாதார வளர்ச்சியே காரணமாகும். அதாவது பங்குச்சந்தையின் வளர்ச்சியமும் ஒரு காரணமாகலாம்.

கடந்த வருடம் உலகின் மூன்றாவது பெரிய பணக்காரராக இருந்த இங்கிலாந்தில் வசிக்கும் இந்திய குடிமகன், Luxmy Mittel இவ்வருடம் ஐந்தாவது இடத்திற்கு இறக்கப்பட்டுள்ளார். இவரின் மொத்த பெறுமதி $32 பில்லியன் US$ ஆகும். இருந்தும் இவரின் பெறுமதி கடந்த வருடத்தை விட அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் ஒரு தமிழர் மட்டுமே இந்தப்பட்டியலில் இடம்பெற்றிருந்தார். ஆனால் இவ்வருடம் பல தமிழர்கள் இப்பட்டியலை அலங்கரித்துள்ளார்கள். மலேசியாவை சேர்ந்த 68 வயதான ஆனந்த கிருஷ்ணன் மற்றும் Sun TV உரிமையாளர் கலாநிதி மாறனும் (347 இடத்தில்)அடங்குவர். கலாநிதி மாறனின் சொத்தின் பெறுமதி 2.6 பில்லியன் US$. இவ்வருடம் ஆசியாவிலே அதிகூடிய பில்லியனெர்ஸ் இந்தியாவிலேயே வசிக்கின்றனர். கடந்த 20 வருடங்களாக ஆசியாவில் முதலிடத்திலிருந்த ஜப்பான் தனது ஸ்தானத்தை இந்த வருடம் இழந்துள்ளது.

| மொத்தபில்லியெனர்ஸ் | ஆண்டு |
|---|---|
| 946 | 2007 |
| 671 | 2005 |
| 476 | 2003 |

முதல் பத்து பணக்காரர்களின் பட்டியல்

| Name | Networth | Contry | Source |
|---|---|---|---|
| Bill Gates | US$56B | Unitedstates | Microsoft |
| Warren Buffet | US$52B | Unitedstates | Berkshire heathawa |
| Carols Slim Helv | US$49B | Mexico | Telmex, Telcel |
| Ingvar Kamprad | US$33B | Sweeden | Ikea |
| Luxmy Mittel | US$32B | UK/India | Metal Steel Co. |
| Sheldon Adelson | US$26.5% | USA | CasVegas sands |
| Bernard Arnault | US$26B | France | Louis Vuitton |
| Amancio Ortego | US$24B | Spain | Inditex Group |
| Lika shing | US$23B | Hong kong | Cheng Kong Holdings |
| David Thomson | US$22B | Canada | Thomson Corp |

| Country | #of Billionaire |
|---|---|
| USA | 371 |
| Russia | 61 |
| Germany | 55 |
| Canada | 46 |
| India | 36 |
| UK | 34 |

| Country | #of Billionaire |
|---|---|
| Japan | 27 |
| Turky | 27 |
| Hong kong | 17 |
| Brazil | 16 |
| China | 15 |


விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்

Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# பெண் விடுதலைக்குத் தடையா? யார் சொன்னார்?

மனிதஉரிமைப் பிரகடனத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான உரிமைகளே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பெண்களைப் பொறுத்தவரையில் ஒரு மனித உயிருக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் ஏதேதோ காரணங்களால் தடைசெய்யப்படுகின்றன. இவற்றை அகத்தடை இயற்கைத் தடை, புறத்தடை, பிறரால் வரும் தடை, அன்புத் தடை, ஆதிக்கத்தடை எனப் பல்வேறு வகைப்படுத்தலாம்.

**அகத்தடை** - இப்படி இப்படித்தான் வாழ வேண்டும் எனப் பெற்றோரால் அல்லது பெரியோர்களால் ஆணாதிக்க காலத்தில் எழுதப்பட்டு பரம்பரை பரம்பரையாகக் கட்டிக்காத்து கடத்தப்படும் காலத்துக்கு ஒவ்வாத பழக்கவழக்கங்கள் ஆகும். இவையும் தன்விருப்பு வெறுப்புகளைத் தியாகம் செய்து அடிமையாதலைக் கொண்டுவரும். பெண்களே பெண்களுக்குத் தடையாக இருக்கிறார்கள் எனும் ஆண்களின் குற்றச்சாட்டிற்கு இந்த வார்ப்பெண்ணங்களே காரணங்களாகும்.

**இயற்கைத்தடை** - சில விருப்பு வெறுப்புகளை நடைமுறைப்படுத்த இயலாமல் இயற்கைச் சூழல் தடைசெய்தல். உதாரணமாக, கர்ப்பமாதல், குழந்தை வளர்த்தல், குடும்பத்தில் ஒருவருக்கு நோய் வருதல் போன்றவையாகும்.

**ஒரு பெண் எழுத்தாளர் முடங்குகிறார்.**

இசையால் எழுந்த ஓசை நயத்துடன்
இயல்பாய் எழுந்த சொற்களும் சேர
நயமாய் வருவது நற்காவியமாம்.

கதையொடு கட்டுரை கவிதை எழுதியும்
சுவைதரு சொற்பொழிவாற்றி வென்றும்
தகைசால் ஆசிரியப் பணியும் தொடர்கால்.

காவிய மெழுதக் காதல் கொண்டு
கற்பனை உலகின் வர்ணனை சேர்த்து
கருவும் தெரிந்து இயலும் வகுத்தபின்.

காகிதமடுக்கி பேனாஎடுத்து
கதிரையிலிருந்து பிள்ளையார் சுழியிட
குமட்டிவந்தது சகுனப்பிழையாய்.

ஓடிச்சென்று வாந்தியெடுத்து
ஒருநாளும் வாராத சத்தினன்னோ?
ஓஹோ நாட்கள் தள்ளிப் போயின.

கர்ப்பம் வந்து சிறகை ஒடிக்க
கண்களில் நிராசை ஏமாற்றம்
கன்னிமை இழப்பு தாங்கொணாக் கவலை.

முகர்தலில் கூர்மை, பிரட்டு, சுரப்பு
கொடுப்புள் நெல்லி, விளாங்காய் அடைப்பு
மனச்சோர்வுடனே எதிர்காலம் திகிலுலாய்.

காலமும் செல்ல கனதியும் கூடக்
கொடியிடை பருக்க கனதனம் பெருக்க
அணிநடைவண்ணம் அன்னநடையாக,

இடைஇறங்கி இடைஞ்சல் கொடுக்க
வயிற்றுப் பாரம் பின்னே சாய்க்க
பேசுங்கண்களில் பயத்தின் சாடை.

புதிய காவியத்தில் புலனைந்தும் செல்ல
பேனா முனையும் தூங்கிவழிந்தது
பெருமூச்சொன்று பிறந்து மடிந்தது.

காலச்சுழலில் சுமப்பும் வளர்ப்பும்
காவியத் துறைக்கே விடுப்பு தந்தது
கற்பனை வடிக்கும் திறனும் திணறுமே.

இது எழுதாளர்களுக்கு மட்டுமல்ல தொழில் புரிவோர், விளையாட்டு வீராங்கனைகள், வரப்போகும் ஒருவிழாவில் முதன்மைபங்குவகிக்க இருப்பவர், பரீட்சை எடுக்க இருப்பவர்க்கும் ஆகும்.

**ஆதிக்கத்தடை** - இது எங்குமே காணப்படும் தந்தை, சகோதரர், கணவன், மகன் என்போரின் அதிகாரத்துக்கு உட்படல் வேண்டுமென சாஸ்த்திரங்கள் கூறுவது. இவை காலங் கடந்தவை. காலமாற்றத்தில் மாறவேண்டியவை.

**அன்புத்தடை** - அன்பினாலேயே கட்டிப்போட்டு பெண்ணின் மன ஆவல்களை அடக்குதல். "நீர் தனியப் போறதென்றால் எனக்குப் பயம். வருமட்டும் நான் செத்துப் பிழைக்க வேண்டும்" போன்றவை.

**அது ஒரு பொற்கூடு**

சிட்டு குருவியாய் சினேகிதியருடன்
சிரித்து மகிழ்ந்து ஆடிப்பாடி அலுவல்
செய்தும், கடைத்தெரு கோவில் சுற்றியும்
மட்டுப்பட்ட சுதந்திரம் துய்த்தவள்
மணவாழ்வொன்றில் தாலி ஏறக்
கணவன் இதயம் மாறிப் புக்களள்.
ஆதிக்கம் என்பது அதிகாரத் தாலா
அதீத அன்பின் சாகசத் தாலும்
அடக்குமுறை அரங்கில் ஏறும்.
ஆச்சிபடுக்கையில், அம்மா சொன்னாள்
அழைத்துச் செல்ல வருவேன் என்றார்.
ஆயத்தளாகி வழிமேல் விழிவைக்க
'ஆருயிர் நண்பன் எதிர்கொள மறந்தேன்
நேரஞ் செல்ல நெருடும் என நெஞ்சு'
ஆரத் தழுவிக் குழைந்து, முத்தி
அன்பே உறவின் அருமை அறிவேன்
ஆயினுமென் நான் மடையன்.

கலங்கிய கண்ணீர் துடைத்தான்
கட்டுக்கடங்காப் பரிவுடன் முத்தினான்
'கடும்பசி, உண்போம் பின்னர் செல்வோம்'
மலங்கிய மனைவியைத் தேற்றுவானாம்
மாய்மாலம் செய்து அழுது அரற்றி
மழையும் வேறு, இருண்டு விட்டது
இலங்கும் கண்களில் இலச்சினை குத்தி
என் செய கண்ணே என்றே ஏங்கினான்
இதயம் நெகிழ்ப் பாட்டியை மறந்தாள்
கலங்குதலின்றிக் கணவன் மார்பில்
கரங்களின் சிறையில் கட்டுண்டாள்.
கட்டில் பதிலாய் கதைசொல களைத்தாள்.

ஹனி செல்லம் கையுறை எங்கே
குஞ்சு டார்லிங் உடுப்பு அழுத்தியதா?
தித்திக்கும் பணியாரம் தெவிட்டாது
உம்மைப்போல
"அலுவலகப் பணிசெய்தால் அழகு கெட்டுவிடும்
பூப்போல மேனி புண்பட்டுப் போகுமே!
என் தேவதைக்கு இன்னுமோர் எஜமானா?
வேண்டிய நகை இழைப்பேன் வேண்டாமே"
பதறியணைப்பான் பல்லுரைகள் பகர்ந்திடுவான்.

சாகசம் அறியாள் கட்டுண்டாள் அன்புக்கு
காப்பும், கொலுசும் கைவிலங்கு கால்விலங்கா?
மூக்குத்தி வைரத்தில் மூக்கணாங் கயிறா?
கன்னி வயதில் வாராத ஆபத்து
தனிச் சென்றால் தான் வருமா? இப்போ?
சிந்தித்தாள்!

தன்னுறவைப் பார்க்க; தன் நட்பைப் பேணி
வாய்விட்டுச் சிரித்து, விரும்பும் விடயங்கள்
பேசிப் பரிமாறி, கூடிக் கும்மாளம்
இடுவது எக்காலம்?
தன்ருசிக்கு நாக்கேங்கும்
உடையின் நிறத்துக்கு உளம் ஏங்கும்
கவிதை கதை எழுத கை ஏங்கும்
வீட்டலுவல் செயக்கூட வேலையாள்
வீண்நேரம் போவதாய் உணர்ந்தாலும்
தட்டந்தனியே தவிக்கும் புறாவாய் - அவன்
அரட்டை அடித்து வருமட்டும் காத்திருப்பாள்.

தனியுடைமையா? பொருளாதார
அடிமையாக்கலா?
சிந்திக்கத் தெரிந்தாலும்
விடுபடமுடியாத அன்புச் சிறையே
அடித்தாலும் எதிர்க்கலாம் ஆனால்....
ஆம்! ஒரு பொற்கூடு
ஆத்மாவை இழந்த ஆர்வமிகு புறாவுக்கு
அது ஒரு பொற்கூடு.

இது மனைவி: தன்னுடைய ஆட்களைச் சந்திப்பது பிடிக்காமலும், உத்தியோகம் பார்க்கச் செல்வதை விரும்பாமலும், அவளின் ஆசாபாசங்களை அடக்கி தன்னுடைய ருசிக்கேற்ப சமைப்பிப்பது, தனக்குப் பிடித்த நிறத்தில் உடுக்க வைப்பது ஆகியன எடுத்துக்காட்டுகளாகும்.

**முடிவுரை**

இப்படி எத்தனையோ வகையில் தடைகள் வரும். அதனால் ஒரு பெண் தன் இதயத்தையே கொன்று விடுகிறாள். அதற்குத் தியாகமெனப் பெயர் சூட்டப்பட்டு சரித்திரமாக்கி விடுவார்கள். கால மாற்றத்துக்குகேற்ப பெண்ணின் கடமைகளும் மாற்றமடைதல் வேண்டும். வார்ப்பெண்ணங்களை முதுகில் சுமந்து கூனிக்குறுகாமல் கணவருக்கும் ஆண் குழந்தைகளுக்கும் வழிகாட்டியும் வழிக்குக் கொண்டுவந்தும் இல்லறம் நன்கு சோபிக்க, இன்பமும் அன்பும் தவழ உரிமைகளுக்காக கடமைகளைத் தவறவிடாமலும், கடமைகளுக்காக உரிமைகளைத் தியாகம் செய்யாமலும் ஒரு நடுநிலைமை பேணி இல்வாழ்வைச் செவ்வன கொண்டு செல்லுதல் பெண்களின் உரிமையன்றோ!



**- காங்கயி -**


தருமஸ்தாபனங்களுக்கு நன்கொடை வழங்கல்

**நன்கொடையாளர்களுக்குத் தகவல்கள்.**

கனேடிய வருவாய் திணைக்களம் (CRA) **தரும ஸ்தாபனங்களுக்கு நன்கொடை வழங்கல் : நன்கொடையாளர்களுக்குத் தகவல்கள்** என்ற பெயரில் ஓர் இணையதளத்தை ஆரம்பித்துள்ளது. இவ் இணையத்தளத்தில் பின்வரும் தகவல்களைப் பெறலாம்:

- பதிவு செய்யப்பட்ட தரும ஸ்தாபனங்களை தேடிக் கண்டுபிடித்தல்.
- தரும ஸ்தாபனங்களுக்குரிய செயற்பாட்டு விதிமுறைகள்.
- நன்கொடை பற்றுச்சீட்டுக்கள் வரிசேமிப்புக்கள் பற்றியது
- ஏமாற்று நிதிசேகரிப்பு நடவடிக்கைகளில் இருந்து உங்களைப் பாதுகாத்தல்.

குறித்த ஒரு தருமஸ்தாபனம் வரி தள்ளுபடி பெறத்தக்க பற்றுச்சீட்டுக்களை வழங்கும் அதிகாரமுடையதா என்பதை அறியலாம். அத்துடன் பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனங்களின் தனிப்பட்ட நிதிநிலைமைகள் பற்றியும் அறியலாம்.

தருமஸ்தாபனங்களுக்கு நன்கொடை வழங்கும் போது அந்த தருமஸ்தாபனங்கள் பற்றி தகவல்கள் தெரிந்திருங்கள்.
பார்வையிடுங்கள் **cra.gc.ca/charities.**

கனேடிய வருவாய் திணைக்களம் வருமான வரி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தரும ஸ்தாபனங்களின் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துகின்றது. இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தருமஸ்தாபனங்களுக்கு நன்கொடை வழங்குவதன் மூலம் செலுத்த வேண்டிய வருமான வரி நிலுவையிலிருந்து தள்ளுபடி பெறலாம்.

Canada Revenue Agency | Agence du revenu du Canada



# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# ஆனந்தம் 3 - சத்குரு



சத்குரு ஜக்கி வாசுதேவ்

தற்போது நீங்கள் ஆனந்தமாக இருக்கவேண்டுமென்றால், அதற்கென பல நிபந்தனைகளை உருவாக்கியிருக்கிறீர் கள். உங்கள் மனைவி ஏதோவொரு விதமாக இருக்கவேண்டும். உங்கள் கணவன் வேறுவிதமாக அவரை மாற்றிக்கொள்ள வேண்டும். உங்கள் மாமியார் இருக்கவே கூடாது, உலகமே மாறவேண்டும். இவ்வாறாக ஏதேதோ நிபந்தனைகளை விதித்துக் கொள்கிறீர்கள். நீங்கள் ஆனந்தமாக இருக்க வேண்டுமெனில், உலகமே நீங்கள் நினைத்தவிதமாக நடக்க வேண்டும். அப்படித்தானே? உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு இருக்கும் ஒரேயொரு பிரச்சினை இதுதான். உங்கள் வாழ்க்கை நீங்கள் நினைத்தவிதமாக நடக்கவில்லை. அது ஒன்றுதானே பிரச்சினை? வேறு ஏதேனும் பிரச்சினை இருக்கிறதா? உங்களுடைய எல்லா துன்பத்திற்கும் அடிப்படையான காரணம் என்ன வென்றால், நான் நினைத்தவிதமாக வாழ்க்கை நடக்கவில்லையே! அனைத்துமே நீங்கள் நினைத்தவாறே நடக்கமுடியுமா? அப்படியில்லை தானே? நீங்கள் நினைக்கும்விதத்தில் முழு உலகமும் ஒருபோதும் நடக்காது. நடக்கவும் முடியாது. இது எப்போதுமே இப்படித்தான் இருக்கப் போகிறது. எவ்வளவுதான் விஞ்ஞானமும் மற்றும் தொழில்நுட்பமும் வளர்ந்தாலும், எதுவுமே நூறு சதவிகிதம் நாம் நினைப்பது போல் இருக்காது. நாம் அதனை ஓரளவுதான் கட்டுப்படுத்த முடியும். நீங்கள் விரும்பியபடி இது நூறு சதவீதம் நடக்கவில்லை, அவ்வாறு இருப்பது நல்லதுதான். ஏனென்றால் நீங்கள் விரும்பியபடி உலகம் நிகழ்ந்தால் நான் எங்கே செல்வது? எனவே நீங்கள் விரும்பியபடியே மிகச் சரியாக உலகமும் நடக்காது. உங்கள் குடும்பமும் நீங்கள் விரும்பியபடி நடக்காது. ஏன்? இவ்வுலகில் ஒரேயொரு மனிதன், வேறு ஒரேயொரு மனிதன் கூட நீங்கள் விரும்பியபடி நடக்கமாட்டான். யாராவது நீங்கள் நினைத்தவாறே நடந்து கொள்கிறார்களா? உங்களது நாய் கூட, அது என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர் களோ அதனைச் செய்யாது, இல்லையா? ஒருவரும் நீங்கள் நினைத்தவாறு நடந்துகொள்ள மாட்டார்கள். வெளிச் சூழ்நிலை ஒருபோதும் நீங்கள் நினைத்தவாறு நடக்காது. ஆனால், உங்களது உள்நிலைப் பரிமாணமாவது நீங்கள் நினைத்தவாறு நடக்க வேண்டும், இல்லையா? எனவே, அடிப்படையில் நாம் அந்தப் பரி-மாணத்தை ஆராய்வோம். உங்களை மிகவும் ஆனந்தமாகவும், அமைதியாகவும் உங்களுக்குள் நிலைப்படுத்தும் ஒரு முழுமையான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் எங்களிடம் உள்ளது. இந்த தொழில் நுட்பத்தின் மூலம் ஒருவர், அவரது உள்நிலையை அவர் விரும்பியபடியே உருவாக்க முடியும். நீங்கள் நூறுசதவீதம் கட்டுப்பாட்டினைக் கொண்டுவர முடிகிற ஒரே இடம், உங்கள் உள்நிலைதான். வெளிச்சூழல் முழுமையாக உங்கள் கட்டுப்பாட்டில் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் உள் உலகம், உள்நிலை நீங்கள் நினைக்கின்றவிதமாக நடக்க முடியும். உங்கள் உள்நிலை நீங்கள் நினைத்தவிதமாக எப்பொழுது நடக்கிறதோ, அப்பொழுது ஆனந்தம்தான் இருக்கமுடியும். வேறு எதுவும் இருக்க முடியாது. ஆனந்தம் மட்டுமே அங்கு இருக்க முடியும். நிறைய மனிதர்கள் ஆனந்தம் என்றால் இன்பம் என்றே தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். ஆனால் ஆனந்தமும் இன்பமும் ஒன்றல்ல. நீங்கள் இன்பத்தை என்றுமே நிலையாக இருத்தி வைத்திருக்க முடியாது. அது விரைவாகவே வீழ்கிறது. இன்பம், என்றுமே எதையோ அல்லது எவரையோ சார்ந்தே இருக்கிறது. ஆனந்தம் என்றுமே எதையும் சார்ந்திருப்பதில்லை. அது உங்கள் இயற்கையான தன்மை, அதற்கு வெளித்தூண்டுதல் எதுவும் தேவை யில்லை ஆனந்தம் என்பது உங்களுக்குள் உணர்வது எனப் புரிந்துகொண்டால், தற்போதைய உங்கள் செயல்கள் யாவும், ஆனந்தம் பெறுவதற்கான குழந்தைத்தனமான முயற்சிகள்தான் என்பதை அறிவீர்கள். நீங்கள் ஆனந்தமாக இருந்தால் அமைதி யாக இருக்கிறீர்கள். நீங்கள் அதனுள் இருக்கிறீர்கள், அவ்வளவே. பேரானந்த நிலை என்பது நீங்கள் வெளியிலிருந்து சேகரிப்பது அல்ல. அது உங்களுள் ஆழமாகத் தோண்டிக் கண்டுபிடிக்க வேண்டிய ஒன்று. இது எப்படியெனில், தண்ணீருக்காக மழை வரும்போது, மழைத்துளி வாயில் விழக் காத்திராமல், ஒரு கிணற்றைத் தோண்டுவது போல. ஏனென்றால், மழை வெறுமனே ஒருமணி நேரமோ அல்லது இரண்டு மணி நேரமோ மட்டுமே பெய்யும். கிணறு அப்படியல்ல. எனவே உண்மையான பேரானந்தம் என்று நாம் குறிப்பிடுவது இதைத்தான். நீங்கள் உங்களது உள்ளிருக்கும் கிணற்றில் இருந்தே தண்ணீர் எடுப்பது. அது என்றுமே உங்களுக்காக இருக்கும். மழை வரும்பொழுது, மழைத்துளிகளுக்காக வாயினைத் திறந்து காத்திருப்பதுபோல அல்ல. அனைத்து நேரங்களிலும் உங்களுக்கு தண்ணீர் இருக்கிறது. அதுதான் பேரானந்தம்.

*ஈஷா யோக மையம் - வெள்ளியங்கிரி*
*மலைச்சாரல், கோயம்புத்தூர்*
*E-mail: yogacenter@ishafoundation.org*
*website: www.ishafoundation.org or www.ishayoga.org*
சத்குருவால் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியையால்
எதிர்வரும் April 25, 07 தொடக்கம் May 01, 07
வரை யோகா வகுப்புக்கள் நடத்தப்படும்.
ரொறொன்ரோவில் தொடர்புகளுக்கு: 416.699.0951



# தப்புக்கு உரியவர் தப்பி ஓடினால் நிரபராதியின் கதி என்ன?

## வாகன விபத்துக்களில் காப்புறுதி நட்டஈடு தொடர் - 6




இங்கு காட்டப்பட்டு இருக்கும் மாதிரி வரை படத்தினை ஒருமுறை கூர்ந்து பாருங்கள்? சந்தி ஒன்றில் இரு வாகனங்களுக்கு இடையே நடந்த விபத்து எப்படி? என்பது இவ்வரைபடத்தின் மூலம் சித்தரிக்கப்பட்டுள்ளது.

(A) என்ற ஒரு வாகனம் நேராக சந்தி ஒன்றினை கடந்து வந்து கொண்டிருக்கும் நேரம், இச்சந்தியில் இடது பக்கம் திரும்பும் (B) என்பவர் நேராக வந்து கொண்டிருக்கும் (A) என்பவரின் பாதையினை கடக்கும் போது (A) என்பவரின் பாதையில் இவ் இருவாகனங்களுக்கும் இடையில் மோதல் நடந்து விட்டது.

இப்படித்தான் இவ்விபத்து நடந்தது. அதாவது சந்தி ஒன்றில் நேரே வந்து கொண்டிருந்த வாகனத்துக்கும் இடது பக்கம் திரும்பிய வாகனம் ஒன்றுக்கும் இடையில் நடந்த மோதல் இப்படியான விபத்துகள் பொதுவாக சந்திகளில் பலரும் எதிர்கொள்ளும் விபத்துகள் ஆகும். பலரும் இத்தகைய அனுபவங்களை எதிர்கொண்டிருக்கலாம். இப்படி ஒரு விபத்தில் சரி? பிழை என்பது எந்த பக்கம் என்பதனை தீர்மானிக்கும் மாகாண வாகன காப்புறுதி சட்டத்தின் பிரிவுகள் (Accident Fault Determination Rules & Regulation Ontario Automobile Insurance Law Act)

இவ்விபத்து பற்றி ஆங்கிலத்தில் பின்வருமாறு வரைவிலக்கணப்படுகின்றது.

***• If automobile (B) turns into the path of automobile (A), the driver of automobile (A) is not at fault and the driver of automobile (B) is 100% percent at fault for the incident.***

இச்சட்டப்படி நேரே வந்து கொண்டிருந்த (A) என்ற வாகனத்தில் எதுவிதமான தப்பும் இல்லை. இடது பக்கம் திரும்பிய (B) என்பவரின் 100% வீதமான தப்பு என்பது இங்கு சட்ட பிரிவுகளில் குறிப்பிடப்படுவதால் இச்சட்டங்களின் பிரகாரம் காப்புறுதி கம்பனிகள் நட்டஈடு வழங்கலை தீர்மானிக்கின்றன.

ரொறொன்ரோவில் உள்ள சில சந்திப்புகளில் மட்டும் நகரசபை அரசினால் இருபத்தி நான்கு மணி நேரமும் இயங்கி கொண்டிருக்கும் கமரா பொருத்தப்பட்டுள்ளது.

இங்கு நடந்த விபத்தில் (A) என்பவர் நேரே வந்து கொண்டிருந்த நேரம் சிவப்பு நிறசைகையில் வீதி ஒழுங்கு சட்டத்தினை மீறி வந்த நேரம் இடது பக்கம் திரும்பிய (B) என்பவருடன் மோதல் நடந்தது என்பது நிரூபிக்கப்படும் போது (B) என்பவர் தப்பி கொள்ளும் சந்தர்ப்பம் உண்டு. இது தவிர சில நேரங்களில் (B) என்பவர் நிரபராதியாக இருந்தும் இப்படியான நிலைமைகளில் நிரபராதி என்பதனை நிரூபிக்க முடியாது குற்றவாளி ஆவது தவிர்க்க முடியாத ஒன்று ஆகி விடுவது பலருக்கும் பல சந்தர்ப்பங்களிலும் நடந்து இருக்கும்.

வாகனத்துள் சேர்ந்து வராத வெளிநபர் எவராவது நேரே விபத்தினை கண்ட காட்சிகளாக இருந்து உண்மை நிரூபிக்கப்படும் போது இச்சட்டத்தின் நிலைமை மாறி (B) என்பவருக்கு சாதகமாக வரலாம் என இருந்தும், இந்நிலைமை பூரணமாக நிரூபிக்கப்படும் வரை (A) என்பவர் பூரண நிரபராதி, (B) என்பவர் முழுமையான குற்றவாளி என்பதே முடிவு ஆகும்.

சரி! இங்கும் ஒரு சிக்கல் நடந்து விட்டது என கருத்தில் கொள்வோம். அதாவது 100% தப்பினை உருவாக்கிய (B) என்பவர் இந்த இடத்தில் இருந்து அடையாளம் தெரியாது தப்பி ஓடி விட்டார் என்றால் நிரபராதியாக நின்று வாகனங்களின் பாதிப்புகளுக்கு உள்ளான (A) என்பவரின் நிலைமையில் அவரது காப்புறுதி கம்பனி நட்ட ஈட்டினை எப்படி கையாளும்?

• விபத்துக்களின் போது நிறுத்தாமல் தப்பி ஓடினால் ஒரு குற்றம்.
(Failing to remain at scene of collision)
விபத்தினை சட்டரீதியாக பொலிசாருக்கு அறிவித்த தவறினால் இன்னொரு குற்றம்.
(Failing to report a Collision to Police)
இதற்குரிய தண்டணை பணம் + ஏராளமான புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் இன்னொரு புறம்.
ஆனால் இங்கு (B) என்பவர் பிடிபடாமல் தப்பி ஓடி விட்டால் யாரும் செய்யமுடியாது.

அடிப்படை வாகன காப்புறுதி ஒப்பந்தங்களில் குறிப்பிடப்படும் செலவில்லாத காப்புறுதி நிவாரணம் (No cost Insurance Claims) என சொல்லப்படும் "No fault direct porperty compensation coverage" என்னும் பிரிவில் இருந்து இவ் (A) என்பவர் விபத்தில் நிரபராதியாக நின்று தமது வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நட்டஈடு பெற முடியாது. இப்பிரிவில் இருந்து நட்ட ஈடு பெற வேண்டுமானால் விபத்தில் தப்புக்கு உரியவரும் வாகன காப்புறுதி உள்ளவராக இருத்தல் வேண்டும். ஏனெனில் நட்ட ஈடு வழங்கலின் பின்பு இரு காப்புறுதி கம்பனிகளும், தத்தமது வாடிக்கையாளரின் விபத்தில் ஏற்பட்ட தப்புகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட நட்டஈடு கொடுப்பனவுகளை கை மாறிக்கொள்ளும்.

இங்கு விபத்தில் தப்பி ஓடியவர் வாகன காப்புறுதி இல்லாதவராகவே கருதப்படும். இத்தகைய நிலையில் பாதிக்கப்பட்ட (A) என்பவருக்கு உள்ள அடிப்படை காப்புறுதியில் மேலதிகமாக உள்ள இருபிரிவுகளில் ஒன்றில் மட்டும் நட்ட ஈடு பெறலாம். இவ்இரு பிரிவுகளும் பின்வருமாறு.

1. Uninsured & Identified (வாகன காப்புறுதி இல்லாதவர் ஆனால் அடையாளம் காணப்பட்டவர்)
2. Uninsured & Unidentified (வாகன காப்புறுதியும் இல்லாதவர் அடையாளமும் உறுதி படுத்தப்படாதவர்.)

இங்கு இவ்விபத்தில் (A) என்பவர் நிரபராதி என்பது நிரூபிக்கப்பட்டு, தப்புக்கு உரிய (B) என்ற வாகனத்தின் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் மட்டும் (A) என்பவர் தமது வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு $25,000 டொலர் வரை தமது காப்புறுதி கம்பனியில் இருந்து செலவில்லாத இலவச காப்புறுதி நிவாரணமாக நட்டஈடு பெறலாம். பின்னர் இவரது காப்புறுதி கம்பனி (B) என்பவரிடம் இருந்து சட்டரீதியாக அறவிட்டு கொள்ளும்.

ஆனால் (B) என்பவரின் அடையாளம் தெரியாவிட்டால் நிரபராதியாக உள்ள (A) என்பவர் செலவில்லாத காப்புறுதி நிவாரணம் என குறிப்பிடப்படும் (Uninsured & Identified) பிரிவில் இருந்து நட்டஈடு பெறமுடியாது.

சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

இதன் காரணமாக வாகனம் செலுத்தும் ஒவ்வொருவரும் வீதிகளில் பிரச்சினைகள் வரும்போது காருடன் ஏனைய வாகனங்களின் இலக்கங்களை உடனடியாக குறிப்பிடுவதற்காக ஒரு பேனையும், கடதாசியும் தயாராக என்றும் வைத்திருக்க வேண்டும் என அறிவுரை வழங்குவது வழமையாகும்.

ஒரு பேனாவும், கடதாசியும் சிறுவிடயம். சில நேரம் இது இல்லாது $25,000 டொலர் வரை இழப்பீடுகளை இலவசமாக பெற முடியாது தமது பணத்தில் செலுத்த வேண்டிய நிலையாக போய்விடும். தற்போது கைத்தொலைபேசியில் கமரா சிலரிடம் இருக்கும். காலதாமதம் இல்லாமல் படம் பிடிப்பது இன்னும் சிறந்தது.

அதாவது விபத்து ஒன்றில் தப்புக்கு உரியவரின் அடையாளம் சமர்ப்பிக்கப்படாத நிலையில் நிரபராதி ஒருவர் செலவில்லாத இலவச நட்டஈடு நிவாரணத்தில் எந்த சந்தர்ப்பத்தில் தமது வாகனத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இழப்பீடுகளை பெறமுடியாது.

மேலதிகமாக உள்ள "Collision" பிரிவில் இருந்து நட்டஈடு தமது வாகனத்தின் இழப்புகளுக்கு விபத்தில் நிரபராதியாக இருந்தும் நட்டஈடு பெற வேண்டிய நிலைமை ஏற்படும். இவ் மேலதிக பிரிவும் இல்லையேல் சொந்த பணத்தில் இருந்தே வாகனத்தின் திருத்த செலவினை ஈடு செய்ய வேண்டி வரும்.




ஏக்கர் நிலம் வருமானத்துடன்
Beach, Cottage
வீடும் வியாபாரமும் Business Zoning
Metal Recycling
Auto Body Shop
Yunk Yard 2 Acres land with
House and Basesemt
$175,000
Auto Body shop
House with Basement
Yunk Yard
10 acres
பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு
வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham (Sales Rep)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666
MORNINGSIDE & ELLESMERE - Big lot House with bsmt apt. FOR LEASE . 5 parking





வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.
பரம்ஜி - 416.230.1107
PARAM GNANASWARAN
Broker
HOME LIFE GTA REALTY INC. Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
416.321.6969
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
905.712.2666
* INDEPENDENTLY OWNED AND OPERATED
paramg@gmail.com

# உலகக்கோப்பை கிரிக்கெட் விழா: கோலாகல ஆரம்பம் 209

ஆரம்பிச்சிட்டாங்கய்யா......ஆரம்பிச்சிட்டாங்கய்யா...

ஒன்பதாவது உலககிண்ணப் போட்டிகளில், 51 ஆட்டங்கள், 49 நாட்களுக்கு தொடர்ந்து நடைெபறவுள்ளது. அசத்தப்போவது யாரு? மேற்கு இந்திய தீவுகளில் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் வாண வேடிக்கைகள் மற்றும் கண்கவர் கலை நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாகத் துவங்கியது. இதில் முன்னணி அணிகளைச் சேர்ந்த வீரர்கள் அணிவகுத்து வந்தனர்.

கடந்த சில மாதங்களாக கிரிக்கெட் ரசிகர்களால் மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட ஒன்பதாவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் ஆரம்ப விழா மார்ச் 12, மேற்கு இந்திய தீவுகளில் துவங்கியது. ஜமேக்காவில் உள்ள டிரல்வே என்ற மைதானத்தில் ஆரம்ப விழா நடந்தது. கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. இதில் சுமார் இரண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலந்து கொண்டு ஆடிப்பாடி ரசிகர்களை மகிழ்வித்தனர்.

**இசை நிகழ்ச்சிகளும் நடந்தன.**

மேற்கு இந்தியத் தீவுகளின் பாரம்பரிய உடை அணிந்து கலைஞர்கள் நடனம் ஆடிய படி மைதானத்தை வலம் வந்தனர். இதனைக் கண்ட ரசிகர்கள் ஆரவாரம் செய்தும், கரவொலி செய்தும் கலைஞர்களை உற்சாகப்படுத்தினர். பாரம்பரிய இசை மற்றும் மேற்கத்திய இசை ஆகியவற்றுடன் இந்திப்பட பாடலும் நிகழ்ச்சியில் இடம்பெற்றது. இதில் கலைநிகழ்ச்சி மட்டும் சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேல் நடைபெற்றது.

## எஸ். கணேஷ்

இதனைத் தொடர்ந்து போட்டியில் பங்கேற்கும் 16 அணி வீரர்களும் அணி வகுத்து வந்தனர். நடப்பு சாம்பியனான அவுஸ்திரேலிய அணி வீரர்கள் அணித்தலைவர் ரிக்கி பாண்டிங் தலைமையில் அணிவகுத்து வந்தனர். அவர்களைத் தொடர்ந்து மற்ற அணி வீரர்கள் வந்தனர். அவர்களை வண்ண உடை அணிந்த மேற்கு இந்தியதீவு நாட்டு குழந்தைகள் மைதானத்திற்குள் அழைத்து வந்தனர். 5.45 மணிக்கு மேற்கு இந்தியதீவு முன்னாள் மாவீரரான சோபர்ஸ் உலகக் கோப்பை போட்டி துவங்குவதாக முறைப்படி அறிவித்தார். இதற்கு அடுத்தபடியாக வாணவேடிக்கை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விண்ணையே அதிரவைக்கும் அளவில் வாணவேடிக்கை நிகழ்ச்சி நடைபெற்றது. 30 நிமிட நேரத்திற்கு தொடர்ந்து அதிர் வேட்டுகள் முழங்கி கொண்டே இருந்தன. வானம் முழுவதும் வண்ணமயமாக காட்சி அளித்தது. மேற்கு இந்திய தீவுகள் அணியின் அணித்தலைவரான பிரையன் லாரா வீரர்களுக்கான உறுதிமொழியை படித்தார். அனைத்து வீரர்களும் அதை திரும்ப படித்து உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். தொடக்க விழா நிகழ்ச்சியை காண 10 ஆயிரம் பேர் மைதானத்தில் திரண்டு இருந்தனர்.

இந்நிலையில் ஒன்பதாவது உலக்கோப்பை போட்டியின் முதல் ஆட்டத்தில் போட்டியை நடத்தும் வெஸ்ட் இன்டீஸ் மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதின. வெஸ்ட் இன்டீஸ் இவ்வாட்டத்தில் வெற்றி பெற்றது. 1975, 1979 ஆம் ஆண்டுகளில் உலகக்கோப்பையை வென்ற வெஸ்ட் இன்டீஸ் அணியும், 1992 ஆம் ஆண்டு சாம்பியன் பாகிஸ்தான் அணியும் ஆடியது குறிப்பிடத்தக்கது.

**நிறவெறியின் ஆதிக்கம்**

கிரிக்கெட் விளையாட்டில் ரெஸ்ட் போட்டிகளை ரசிக்கும் ரசிகர்கள், ஒருதின போட்டியை ரசிக்கும் என இருபிரிவு உண்டு.

இன்று ஒருதின போட்டிகள் எந்த அளவு மக்களால் ஆர்வமாக ரசிக்கப்படுகிறதோ அதை விட அதிகமான அளவு கிரிக்கெட் வளர்ச்சியின் ஆரம்பகால கட்டத்தில் ரெஸ்ட் போட்டிகளுக்கு அமோக வரவேற்பு இருந்தது. இன்று நம்மை இருக்கையின் நுனியில் அமர்ந்து போட்டியை பார்க்கவைக்கும் ஒரு தின போட்டிக்கு சூத்திரதாரி ரெஸ்ற் கிரிக்கெட் போட்டிதான் என்றால் நம்மால் நம்பமுடிகிறதா!

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரெஸ்ற் கிரிக்கெட் போட்டியில் பங்குபெறும் அந்தஸ்தை இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே பெற்றிருந்தன. இம்மூன்று நாடுகளும் சேர்ந்து முதன் முறையாக 1912 ஆம் ஆண்டில் முத்தரப்பு ரெஸ்ற் போட்டித் தொடரை நடத்தின. இந்த போட்டித் தொடரை மக்கள் மிகவும் வரவேற்பார்கள் என்று எண்ணிய இம்மூன்று நாடுகளுக்கும் ஏமாற்றத்தையே பரிசாக அளித்தனர் இங்கிலாந்து மக்கள். இந்த போட்டியைக் காண மக்கள் ஆர்வம் காட்டாமல் மைதானத்துக்கு வருவதை தவிர்த்து வந்தனர்.

இரு நாடுகளுக்கும் இடையே ரெஸ்ற் போட்டி நடைெபற்றால் முடிவு தெரிய அதிகபட்சமாக ஐந்து நாட்கள் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்நிலையில் மூன்று நாடுகளுக்கிடையே நடைபெற்ற ரெஸ்ற் போட்டியை காண மக்கள் விரும்பவில்லை. இந்தப் போட்டியில் சாம்பியன் பட்டம் பெறப்போவது யார் என்று பார்க்க ஒரு மாதத்துக்கும் மேலாக காத்திருக்க மக்கள் விரும்பவில்லை. இதனையடுத்து ரெஸ்ற் தொடரின் புகழ் மக்கள் மத்தியில் மங்கத் தொடங்கியது. போட்டியின் முடிவை மக்கள் விரைவாக எதிர்பார்த்தனர். ஒரு போட்டியில் முடிவை தெரிந்து கொள்ள அதிக நேரத்தை செலவு செய்ய ரசிகர்கள் தயாராக இல்லை. விளைவு ஒரு தின போட்டிக்கான கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டது.

1960 களில் இங்கிலாந்து உள்ள நாலு முக்கிய கவுண்டி கிரிக்கெட் அணிகள் பரிசோதனை முயற்சியாக குறைந்த பட்ச ஓவர்கள் கொண்ட போட்டியை நடத்தின. போட்டியின் முடிவும் ஒரே நாளில் கிடைத்தது. ரசிகர்களிடையேயும் பெருத்த வரவேற்பைப் பெற்றது. இதனால் 1963, 1969 ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்தில் உள்ள கவுண்டி அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 'கில்லெட் கோப்பை போட்டி', 'சண்டே லீக் கோப்பை' ஆகியவை கிரிக்கெட் ரசிகர்கள், மக்கள் மத்தியிலும் பிரபலமானது, வரவேற்பும் பெற்றது.

ரெஸ்ற் மற்றும் ஒரு தின கிரிக்கெட் போட்டியில் எத்தனை ஓவர்கள் வைத்துக் கொள்வது, ஓவருக்கு எத்தனை பந்துகள் வீசுவது என்று கிரிக்கெட் விளையாடும் ஒவ்வொரு நாடுகளும் விதவிதமாக முடிவுகள் எடுத்து விளையாடிய சுவையான சம்பவங்களும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1899 ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணி ஓவருக்கு ஐந்து பந்துகள் வீசுவதை வழக்கமாக கொண்டிருந்தது. (நாட்டுக்கு நாடு இது மாறுபடுமாம்) காலத்தின் வேகத்தால், அவுஸ்திரேலியா அணி ஒருபடி முன்னோக்கிச் சென்று 1922 இல் ஓவருக்கு எட்டு பந்துகள் என வழக்கப்படுத்தியது. (கொஞ்சம் நினைத்து பாருங் கள் ஓவருக்கு எட்டுபந்துகள் என்பதை). இதனால் ரெஸ்ற் கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீச பந்துவீச்சாளர்கள் மிகவும் சிரமப்பட்டனர், சலிப்படைந்தனர். அதன்பின்பு ஒரு வழியாக கிரிக்கெட் விளையாடும் அனைத்து நாடுகளுக்கிடையே ஏற்பட்ட கருத்தொற்றுமையின் விளைவாக ஓவருக்கு ஆறு பந்துகள், 60 ஓவர்கள் என்றும் முடிவு செய்யப்பட்டது.

கிரிக்கெட் வரலாற்றின் கறுப்பு பக்கங்கள் என்று கருதப்படுவது 1970 லிருந்து 1991 வரையிலான ஆண்டுகள்தான் என்றால் மிகையாகாது. என்ன வியப்பாக இருக்கிறதா! ஆம், நிறவெறியின் உச்சத்துக்கு சென்ற தென் ஆபிரிக்கா அணிக்கு கிடைத்த சவுக்கடியின் விளைவாக 21 ஆண்டுகள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விளையாட தடை பெற்றது அந்நாடு.

இந்தத் தடையை சர்வதே கிரிக்கெட் கூட்டமைப்பின் மூலமாக அனைத்து நாடுகளும் அமல்படுத்தின. (இன்டர்நேஷனல் கிரிக்கெட் கான்ஃபரென்ஸ் என்று அப்போது அழைக்கப்பட்டது இப்போதுள்ள ஐ.சி.சி.) தென் ஆபிரிக்காவில் நிறவெறி தலைவிரித்தாடிக்கொண்டிருந்த நேரம் அது. 1968 இல் தென் ஆபிரிக்க அணி இங்கிலாந்தில் அந்நாட்டுடன் கிரிக்கெட் விளையாட வந்தது. அப்போது இங்கிலாந்து அணியில் 'பேசில் டி ஆலிவைரா' என்ற வெள்ளையர் அல்லாத வீரர் சேர்க்கப்பட்டிருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த தென் ஆபிரிக்க கிரிக்கெட் வாரியம் இங்கிலாந்து நாட்டுடன் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்காமல் தன்நாட்டு வீரர்களை நாட்டுக்கே திரும்பி அழைத்துக்கொண்டது. தென் ஆபிரிக்க கிரிக்கெட் வாரியத்தின் இத்தகைய நிறவெறி பிடித்த செய்கையைக் கண்டு கிரிக்கெட் விளையாடும் நாடுகளும் ஐ.சி.சியும் கொதிப்படைந்தன.

1970 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஐ.சி.சி உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தென் ஆபிரிக்கா கிரிக்கெட் வாரியத்தின் செய்கைக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டு, வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் அனேக உறுப்பினர்கள் தென் ஆபிரிக்காவின் செய்கைக்கு எதிர்ப்பாகவே வாக்களித்தால், 21 ஆண்டுகள் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டில் பங்கேற்கத் தடைவிதித்தது ஐ.சி.சி.

**கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது**

நிஜ வாழ்க்கையில் ஒருவரின் நடை, உடை, புறத்தோற்றத்தை வைத்து சிலர் தவறாக எடை போட்டுவிடுகின்றனர். அவ்வாறு எடை போட்டவர் கள், சில நேரங்களில் மிகச்சரியாக மூக்குடைப்பு பெறுவதும் உண்டு. கிரிக்கெட் விளையாட்டிலும் அதுபோல வலிமை குறைந்த அணிகளையும், எளிதான புள்ளி விவரங்களையும் உதாசீனப் படுத்திய ஜாம்பவான் அணிகளுக்கு, சிறிய அணிகள் அதிர்ச்சி வைத்தியம் அளித்த நிகழ்வுகள் கிரிக்கெட்டில் வரலாற்றில் நினைவில் நின்ற பக்கங்களாகும். 'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' என்பதைப் போல சிறிய தீவுகளிலிருந்து வெளிவந்த அணியாக இருந்தாலும், உலகத் தரத்துக்கு இணையான பந்துவீச்சு, பேட்டிங் ஆகியவைகளால் சில நேரங்களில் உலகக் சாம்பியன் அணிகளுக்கு இணையாகவும் மதிக்கப் பட்டன. அவ்வாறு சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்திய அணிகளில் முதலிடம் பெறுவது 'ரொடீஷியா' எனச் சொல்லப்படும் சிம்பாப்வே அணி தான்!.

சிம்பாப்வேயின் வரலாற்றை உற்று நோக்கினால், அடிமை வாசத்தை 1980 ஆம் ஆண்டுவரை அனுபவித்த சுவடு தெரியும். தற்போது கிரிக்கெட் விளையாடும் ஆசிய நாடுகள், ஆபிரிக்க நாடுகள் ஆகியவை தங்கள் நாட்டு சுதந்திர தின வெள்ளிவிழாவை கொண்டாடிய போதுதான் சிம்பாப்வே நாடு சுதந்திரம் பெற்றது. ஆம், 1980 ஆண்டு ஏப்ரல் மாதம் அதிகாரபூர்வமாக சுதந்திரம் பெற்றது.

பிரிட்டிஷ் காலனித்துவ ஆதிக்கத்தில் அவதிப்பட்ட சிம்பாப்வே 1950 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் ரொடீஷியா என்று அழைக்கப்பட்டது. அதன் பின்னர் சுதந்திரத்தின் தீவிர வேட்கையால் ரொடீஷியா வடக்கு ரொடீஷியா, தெற்கு ரொடீஷியா என்று பிரிக்கப்பட்டது.

இதில் தற்போது வடக்கு ரொடீஷியா சாம்பியா நாடு என்றும், தெற்கு ரொடீஷியா சிம்பாப்வே என்றும் சுதந்திரம் பெற்ற பின்பு அதிகாரபூர்வமாக அழைக்கப்பட்டது. கிரிக்கெட் விளையாட்டைப் பொறுத்தவரையில் சிம்பாப்வே அணி, தென் ஆபிரிக்காவின் சுவடுகளை பின்பற்றியே கிரிக்கெட்டை வளர்த்து வந்துள்ளது வரலாற்றில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்காவில் 1910 லிருந்து நடத்தப்படும் உள்நாட்டு கிரிக்கெட் போட்டியான 'குர்ரே கோப்பையில்' பலமுறை போட்டியிட்டு கோப்பைகளை வென்றுள்ளது சிம்பாப்வே அணி. அந்நாட்டின் கிரிக்கெட் ஆர்வத்துக்கு இதுவே மிகச் சிறப்பான சான்று. ரொடீஷியா எனும் பெயர் இருந்த போதே




அந்த நாடு ரொடீஷியா கிரிக்கெட் யூனியன் என்று ஆபிரிக்க நாடுகள் வட்டாரத்தில் சிறப்பான அணியாக திகழ்ந்து வந்துள்ளது. 1980 ஆம் ஆண்டு அந்நாடு சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் தொடங்கிய பின்பு, பல சர்வதேச நாடுகளுடன் கிரிக்கெட் போட்டியை அதிகாரமற்ற முறையில் விளையாடியது. தனது அபார திறமையால் 1981ஆம் ஆண்டு ஜுலை 21ஆம் திகதி ஐ.சி.சியின் துணை உறுப்பினராக தேர்வு பெற்றது சிம்பாப்பே. அதன்பின் நடத்தப்பட்ட ஐ.சி.சி தேர்வுப்போட்டியில் வெற்றி பெற்று 1983ஆம் ஆண்டு உலகக் கோப்பையில் முதன்முதலாக அதிகாரபூர்வமாக பங்கேற்றது சிம்பாப்பே அணி. தொடக்கத்தையே ஆணித்தரமாக பதிவு செய்தது. ஆம், முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி மற்ற அணிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தது சிம்பாப்பே. முதல் உலகக் கோப்பையில் ஒரு வெற்றியுடன் தேக்கநிலை அடைந்தாலும், அடுத்தடுத்து சர்வதேச போட்டிகளில் திறமையை பதிவு செய்யத் தவறவில்லை.

1990 களில் சிம்பாப்வே அணியில் பல திறமை வாய்ந்த வீரர்கள் உருவாகத் தொடங்கினார்கள்.

1992ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியில் இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் சிம்பாப்வே அணி 134 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதன்மிக எளிதான இலக்குதானே என்று களம் இறங்கிய இங்கிலாந்து அணியை தனது அபாரமான பீல்டிங், பந்துவீச்சால் 125 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்து அனைவரது புருவத்தையும் உயரச் செய்தது. இப்போட்டியில் எடோ பிரான்டஸ் 21 ஓட்டங்கள் கொடுத்து நாலு முக்கிய விக்கெட்டுகளை வீழ்த்தி வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தார்.

1999 ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியில் கென்யா, இந்தியா, தென் ஆபிரிக்கா அணிகளை முதல் சுற்றில் அபாரமாக வீழ்த்தி அரையிறுதி வரை சென்றது. 1992 ஆம் ஆண்டு ஐ.சி.சி யின் நிரந்தர உறுப்பினராக அங்கீகரிக்கப்பட்டு ரெஸ்ற் விளையாடும் அந்தஸ்தைப் பெற்றது சிம்பாப்வே. இந்தியாவுக்கு எதிரான முதல் ரெஸ்ற் போட்டியில் அபாரமாக சமன் செய்து தன் அங்கீகாரத்தை நியாயப்படுத்தியது. 2003ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியிலும் நமீபியா, இங்கிலாந்து ஆகிய அணிகளைத் தோற்கடித்து சூப்பர் சிக்ஸ் வரை முன்னேறியது. ஆனால் ஒரு தின போட்டியில் வலிமையை நிருபித்த சிம்பாப்வே அணி ரெஸ்ற் போட்டிகளில் அவ்வளவாக ஜொலிக்கவில்லை.

காலப்போக்கில் சிம்பாப்பே நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பம், அணியில் அரசியல் தலையீடு ஆகிய பிரச்சினைகளால் அணியிலிருந்து பல முக்கிய வீரர்களான பிராண்டஸ், ஃபிளவர் சகோதரர்கள், ஹீத் ஸ்ட்ரீக் ஆகியோர் விலகினர். அதன்பின்பு, அணித்தலைவர் பதவிக்கு வந்த டைபுவாலும், அணியில் ஏற்படும் அரசியல் தலையீட்டாலும் பிரச்சினைகளை சமாளிக்க முடியாததால் அவரும் அணியிலிருந்து விலகி நமீபியா அணிக்குச் சென்றார். இந்நிலையில் ஒன்பதாவது உலகக் கோப்பை போட்டியில் அனுபவம் இல்லாத வீரர்களை கொண்ட சிம்பாப்வே அணி உயிர்த்தெழுமா, அல்லது லீக் சுற்றோடு பயணத்தை முடித்துக் கொள்ளுமா?




ஞானம்ஸ் ஸ்ரூடியோ

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12

*Professional Photographer* - கதிர்

**416-750-8118**

2381 Eglinton Ave., E.,

Kennedy / Eglinton, Scarborough



**வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?**

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

***Kanthan: 416.291.3997***







• No Spraying • No Smelling • No Moving

# முதியவர்களிற்கான வீட்டுத்தேவை

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 247

கனடாவில் இன்று 65வயதிற்கு மேற்பட்ட மக்கள் ஐந்து மில்லியனிற்கு (5 Million) மேல் வாழ்கின்றார்கள். 2041ஆம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கை பத்து மில்லியனைத்தாண்டும் என்று புள்ளிவிவர ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளார்கள். இன்றைய காலகட்டத்தில் 65வயதிற்கு மேற்பட்டவர்களில் 12% இற்கு மேற்பட்ட மக்கள் வயதானவர்களிற்குரிய ஏதாவதொரு இடத்தில் வாழ்கின்றனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை என்னத்தைக் கூறுகின்றது என்பதே இன்றைய வினா? எதிர்காலத்தில், மேற்கு நாடுகளில் குறிப்பாக கனடாவில் முதியவர்களின் தேவையைக் கருதி அதற்கேற்ப வதிவிடங்கள் அமைக்கவேண்டிய தேவை ஏற்படுகின்றது. இந்த புள்ளிவிவரம் பொதுவாகக் கனடிய மக்களிற்குரியதாகக் காணப்படுகின்றது. எனவே இந்தப்புள்ளி விவரங்களிலிருந்து நாம், என்னத்தை கற்றுக்கொள்ளலாம். இதிலிருந்து கனடிய தமிழ் முதியவர்களிற்கு என்ன செய்யமுடியும்? இதுவே எமக்கு முன்னுள்ள இன்றைய முக்கிய பிரச்சினை?

கனடாவில் குறிப்பாக ரொறொன்ரோ பெரும்பாகத்தில் (GTA) தமிழ்மக்களை நோக்கமாக வைத்து ஏதாவது வயதானவர்களிற்கான தனிக்கட்டிட அமைப்புகள் உண்டா என்ற கேள்விக்குரிய பதில், என்னுடைய அறிவைப்பொறுத்தவரை இல்லை என்றே தோன்றுகின்றது. கனடாவில் ஏறக்குறைய 300,000 தமிழர்கள் வாழ்வதாக கொண்டால், இவர்களில் எவ்வளவு பேர் 65 வயதைத் தாண்டி வாழ்கின்றனர். கனடிய வயதானவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 15% எனக்கொண்டால் அதேவீதத்தில் தமிழர்களின் எண்ணிக்கை 45,000 ஐத் தாண்டும். இவர்களில் 12% ஏதாவது ஒரு முதியவர் இல்லத்தில் அல்லது பிறர் ஒருவருடைய உதவியுடன் வாழ்வதாக கொண்டால் இவர்களின் எண்ணிக்கை 5,000 விட சற்று அதிகமாகும். இதன் 50% ஐக் கொண்டால் 2,500 ஆகும்.

இவர்களின் நிலைமை என்ன? இவர்களில் எத்தனை வீதமானர்களிற்கு மொழிப்பிரச்சினை, தனிமைப்பிரச்சினை, உணவுப்பிரச்சினை, வேறுவிதமான பிரச்சினைகள் இருக்கலாம்? இதனைப்பற்றி சிந்திக்கவேண்டும்.? இது ஒரு தொலை நோக்கம். நமக்கும் தேவைப்படலாம். இந்தத் தேவைகளுடன் கூடிய முதியோர் இல்லம் நிச்சயம் தேவை என்பது எனது அபிப்பிராயம்.

மேலே குறிப்பிட்ட எண்ணிக்கை, ஒவ்வொரு ஆண்டும் கடக்க அதிகரிக்குமே தவிர குறையப் போவதில்லை. இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞான வளர்ச்சியினால் மக்கள் வாழும் காலம் அதிகரிக்கின்றது. எனவே இப்படியான தேவைகளும் அதிகரிக்கும். உதாரணமாக சீனச் சமூகத்திலும் மற்றைய சமூகத்திலும் இப்படியான நோக்கங்களிற்காக கட்டிடங்கள் கட்டப்பட்டு விற்கப்படுகின்றன, அல்லது வாடகைக்கு விடப்படுகின்றன. முக்கியமாக 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் அல்லது வயதானவர்களிற்கு உதவுவதே முக்கிய நோக்கமாகும்.



உதாரணமாக Middle Field & Finch சந்திப்பில் கட்டப்பட்டு இருக்கும் Yee Hong Centre மற்றும் Kennedy & Mcnicoll சந்திப்பில் கட்டப்பட்டு கொண்டு இருக்கும் Mon Shong Centre ஐ கொள்ளலாம். Middle Field & Finch இல் ஏற்கனவே இரண்டு கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த இடத்தில் மூன்றாவது கட்டிடமும் (112 Units) கட்டுவதற்குரிய ஆயத்தங்கள் நடை பெறுகின்றன. இவற்றை முன்மாதிரியாகக் கொண்டு வயதான தமிழ்மக்களிற்குரிய கட்டிடங்கள் கட்டுவதற்கு நம்மவர்கள் முன்வரவேண்டும். ஆரம்பத்தில் ஒருவரின் முயற்சி போதாததாக இருக்கலாம். பலரின் கூட்டுமுயற்சி முன்மாதிரியாக இருக்கலாம்.

*நாளையைப்பற்றி இன்றே சிந்திப்போம். நாளைய நாளை இன்றே தொடுவோம்.*

## 2007ஆம் ஆண்டின் வீட்டின் விலை

2007ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களிலும் வீட்டின் விலையிலும் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. பொருளாதார எதிர்வு கூறுபவர்களின் கருத்துப்படி, வீட்டின் விலையில் இந்த வருடம் இறக்கம் ஏற்படலாம் எனக்கூறப்பட்ட போதும் இதுவரை அந்த நிலைமை தெரியவில்லை. அத்துடன் இந்த மாதத்தில் கனடிய வட்டிவீதமும் ஒருவிதமாற்றமும் இல்லாமல் உள்ளமாதிரி அதாவது 4.25% ஆகவே காணப்படுகின்றது. இருந்தும், ஐந்து வருடத்திற்குரிய Closed Mortgage 5% இற்கு எடுக்க கூடியதாக உள்ளது. அத்துடன் ஈட்டுக்கடனை திருப்பி கொடுக்கும் காலம் 40 வருடங்களாக அதிகரிக்கப் பட்டுள்ளது. உதாரணமாக $300,000 இற்கு ஈட்டுக்கடனை எடுத்தால் 5% வட்டியில் 25 வருட திருப்பி கொடுக்கும் காலத்தில் மாதக்கொடுப்பனவு $1745 ஆகும். இதேதொகையினை 40 வருடத்தில் திருப்பிக் கொடுக்கும் காலமாக இருந்தால் மாதக்கொடுப்பனவு $1436. அதாவது மாதாந்த கொடுப்பனவு $300 இனால் குறைக்கின்றது. இன்றைய வாங்குனரில் ஒரு பகுதியினர் இவ்வாறு நீண்ட கால ஈட்டுக்கடனை Amortization எடுக்கிறார்கள். (இது சரியா/தவறா இது வாதத்திற்குரியது) இதனால் வீடு வாங்குபவர்கள் வீட்டுச் சந்தையில் தொடர்ந்தும் இருப்பார்கள்.

எனவே வீட்டின் விலையில் சீரானதாகவே காணப்படலாம். கடந்த வருடமும் (2006) முதல் 6 மாதங்களும் வீட்டுச்சந்தை ஆரோக்கியமானதாகவே காணப்பட்டது. இதனால் எதிர்வரும் மாதங்களில் வீட்டின் விலையிலும், விற்பனையிலும் அதிகளவு இறக்கத்தை எதிர்பார்க்கமுடியாது போலத்தான் தோன்றுகின்றது.




இப்பொழுது இரு இடங்களில்,

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

*Independently owned & operated

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**

145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

***Space Available for Lease / Sale***

***Optical Business, Physiotherapy, Take-out Restaurant, Travel Agency, Florist , Printing & SPA***

**Nantha Aiyadurai**
Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
OTTAWA>>>><<<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# இன்பத்தமிழ்

மஞ்சள் ஆழியில்
நீச்சலடித்து
ஆதவனை முழுங்கி
முழுநிலவு முகத்துடன்
வெளியேறியவளே.

ஒடி இடை நெழிய
வாழைத்தண்டுக் கால்கள்
அசைந்துவர
பப்பாசிப் பவளமுலை
திமிறிக் குலுங்க
உச்சியில் ஊறிய அருவிச்சுடர்
நெற்றியால்
பெருக்கெடுத்து ஓடுகின்றதே.

முள்ளந்தண்டுக் கால்வாயால்
வழிந்தோடி
மூவேந்தரின்
ஏரிகளை நிறைத்து
மதிலை உடைத்துப் பாய்ந்து
மக்களுக்கும் உயிர் கொடுத்து
காட்டு நிலத்திற்கும்
கட்டாந் தரைக்கும்
வளம் சேர்க்கின்றாயே.

காவேரி வைகை
கொற்கை ஆறுகளின்
வண்டல் மணலில்
சங்கம் வளர்த்து
தேன்
சொரியும் மலைகளாக்கித்
தேசமெங்கும்
தெளித்துவிட்டாய்
என் அமுதே!



முத்துராஜா

# திருக்கொக்கட்டிச்சோலை

பண்: திருத்தாண்டகம்

உண்ணேரா வித்தலைவர் ஒப்பில் ராதார்
உயிர்களைத்தங் கருணையினால் ஓங்கு விப்பார்
கண்ணானார் மணியானார் கருத்து மானார்
கதியானார் விதியானார் மதியு மானார்
மண்ணோரும் விண்ணோரும் மகிழ்ந்து வந்து
வணங்கவரும் வரங்களினை வழங்கி நிற்பார்
தண்ணாரும் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

பெண்ணையிடப் பாகத்திற் பேணி வைத்தார்
பித்தனெனத் தோழரிடம் பட்டம் பெற்றார்
கண்ணுதலார் கலைமதியார் கங்கை கொண்டார்
கானகத்தார் ஏவியமா கரியைக் கொன்றார்
மண்முனையிற் பெண்ணரசு மலரச் செய்தார்
மாகோனின் தொண்டுகளுக் கருளி நின்றார்
தண்ணிழலார் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

மலர்மேனி மலைமாதை மணம்பு ரிந்தார்
மாமுனியைத் தென்னாட்டில் வாழ வைத்தார்
கலைமேவு கால்தூக்கி முனிவர் காணக்
கருதரிய நடமாடிக் களித்து நின்றார்
உலகோம்பும் தனியொருவர் உயிர்கட் கெல்லாம்
உறுதுணைவர் உலகநாச் சியாரு வந்த
தலமாய கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

திமிர்வாதச் செருக்கசுரர் தீங்கை யெல்லாம்
தீர்த்தமரர் வாழ்க்கையினைச் சிறக்கச் செய்தார்
அமைவான நல்வாழ்வை எமக்கும் ஈவார்
அதிகாரம் இருந்தாலும் அடங்கிப் போவார்
கமழ்கின்ற மலர்ச்சோலைக் குயில்கள் பாடும்
கலைமான்கள் அதைக்மேட்டுக் களிப்பில் ஆடும்
தமிழ்வாழும் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

தோன்றாதே புலனைந்தும் தொடர்ந்தி யற்றும்
தோல்லைகளைத் துடைத்தின்பம் துலங்க வைப்பார்
ஈன்றாளின் மேலான இதய முள்ளார்
ஏழைகளுக்(கு) இரங்குவதில் இணையில் லாதார்
ஊன்றியுயர் வரலாற்றின் உச்சி யுள்ளார்
ஊலகநாச் சியாரன்பில் ஊறி யுள்ளார்
சான்றோர்வாழ் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

சுனாமியினால் இலங்கையினைத் தோற்று வித்தார்
தூயதிரு நீற்றுநெறி தொடர விட்டார்
மனோவலிமை மிகுமன்னன் வணங்கா நெஞ்சன்
மாவீரன் இராவணர்க்கு வரம ளித்தார்
அனாதைகளாய் நாமலைந்தே அனுப விக்கும்
அல்லல்கண்டும் அருளாதே யமர்வா ராமோ
சனாதனவூர் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

அழித்தாளக் கயமுகனை ஆற்றல் மிக்க
ஆனைமுகப் பெருமானை அழைத்து வந்தார்
அழத்தாங்க வொண்ணாது குழந்தை யாருக்(கு)
அம்மையுடன் எழுந்தருளிப் பால்கொ டுத்தார்
விழித்துள்ள தமிழீழ மக்கட் கான
விடிவுகாட் டாதுவீற் றிருப்பா ராமோ
தழைத்தோங்கு கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

உளவறிவார் ஒட்டிநின்றே உழைப்பாற் காணும்
உயர்வதனால் அழுக்காறு கொண்டு ழல்வார்
அளவறியார் யாவுந்தம் ஆட்சி யின்கீழ்
அமைந்துவிட வேண்டுமென அங்க லாய்ப்பார்
பிளவறியாத் தமிழரையும் பிரிய வைப்பார்
பிறங்குதமிழ் ஈழத்தைப் பெறுதல் வேண்டித்
தளர்வறியாக் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

அரவமதை மாலையென அணிந்து கொண்டார்
அழகுமயில் ஆரணங்கை மணந்து கொண்டார்
குருவடிவில் எழுந்தருளிக் கூர்த்த அன்பர்
குறைபோக்கி ஆண்டருளும் கொள்கை யுள்ளார்
பருவமழை தவறாது வளஞ்செய் கின்ற
பழம்பெருமை சான்றகிழக் கிலங்கை தன்னில்
தரணிபுகழ் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

ஊழ்வெல்லல் அரிதென்ப துணர்ந்தி டாதே
உலகத்தார் பலகற்றும் மீண்டும் மீண்டும்
ஆழ்கின்றார் தீவினையில் அறிவில் லாதார்
அறிந்தவர்சொல் அனுபவமும் கேட்டி டாதார்
வாழ்வென்றால் சைவநெறி வகுத்த வாழ்வே
வாழ்வென்னும் மாசற்றார் வாழ்வ தாலே
தாழ்வில்லாக் கொக்கட்டிச் சோலை தங்கும்
தான்தோன்றி யார்தம்மைச் சார்ந்துய் வாமே.

*கொக்கட்டிச்சோலை கிழக்கு இலங்கையில் உள்ள மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ளது. கிழக்கு இலங்கையில் மண்முனை இராச்சியத்தை ஆண்ட உலகநாச்சியாரால் (கி.பி. 4ஆம் நூற்றாண்டு) இவ்வாலயம் அமைக்கப்பட்டதென மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது.*

கவிஞர் வி. கந்தவனம்



# இறையருளின் போஷனை

இறைவன் எப்போதும் என்பக்கம் தான், எனும் பேருண்மையை உணர்ந்து, இன்று அதை நான் முழுமனதாய் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆண்டவனின் அன்பு, அருள், தயை போன்ற நற்குணங்கள் யாவும் உனக்குள் உதித்து உனது ஜீவியத்தின் சகல துறைகளிலும் மலர்ந்து ஒளி வீசுவதற்குச் சாட்சியாயிரு. ஈஸ்வரனின் சுவாசமும், அழகும் உனக்குள்ளே ஊடுருவியிருப்பதற்குச் சாட்சியாக வாழ். உனது வாழ்நாள் ஒவ்வொன்றின் சகல கணங்களிலும் சர்வேஸ்வரன் நடமாடி, உனது யாத்திரையின் திசையினை நிர்ணயித்து, உன்னை உருவாக்கி, எப்போதும் உன்னைப் பிரயாமல் உனக்கு வழிகாட்டியாய் இருப்பதற்குச் சாட்சியாயிரு.

ஆம்! அன்பான வாசகரே! இறைவனுக்கு சாட்சியாக இருக்க நீ என்ன செய்ய வேண்டுமென்பது உனக்குத் தெரியுமா? நேரமில்லையெனப் புலம்ப வேண்டாம்! ஒவ்வொருநாளும் சில நிமிடங்களை ஒதுக்கி, மனதை ஒடுக்கி, கண்களை மூடி அமைதியாயிருந்து உனக்குள் உறையும் இறைசக்தியினை அடையாளங்கண்டு கொள். அதன் பின் ஆண்டவன் உனக்கூடாகச் செயல்படுவதை அவதானிக்க ஆரம்பி. கணத்திற்குக் கணம் நீயே இறைவனாக வளர்ச்சி அடை-வதற்குச் சாட்சியாயிரு!. உன்தவறுகளை உணர்ந்து, என்னென்ன விதங்களில் உன்னையே நீ மாற்றியமைத்து மேம்பட்டிருக்கிறாய், எப்படி யெப்படியெல்லாம் வளர்ச்சியடைந்திருக் கிறாய். உனது நற்குணமும் மகிமையும் எவ்வாறு விகசித்து மலர்ந்திருக்கின்றன என்பதற்குச் சாட்சியாயிரு. பிறருடன் நீ எவ்வாறு தொடர்பு கொள்கிறாய் என்பதற்குச் சாட்சியாயிரு! எவ்வாறு சுயநலமற்ற சேவை செய்து அன்புடன் தொண்டாற்றுகிறாய் என்பதற்குச் சாட்சியாயிரு. பிறருக்கு எப்படியெப்படி பாடம் படிப்பிக்கின்றாய் என்பதற்குச் சாட்சியாயிரு! உனக்குள்ளும், உன்சூழலிலும் நாசகார தீய தூய்மைப் படுத்தும் உனது உள்ளார்ந்த சக்திக்குச் சாட்சியாயிரு! சற்று நிதானித்து, சுற்றிவர அவதானித்து உண்மையில் நீ உடல் அல்ல, மனமும் அல்ல, இறைபொறியாம் ஆன்ம ஸ்வரூபம் என்பதை உணர்ந்து, அதற்குச் சாட்சியாயிரு! அண்ட சராச-ரங்களையும் படைத்து இயக்கிடும் அந்த ஒரேயொரு பேரருட்சக்தி உனக்கூடாகச் செயல்பட்டு உன்னைப் போஷிப்பதற்குச் சாட்சியாயிரு! முன்பு, உனக்குக் கட்டாயம் தேவை என நீ நம்பியவை இப்போ உனக்குத் தேவையில்லை என்பதற்குச் சாட்சியாயிரு! உன்னால் செய்யவேமுடியாது என நீ நினைத்திருந்தவற்றையெல்லாம், சுலபமாக நிறைவேற்ற முடிந்ததற்குச் சாட்சியாயிரு! இதுவரை நீ கடந்து வந்தவையாவும், உனது வாழ்வுக் குறிக்கோளை அடையும் பகுதிகள் தான் என்பதை உணரும் உனது சக்தியின் திறமைக்குச் சாட்சியாயிரு! பிறருக்கு உதவுவது மட்டுமல்லாது, நீயே தளர்ந்து தள்ளாடும் போது, உன்னைத் தாங்கி நிலைநிறுத்திய உனது திறமை விடாமுயற்சி போன்ற ஆசீர்வாதங்களிற்குச் சாட்சியாயிரு! வாழ்வின் வெற்றிக்குகந்த தேர்வுகளை நீ சரிவரத் தீர்மானித்திட, பற்பல பரிணாமங்களையுடைய இறைசக்தி உனக்கூடாகச் செயல்படுவதற்குச் சாட்சியாயிரு! இறந்தகாலம், நிகழ்காலம் எதிர்காலம் மூன்றிலும் நீ சஞ்சரித்து உனது குறிக்கோளை அடைய

## ஆளுமை 97
## வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

இறையருள் உதவுவதற்குச் சாட்சியாயிரு! இறைவனின் சக்திக்கு இவ்வாறு சாட்சியாயிருக்க நீ என்ன செய்யவேண்டும் தெரியுமா? உன் சூழலிலுள்ளவர்களைக் குறைகூறி எடைபோட்டு தீர்ப்புவழங்குவதை



நிறுத்திவிட்டு, அவர்களை மனதார மன்னிக்க ஆரம்பி. முதலில் இது கடினமாகத் தான் இருக்கும். ஆனால் முயற்சி நற்பயனளிக்கும். தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களையே யேசுபிரான் மன்னித்தபடியால் தான், 2004 ஆண்டுகட்குப் பின்னும் அவர் வாழ்கிறார்.

நீயே இறைவன்! இறைசக்தி உனக்கூடாகவே வெளிப்படுகின்றது என்பதை உணராத குருடனாக நீ இதுவரை வாழ்ந்திருக்கலாம். அன்பே வடிவான சர்வேஸ்வரன் உன்னை எப்படி நேசிக்கிறார் என்பதை இன்று அவதானித்துக் கொள்.

தனது கருவியாக இறைவன் என்னைக் காண்பதை உணர்ந்து நான் இன்று இறைசாட்சியாகப் பரிணமிக்கிறேன்.

*மேலதிக தகவல்களுக்கு*
*அழையுங்கள் 905-270-1214*



லலிதா புரூடி

# "நான் தனிமனிதன்...

17ஆம் பக்கத் தொடர்ச்சி

பேரும் வந்தபோது தமிழ் சினிமாவில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது. இப்போது, மீண்டும் பழைய இடத்துக்கே தமிழ் சினிமா திரும்பிவிட்டது. அதற்கு காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்?

பாலுமகேந்திரா: அது காலத்துடைய கட்டாயமாககூட இருக்கலாம். அந்த காலகட்டத்தில் ஸ்டுடியோ உரிமையாளர்கள்தான் தயாரிப்பாளர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு தாங்கள் தயாரிக்கும் படம் தங்களை பெருமைப்படுத்துவதாகவும் இருக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தது. வியாபாரம் அதற்கு அடுத்த நிலையில்தான் இருந்தது. அப்புறம் ஸ்டுடியோ முதலாளிகள் போய் உதிரி தயாரிப்பாளர்கள் வரத் தொடங்கினார்கள். கோயம்புத்தூர், கோபிச்செட்டிப்பாளையம் போன்ற பகுதிகளில் இருந்து துணிப்பையில் பணம் கட்டிக்கொண்டு வந்த முதலாளிகளுக்கு முழுக்க முழுக்க கருப்புப் பணத்தை செலவழிப்பதும் வேறு சில விடயங்களும் மட்டும்தான் நோக்கமாக இருந்தது. பின்னாடி விநியோகஸ்தர்கள், திரையரங்க உரிமையாளர்கள் ஆகியோரது ஆதிக்கமும் திரைப்படத் துறைக்குள் வலுக்கத் தொடங்கியது. இதனால் சினிமா தொழிலாளிக்கே சினிமா மீது இருந்த மரியாதை குறையத் தொடங்கியது. 10 ரூபாய் போட்டு 100 ரூபாய் எடுப்பது என்பது போய், 10 ரூபாய் போட்டு 1,00,000 ரூபாய் எடுக்க வேண்டும் என்ற கணக்கு வந்தது. இப்போது அந்த நிலையும் மாறிவிட்டது. கோடிக்கணக்கில் செலவழித்து பல கோடிகள் சம்பாதிப்பதுதான் இப்போதைய கணக்கு. வியாபார ரீதியாக பார்க்கும் போதுகூட இதனை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சமீபத்தில் ஏழரை கோடி செலவழித்து எடுக்கப்பட்ட ஒரு படம் படுதோல்வி அடைந்தது. அதற்கு ஏழு படங்கள் எடுக்கலாம். நான்கு படங்கள் ஏமாற்றினால்கூட மூன்று உங்களை காப்பாற்றிவிடும். இதனை ஆரோக்கியம் இல்லாத ஒரு சூழலாகத்தான் நான் பார்க்கிறேன். பைத்தியக்காரத்தனம்.

பார்வையாளர்களை நான் என்றைக்குமே குறைத்து மதிப்பிட மாட்டேன். நீங்கள் ஒரு நல்ல விடயத்தைக் கொடுத்தால் நிச்சயம் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். சமீபத்திய உதாரணம் "ஆ ட்டோகிராப்ச்", "காதல்" படங்களின் பிரமாண்ட வெற்றி. பாலாவின் "சேது " படத்தின் வெற்றிக்கு நீங்கள் வேறு எந்த காரணத்தைச் சொல்வீர்கள். "சேது", விநியோகஸ்தர்களும் திரையரங்க உரிமையா-ளர்களும், நாங்கள் வாங்கமாட்டோம் என்று மறுத்த படம். "சேது" வின் வெற்றி அவர்களால் மக்கள் மனதை கணிக்க முடியவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. " சங்கராபரணம்" படத்திலும் இதுதான் நிகழ்ந்தது. 140 முறை, பலருக்கும் திரையிட்டு காண்பித்த பிறகும் யாருமே வாங்க தயாராக இல்லை. ஆனால் அந்தப் படம் இந்தியா முழுக்க 100 நாட்கள் ஓடியது. "மறுபடியும்" என்கிற உளவியல் ரீதியான கருத்துக் கொண்ட ஒரு படத்தையும் அவர்கள் 100 நாட்கள் ஓட வைத்திருக்கிறார்கள். இதுபோல் விநியோகஸ்தர்களின் கணிப்பை பொய்ப்பித்த பல படங்களை சொல்ல முடியும்.

மக்கள் தெளிவாகத்தான் இருக்கிறார்கள். நல்ல விடயங்கள் அவர்களுக்குப் புரிகிற மாதிரி சொல்லப்படும் போது அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் தியேட்டருக்கு வருகிற பார்வையாளன் பொழுதுபோக்குக்காகத்தான் வருகிறான், சமூக விழிப்புணர்வுக்காக இல்லை என்பதையும் நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். எனவே, ஓரளவுக்கு பொழுதுபோக்கு அம்சங்களையும் வைக்கவேண்டிய கடமையை ஒரு இயக்குநர் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். அதனுடைய அளவைத் தீர்மானிப்பதுதான் முக்கியம்.

தமிழ் நாட்டுக்கு இன்றைய தேவை "ஆட்டோகிராப்" , "சேது", " மூன்றாம் பிறை" போன்ற படங்கள்தான். யாதார்த்த ரீதியாக, அழுத்தமாக, உணர்வு ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய, நேர்மையுடன் எடுக்கப்பட்ட படங்கள். அது எந்த வகையில் இருந்தாலும் பரவாயில்லை. விழுந்து விழுந்து சிரிப்பதும் ஒரு தாக்கம்தான்.

கேள்வி: சினிமாவிலிருந்து தொலைக்காட்சி தொடருக்கு சென்றது ஏன்?

பாலுமகேந்திரா: தொலைக்காட்சிக்காக "கதைநேரம்" பண்ணின போது அதற்கு கிடைத்த வரவேற்பு எனக்கு உற்சாகத்தையும் தெம்பையும் தந்தது. அதில் எனக்கு கிடைத்த படைப்பு சுதந்திரம், சினிமாவில் எப்போதுமே எனக்கு கிடைத்ததில்லை. எல்லா வீடுகளிலும் கோவிலுக்குப் போவது போல் ஒரு பக்தியுடன் உட்கார்ந்து பார்த்தார்கள்.

கேள்வி: உங்கள் தாய் மண்ணான ஈழத்தில் நிகழ்ந்து வரும் அரசியல் பிரச்சினை குறித்து படங்கள் செய்யும் திட்டம் இருக்கிறதா?

பாலுமகேந்திரா: ஈழப் பிரச்னையை மையமாகக் கொண்டு படமெடுக்க வேண்டும் என்பது எனக்கு நீண்ட நாள் ஆசை. கனவு. ஆனால், இன்றைய சூழலில் அது எந்த அளவுக்கு சாத்தியம் என்கிற கேள்வியும் என் முன்னே இருக்கிறது. சில வருடங்களுக்கு முன்பு இலங்கை அகதிகளைப் பற்றிய ஒரு ஆவணப்படம் எடுக்கும் முயற்சியை மேற்கொண்டேன். அதற்காக அகதி முகாம்கள் சென்று பேட்டிகள் எடுக்கத் தொடங்கினேன். திடீரென்று எனக்கு சம்பந்தப்படாத இடங்களிலிருந்து அந்த முயற்சியை கைவிடும்படி கேட்டுக் கொள்ளப்பட்டேன். மீறி எடுப்பதாக இருந்தால் விளைவுகளை சந்திக்க வேண்டியதாயிருக்கும் என்று சொன்னார்கள். நான் ஒரு தனி மனிதன். என்னால் என்ன செய்ய முடியும்?



SMILE
• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES
RK CONSULTANTS
PL. CALL: 905.887.7457 / 905.751.7537
24 hrs, 365 days

யோகா சோதிடம்

• கிரகப் பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
416-299-8361


$ 138,000

$ 345,000

$ 289,900

› Excellent Location
› Close To Downtown
› Close To All Amenities
› Excellent View
› Call Jayanthi For Details....

› Renovated Detached Home
› Close To School And Shops
› Huge Master Bedroom
› Unspoiled Basement
› Call Jayanthi For More Info...

› Excellent Location
› Finished Basement
› Upgraded Throughout
› Seven Appliances
› Call Jayanthi For Details....


"FRIENDLY & PROFESSIONAL "

Win a brand new car and much more
If You Buy Or Sell From the Real Team
Some condition apply
HOMELIFE HIGHER STANDARDS
Jayanthi Sritharan
Sales Representative
Direct: 416-918-5872
Email:sritharanj@rogers.com
HOMELIFE/GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3
Bus:(416)321-6969
*Independently Owned and Operated
This is not intended to solicit properties currently listed for sale.

165

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



சிறு வயதில் நினைத்ததையெல்லாம் சாதிக்கிறோம்.
பெரியவர்களானதும் சாதித்ததையெல்லாம் நினைத்துப்பார்க்கிறோம்.
எதனையும் ரசிக்கத்தெரிந்தவன்தான் மனிதன்.

உலகர் பார்க்காத படமா நிகழ்ச்சிகளா?.
அடிக்காத விசிலா செய்யாத ஆர்ப்பாட்டமா?
அது ஒருகனாக்காலம்!

அமைதியாகவும் ஆரவாரமின்றி ரசிக்கும் பல நிகழ்ச்சிகள் பல.
பிறிம்லி மீனா, மதன் மிருதங்க அரங்கேற்றத்திற்கு நேரத்திற்கே வந்துவிட்டார்கள்.

ஆட்டிலறி அன்னம்மாவும் செல்லம்மாவும் பக்கத்து பக்கத்து ஆசனங்களில்.
மண்டபம் கலைப்பூங்காவனமாகக்காட்சியளித்தது.
மிருதங்க சேஸ்திராலயா மிருதங்கவாருதி வாசுதேவன் ராஜலிங்கத்தின் மாணவன்
செல்வன் கிருஸ்ணாவின் மிருதங்க அரங்கேற்றம்.



பிரபல பாடகர் இசைக்கலைமாமணி
வர்ணராமேஸ்வரனின் குரலாட கிருஸ்ணாவின் விரலாட
பார்த்திருந்தோர் சிரமாட நிகழ்ச்சி கலகலப்பாக இருந்தது.

கவிநாயகர் கந்தவனம் அவர்களின் பேரன் கிருஸ்ணாவிற்கு
இயல் இசை நாடகம் நன்றாகப்போதித்திருக்க வேண்டும்.
விரல்கள் பேசின, விரல்கள் இசைத்தன, விரல்கள் நடித்தன.
மிருதங்கத்திற்கு மட்டும் வாயிருந்தால் ஒவ்வொரு அடியும் என்ன ராகமென்று சொல்லிச்சொல்லி கத்தியிருக்கும்.
நிகழ்ச்சி முடிந்து வரும்போது ஆட்டிலறி அன்னம்மா மதனுக்கு சொன்னா டேய் மதன் நீயும் மிருதங்கம் பழகெண்டு... உலகர் திரும்பிப்பார்த்தார்.
இஞ்சையுள்ள பிள்ளையளுக்கு உதெல்லாம் தேவையில்லையென்று வாதாடிய செல்லம்மாகூட கலையை ரசிக்கத்தொடங்கிவிட்டா.
வாழ்க தமிழும் கலையும்.

வீட்டுக்கு வந்ததும் உலகர் வழமைபோல வானொலியைத்திருக
விநாயகனே வல்வினையை வேரறுக்கவல்லான்......
விநாயகனே வினை தீர்ப்பவனே பாடல் ஒலித்தது.
உலகர் மனம் பாட்டோடு ஒன்றிவிட்டது.



மறைந்த டாக்டர் சீர்காழி கோவிந்தராஜனின் மறக்கமுடியாத குரல்.
மார்ச் 24 அவர் பிறந்ததினம்.
ஆடியடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா
பாடியதும் அவர்தான்.







# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (13 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

20 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

## YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

***905-793-9546 / 416-616-5979***

4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

# EXPERT
BUILDING INSPECTIONS LTD

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

**Tel: 905 940 0811 Fax 905 940 6108**

**Toll Free 1 866 373 3315**

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

**www.expertinspector.com**

- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act–Bill 158 and full members of **ASHI** and **CAHPI**–Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

# பரம்பரை வீட்டு வைத்தியம்

*கடந்த இதழ் தொடர்ச்சி*

(133) பித்தம் குறைய - வேப்பம்பூவை உலர்த்தி உப்புக்கலந்த மோரில் ஊறவைத்து எடுத்து நன்கு வெய்யிலில் காயவைத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு சிறிதளவு எடுத்து பசுநெய்யில் வறுத்து சாதத்துடன் சேர்த்து சாப்பிட்டால் பித்தம் குறையும். அதனால் ஏற்பட்ட வயிற்றுக் கோளாறுகளும் நீங்கும். எலுமிச்சம்பழச்சாற்றுடன் தேன் கூட்டி பருகிவந்தால் பித்தம் தணியும். இதே சாற்றுடன் உப்பு இஞ்சி சேர்த்து குடித்தால் வாய்க்கசப்பு நீங்கி பித்தமும் குறையும். வெங்காயத்துடன் சிறிது வெல்லத்தை சேர்த்து மென்று சாப்பிட்டால் பித்தம் குறையும்.

அகத்திக்கீரையை சமைத்து உண்டுவந்தால் பித்தம் குறையும். ரோஜாப்பூவை பசுப்பாலுடன் கலந்து வெல்லத்துடன் குடித்தால் பித்தக் கோளாறு குணமாகும். திப்பிலி, மிளகு சம அளவு எடுத்து தூள் செய்து அத்துடன் தேன்கூட்டி விளாம்பழத்துடன் சாப்பிட்டு வந்தால் பித்தம் குறையும். பித்த மயக்கம் குணமாகும். நன்னாரிவேரை அவித்து அத்துடன் சிறிதளவு பெருங்காயம் சேர்த்து அதில் சிறிதளவை எடுத்து பசு நெய்யுடன் கலந்து காலையில் சாப்பிட்டு வந்தால் பித்தமயக்கம், பித்த வாந்தி, தலைச்சுற்றல் ஆகியவை குணமாகும்.

(134) பித்தவெடிப்பிற்கு - கால்பாதங்களில் பித்தவெடிப்பிற்கு அரசமரத்தின் அடிப்பாகத்தில் வடியும் பாலை பித்தவெடிப்பின்மேல் தடவி வந்தால் அது குணமாகும். மெழுகுதிரியை தூளக்கி நல்லெண்ணையில் போட்டு காச்சி பித்தவெடிப்பில் பூசினால் அது குணமாகும். இலுப்பையெண்ணை, வேப்பெண்ணை இதில் ஏதாவது ஒன்றை பாதங்களில் இரவில் தடவினால் பித்தவெடிப்பு குணமாகும். கண்டங்கத்தரி இலையை தேங்காய் எண்ணையில் பொரித்து அந்த எண்ணையை வடிகட்டி வைத்துக்கொண்டு பித்தவெடிப்பிற்கு பூசினால் அது குணமாகிவிடும். மருதோன்றி இலை, வசம்பு, மஞ்சள், கற்பூரம் இவற்றை அரைத்து இரவில் பித்தவெடிப்பிற்கு பூசிவந்தால் சில நாட்களில் அது குணமாகிவிடும். காலில் வரும் ஆணியும் குணமாகும்.

(135) புளியேப்பம் குணமாக - சிலருக்கு ஜீரணிக்காவிடில் புளியேப்பம் வந்து நெஞ்செரித்தபடியே இருக்கும் இதற்கு காரணம் அதிக உணவு உண்ணுதல், ஒத்துக்கொள்ளாத உணவை உண்ணுதல். அதிக காரம், இனிப்பு உண்ணுதல் ஆகும். இதை உடன் குணமாக்க சீரகம், மிளகு, சிறிதளவு உப்பு இவற்றை சேர்த்து இடித்து அதில் சிறிதளவு வாயிற்போட்டு மென்று வெந்நீர் குடிக்கவேண்டும். எதுகாரணத்தாலும் உணவு உட்கொள்ளக்கூடாது. சில மணிநேரத்தில் புளியேப்பம் குணமாகி நன்கு பசிக்கும்.

136) பூண்டின் மகத்துவம் - வெள்ளைப்பூண்டு அல்லது உள்ளி



குடலில் உள்ள புண்ணை ஆற்றும். தோல்வியாதிகளை குணமாக்கும். நெஞ்சில் சளியைக்குறைக்கும். ஜீரணசக்தியை கூட்டவல்லது. இருதய வியாதிகளை தடுக்கவும் குணமாக்கவும் வல்லது. உடம்பிலுள்ள தேவையற்ற சதைகளை குறைக்கவல்லது. இதன் காரணத்தாலன்றோ நமது மூதாதை மருத்துவர்கள் அதிகமான ஔடதங்களுக்கு பூண்டை உபயோகித்தனர் உரோமாபுரியர்களும் இரண்டாயி ரம் ஆண்டுகளுக்கு முன்பே இதன் மகத்துவத்தை அறிந்து தமது உணவிலும் மருந்துகளிலும் இதை அதிகமாக பாவித்து நற்பலன் பெற்றனர். எனவே தினம் வெள்ளைப்பூண்டை உணவில் சேர்த்து நாமும் நற்பலன்பெறுவோம். இரத்த அழுத்தத்தை குறைப்பதற்கும் வெள்ளைப்பூண்டு பெரிதும் உதவுகிறது. இந்தப்பூண்டு சிறுநீரகத்திற்கும் பலங் கொடுக்கும், சிறுநீரை அதிகம் சுரக்கச்செய்யும். கபத்தை கரைக்கும். உடம்பில் தேங்கும் வாயுவை கண்டித்து குணப்படுத்தும். வாதரோகங்களுக்கும் இது நல்ல மருந்தாகும். மலச்சிக்கலை நீக்கும்.


டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D
Holistic Practitioner (canada)
Nutrition & fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை
Tele. - 416.291.3022
E.Mail-DRVPS@Hotmail.com


(137) புற்றுநோய் - புற்று நோய்க்கு காரணம் எமது உடம்பிலுள்ள கலன்கள் ஏதோகாரணத்தால் தீவிரமாக வளர்ந்து எமது உடம்பில் நன்கு செயற்படும் கலன்களை அழித்து உடம்பை ஆக்கிரமிப்பதே என்று விஞ்ஞானிகள் கண்டுள்ளனர். இதுகாலம்வரை நன்கு செயற்பட்டு அவை எமது உடம்பில் உள்ள கலன்கள் எதற்காக இப்படித்தீவிரமாகச்செயற்பட்டு எமது உடம்பையே அழிக்கிறது?

இதற்கு காரணம் அவற்றிற்கு ஒத்துக்கொள்ளாத பலவிடயங்களை நாம் செய்து அவற்றை புரட்சிசெய்யத்தூண்டுவதே ஆகும். இதற்கு ஒரு காரணம் எமது உணவு வகை, குறிப்பாக மாமிச உணவு என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். மரக்கறி உணவு உண்பவர்களுக்கு புற்றுநோய் வருவது குறைவு என்று இன்றைய ஆராட்சிகள் கூறுகின்றன. குறிப்பாக பெருங்குடல் புற்றுநோய் அதிக நார்ச்சத்து உள்ள மரக்கறிவகைகள் உண்பதால் புற்றுநோய் தடுக்கப்படுகிறது.

எலுமிச்சை இலை, நாரத்தை இலை, வேப்பம் கொழுந்து இவற்றை சம அளவு எடுத்து காயவைத்து அத்துடன் சிறிதளவு உப்பும் பெருங்காயமும் சேர்த்து இடித்து சிறு உருண்டைகள் செய்து பத்திரப்படுத்தவும். இந்த உருண்டை ஒவ்வொன்று காலையில் விழுங்கி வெந்நீர் குடித்து வந்தால் புற்றுக்கள் வராது தடுக்கலாம். 'மஸ்றூம்' (Mushroom) என்னும் காளான், வெங்காயம், உள்ளி என்னும் பூண்டு இவைகள் உடம்பில் 'குளூகாதியோன்' என்னும் சத்தை கூட்டவல்லவை இந்த குளூகாதியோன் புற்றுநோய்க்கலன்களை அழிக்கும் தன்மைவாய்ந்தவை என்று இன்றைய அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். 'பாம்மோயில்' என்னும் பனை எண்ணையில் அதிகம் 'பீரா கறொரின்' (Beta-Carotene) என்னும் புற்றுநோயை தடுக்கும் சத்து உள்ளது. இதை உண்பதால் புற்று நோய் கட்டுப்படும். சீன விஞ்ஞானிகள் புற்றுநோயை உண்டாக்கும் 'நைற்றோசாமின்சிந்தசிஸ்' (Nitrosamine Synthesis) உற்பத்தியைத்தடுக்கும் சக்தி உள்ளி என்னும் வெள்ளைப் பூண்டிற்கு உண்டு என்று கண்டறிந்துள்ளனர் எனவே அதிகம் வெள்ளைப்பூண்டைப்பாவித்தால் புற்றுநோய் கட்டுப்படுத்தப்படும். கடினமான இறைச்சிவகை, கருவாடு இவை அதிகநேரம் குடலில் தங்கி 'நைரோசனமன்' என்னும் புற்று நோயை உற்பத்தியாக்கும் இரசாயனப்பொருளை உற்பத்தியாக்கின்றன. எனவே இப்படியான உணவுகளை ஓரளவு குறைத்து அதிகமரக்கறி, பழவகைகளை உண்பதும் புற்று நோயைக்கட்டுப்படுத்தும். எமது புராதன மருந்தாக கருதப்படும் 'பஞ்சகவ்வியம்' அதாவது பசுவின் பால், தயிர், பசுவெண்ணை அல்லது நெய், பசுவின் சாணம் (கோமயம்), கோசலம் (பசுவின் மூத்திரம்). இந்த ஐந்தையும் கலந்து தினம் காலை மாலை ஒரு தேக்கரண்டி பருகிவந்தால் புற்றுநோய் கட்டுப்படும், குணமாகும், வராது தடுக்கலாம். மரக்கறி உணவு அதிக காரம், கொழுப்பு இல்லாது உண்ணவேண்டும்.(




AXIS AROGYA PHARMACY
5200 FINCH AVE. EAST #111, SCARBOROUGH, M1S 4Z4
NOW OPEN!
AXIS ஆரோக்யா பார்மசி
Finch & Middlefield சந்திப்பில்
Tel: 416.840.0007 Fax: 416.840.0008
உங்கள் அருகாமையில் புதிய மருந்தகம்: Axis ஆரோக்யா பார்மசி
தரமான சேவை தமிழில் சேவை
7 days a week

- நீங்கள் உபயோகிக்கும் மருந்துகள் அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் உங்கள் ஆரோக்கியம் சம்பந்தமான விபரங்கள் பற்றியும் தெளிவான விளக்கங்களை என்னுடன் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கலந்துரையாடி பெற்றுக்கொள்ளலாம்.
- முதியோர் மற்றும் சமூகநல உதவியில் இருப்போரிடமிருந்து $2.00 அறவிடப்படமாட்டாது.
- தங்களுக்குத் தேவையாயின் இலவச விநியோகமும் செய்து தருவோம்.
- மருந்தகத்தின் இரத்த அழுத்தம் சரிபார்க்கும் கருவியையும் இலவசமாக உபயோகிக்கலாம். (Free Blood pressure Monitoring )
- Glucometer Strips வாங்கினால் Glucometer இலவசமாக தருவோம். அத்துடன் உபயோகிக்கும் விதத்தினையும் தெளிவாக விளக்கிக் கூறுவோம்.

அழைப்பின் பேரில் உங்கள் மருந்துகள் பற்றி உங்கள் வீட்டிற்கு வந்து மருந்துகள் எடுப்பது பற்றி மருந்தாளரினால் விளக்கம் அளிக்கப்படும்.

•மருந்தக நேரம் முழுவதும் தமிழ் மருந்தாளரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் வெ. கார்த்திகேயன் (கார்த்திக்) மருந்தாளர் (Pharmacist/Owner)

*விரைவான சேவை! நிறைவான சேவை!! தரமான சேவை!!!*





உங்கள் ஆரோக்கியமே எங்கள் நோக்கம்

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்





Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4


Niru
நிரு
பிராண்ட்
BRAND Niru ®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
MARKETING BY TAMIL SOURCE

# கன்னியாகுமரி - முக்கடல்களின் சங்கமம்



## தமிழ்நாடு சுற்றுலாத்தலங்கள்-12

இரண்டு கடல்கள், ஒரு சமுத்திரம். . . மூன்றும் இணையும் இடத்தில் இருக்கிறது கன்னியாகுமரி. இதனாலேயே உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாக கொண்டாடப்படுகிறது கன்னியாகுமரி. இந்தியா வரும் ஒவ்வொரு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணியும் தவறாமல் வந்துசெல்லும் இடங்களில் ஒன்றாக எப்போதும் கன்னியாகுமரி இருந்து வருகிறது. இந்தியாவிலும் வடநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு கன்னியாகுமரி ஒரு கனவு. அத்தனை சிறப்பும் பேரழகும் கொண்டது கன்னியாகுமரி. முக்கடலும் முத்தமிடும் முனை, சூரிய உதயம், சூரிய அஸ்தமனம், கடற்கரையில் உள்ள பகவதி அம்மன் ஆலயம், கடலுக்குள் கண்கொள்ளாக் காட்சியாக எழுந்திருக்கும் விவேகானந்தர் நினைவு மண்டபம், பக்கத்திலேயே 133 அடி திருவள்ளுவர் உருவச் சிலை, காந்தி மண்டபம், வட்டக்கோட்டை. . . என திரும்பிய பக்கமெல்லாம் அழகையும் வனப்பையும் காட்டும் கன்னியாகுமரியைப் பார்க்க ஒரு நாள் போதாது.

இந்தியாவின் தென்கிழக்கில் வங்கக்கடலும், தென்மேற்கில் அரபிக்கடலும், தென் எல்லையில் இந்து மகா சமுத்திரமும் எல்லையாக அமைந்துள்ளன. இந்த மூன்று கடல்களும் சங்கமிக்கும் இடம் கன்னியாகுமரியில் இருந்து பார்க்கும் தூரத்தில் இருக்கிறது. மூன்று கடல்களும் சீற்றம் கொள்ளும் குமரி முனை இயற்கையின் எல்லையில்லா பேரழகுடன் காட்சி தருகிறது. இங்கே கன்னித் தெய்வமான பகவதி அம்மனுக்கு அழகிய ஆலயம் உள்ளது. அதனாலேயே கன்னியாகுமரி என்று பெயர் என்றும் சொல்லப்படுகிறது. மற்றொரு சிறப்பு. . . சூரிய உதயமும் அஸ்தமனமும். உலகிலேயே சூரிய அஸ்தமனமும் உதயமும் ஒரே இடத்தில் பார்க்க கிடைக்கும் இடம் கன்னியாகுமரிதான். கதிரவன் உதிக்கும் நேரத்தில் அதிகாலையில் நூற்றுக்கணக்கான மீனவர்கள் பாய்மரக் கப்பலில் அணி அணியாக கடலை நோக்கிச் செல்லும் போது, சூரியக் கதிர்கள் அவர்கள் மீது பட்டு தெறிக்கும் காட்சி மிகவும் அற்புதமாக இருக்கும். இதுபோல், சூரிய அஸ்தமனக் காட்சியும் மிகவும் அழகுடையது. இந்த இரண்டு நேரங்களிலும் வானத்தில் சூரியன் வண்ண, வண்ண அழகிய ஓவியங்களை வரைந்து அழித்துக் கொண்டே செல்வதை பார்க்க கொடுத்து வைத்திருக்க வேண்டும்.



குமரிக் கடலோரத்தில் நான்கு புறமும் மதில்களோடு செவ்வக வடிவத்தில் பகவதியம்மன் ஆலயம் அமைந்துள்ளது. மூன்று பிரகாரங்கள் கொண்ட இந்த ஆலயத்தில் அம்மன் கிழக்கு நோக்கி நின்று அருள்புரிகிறாள். பகவதி அம்மனின் மூக்குத்தி மிகவும் பிரசித்தி பெற்றது. முக்குத்தியின் பிரகாச ஒளியை கலங்கரை விளக்கம் என நம்பி, கடலில் செல்லும் கப்பல்கள் திசைமாறி வந்துள்ளதாக வரலாறுகள் உள்ளன. இதனால், கடலை நோக்கி கிழக்கு பக்கமாக உள்ள கதவு எப்போதும் மூடியபடியே இருக்கும். பல தீர்த்தக் கட்டடங்களைக் கொண்ட முக்கடலும் முத்தமிடும் இடத்தில் அமைந்துள்ள நீராடும் கட்டடமும், 16 தூண்கள் மண்டபமும் இக்கோவிலில் சிறப்புடையன. தமிழ்நாட்டின் தென் எல்லைக் காவல் தெய்வமாக போற்றப்படுகிறாள் பகவதி அம்மன்.

குமரி முனையின் கிழக்கே, சுமார் 1 கி.மீ. தொலைவில் கடலுக்குள் இரண்டு அழகிய பாறை கள் உள்ளன. அதில், ஒரு பாறையில் ஓரிடத்தில் பாதம் போன்ற அடையாளம் காணப்படுகிறது. இதை பகவதி தேவியின் திருப்பாதம் என மக்கள் கருதுகிறார்கள். இந்தப் பாறையில் உட்கார்ந்து விவேகானந்தர் தவம் செய்து ஞான ஒளிபெற்றார். எனவே, இந்த இடத்தில் விவேகானந்தர் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபம் இந்திய தேசிய சின்னங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள் ளது குறிப்பிடத்தக்கது. முழுக்க பளிங்குக் கற்களால் இழைக்கப்பட்டுள்ளது இம்மண்டபம். மண்டபத்தின் உள்ளே இருக்கும் தியான மண்டபம் அமைதியும் அழகும் தூய்மையும் நிறைந்தது. மண்டபத்தின் உள்ளே நுழைந்ததும் கம்பீரமாக நிற்கும் விவேகானந்தர் சிலை நம்மை எதிர்கொள்கிறது.

விவேகானந்தர் மண்டபம் அமைந்துள்ள பாறைக்கு மிக அருகிலேயே உள்ள பாறையில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவரின் உருவச்சிலை உள்ளது. 38 அடி கற்பீடத்தின் மீது, 95 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை அமைந்துள்ளது. மொத்தமாக, 133 திருக்குறள் அதிகாரங்களையும் நினைவுறுத்தும் விதமாக இச்சிலை 133 அடியில் அமைக்கப்பட்டுள்ளது. 133 அடிக்கும் கற்கள் ஒன்றுடன் ஒன்று இணைப்பில்லாமல், ஒன்றன் மேல் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டுக் கட்டடக் கலை



**வழிப்போக்கன்**

நிபுணர்களாலும் வியந்து போற்றப்படும் இச்சிலையை உருவாக்கிய கணபதி ஸ்தபதி சென்னையில் வாழ்ந்து வருகிறார். பத்து யானைச் சிற்பங்கள் பீடத்தை சுற்றி அமைக்கப்பட்டுள்ளன. கடற்கரையிலிருந்து திருவள்ளுவர் உருவச் சிலைக்கும், விவேகானந்தர் நினைவு மண்டபத்துக் கும் செல்ல படகு போக்குவரத்து உள்ளது.

குமரிக் கடலோரத்தில், பகவதி அம்மன் ஆலயத்துக்கு அருகில் உள்ளது காந்தி நினைவு மண்டபம். காந்தியின் அஸ்தியை இந்த இடத்தில் கரைத்ததன் நினைவாக இந்த நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. அஸ்தி வைக்கப்பட்ட இடத்தில் காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2-ம் தேதி அன்று பகல் 12 மணிக்கு சூரிய ஒளி படுவது இம்மண்டபத்தின் சிறப்பு. கன்னியாகுமரியில் அரசு அருங்காட்சியகம் உள்ளது. மேலும், குமரி முனையில் இருந்து தென்கிழக்கே 6 கி.மீ. தொலைவில் உள்ள வட்டகோட்டையும் இங்கே பார்க்க வேண்டிய முக்கியமான ஒரு இடம். 3 ஏக்கர் பரப்புடைய இக்கோட்டையில் ஒரு பக்கம் கடலும் மறுபக்கங்களில் அகழியும் அமைந்துள்ளன. இக்கோட்டை ஒரு காலத்தில் முத்துக்கொழிக்கும் துறைமுகப் பட்டினமாகவும் குமரி துறையின் காவல் தளமாகவும் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. கடல் வழியாக வரும் பகைவர்களை தடுத்து நிறுத்தும் நோக்குடன் கோட்டைக் கொத்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பீரங்கியை மேலே கொண்டுபோய் கடலை நோக்கிச் சுடுவதற்கு வகையாக கல்லிலேயே சாரம் கட்டியுள்ளனர். இக்கோட்டை தற்போது இந்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறையால் பாதுகாக்கப் பட்டு வருகிறது.

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் கன்னியா குமரியைப் பற்றிய குறிப்புகள் பல இடங்களில் வருகின்றன. “வடவேங்கடம் தென்குமரி யிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்” என்கிறது தொல்காப்பியம். “குமரியம் பெருந்துறை யிடை” என்கிறது புறநானூறு. “தென்குமரி வடபெருங்கடல் குணகுடகடலா வெல்லை” என்கிறது மதுரைக் காஞ்சி. கி.பி. முதல் நூற்றாண்டில் தோன்றிய பெரிப்பிளஸ் என்ற நூலில் கன்னியாகுமரியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. தங்கள் வாழ்நாளின் இறுதிப் பகுதியை இறைவனோடு கலந்து கழிக்க விரும்புகிறவர்கள், குமரித்துறைக்கு வந்து நீராடி, பிரம்மச்சாரி விரதம் பூண்டு, தங்கள் எஞ்சிய வாழ்நாளைத் துறவு நிலைக்கு மாற்றினர் என்கிறது இந்த நூல். பெண்களும் இதனைச் செய்துள்ளனர்.

சிவபெருமானின் கைத்தலம் பற்றி மனைவி யாவதற்காக பார்வதி தேவி கன்னியாக அவதாரம் எடுத்த தலம் இது எனவும் கூறப்படுகிறது. ராமர் இலங்கைக்குச் செல்வதற்கு முன்னால் குமரி முனைக்கு வந்து தேவியின் அருள் பெற்று திரும்பியதாகவும் நம்பிக்கை உண்டு. கன்னியா குமரியில் “பரிவேட்டை” என்றழைக்கப்படும் திருவிழா மிகவும் பிரசித்திபெற்றது. பாணாசுர அரக்கனை அழிக்க இறைவன் தமது சக்தி உருவமாகக் பகவதி அம்மனை உருப்பெறச் செய்தார் என்பது தலபுராணம். பகவதி அம்மன், அரக்கனுடன் போரிட்ட நிகழ்ச்சியை நவராத்திரி விழாவின் போது சிறப்புற நிகழ்த்திக் காட்டுகின்றனர். இந்த விழாவுக்குத்தான் பரிவேட்டை என்று பெயர்.

### எப்படி செல்வது?

சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு தினமும் மாலையில் ரயில் இயக்கப்படுகிறது. திருவனந்த புரத்தில் இருந்தும் கன்னியாகுமரி வரலாம். கன்னியாகுமரியில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை தங்கும் விடுதியும் உணவகமும் இருக்கிறது. மேலும், பல நல்ல நிலையில் உள்ள தனியார் லாட்ஜ்களும் உள்ளன. இங்கே, மாலை வேளைகளில் கடற்கரையில் பொரித்து விற்கப் படும் மீன் வறுவல் மிகவும் பிரசித்திப் பெற்றது.


KV TRUCK DRIVING CENTER

- தமிழ் ஆங்கில மொழிகள் மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாக வழங்கப்படும். (One On One Training)
- சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு உத்தரவாதம் வழங்கப்படும்.
- உடனடி வேலைவாய்ப்புகள் எமது நிறுவனத்திலேயே வழங்கப்படும்.

Canada & USA பெருந் தெருக்களிலும் பயிற்சிகள் வழங்கப்படும்

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing

We also Accept welfare & unemployment

Truck Licence From $699.00

இரண்டு வாரங்களில் நீங்களும் கனரக வாகன சாரதியாகலாம்



அழையுங்கள்: 647.274.0300
Kiruba : 905.480.9280

# நான், நீங்கள், அவர்கள் (Me you them)

இது ஓர் உண்மைக் கதை. ஒரு பெண்ணிற்கு மூன்று கணவன்மார். எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் ஓர் ஆணிற்கு மூன்று மனைவி-மார். நாங்கள் அவரை தலைவராகவும் ஏற்றுக் கொள்வோம். (இந்திய அரசியல்வாதிகள் பலருக்கு பல மனைவிமார்)

பிரேசிலின் வட மேற்குப்பிரதேசத்தில் ஒரு குக் கிராமம். Darlene தாயின் செத்த வீட்டிற்கு கிராமத்திற்கு வருகின்றாள். வயிற்றில் கருவுடன் கிராமத்தை விட்டுச் சென்ற Darlene, மீண்டும் வயிற்றில் கருவுடன், கையில் சிறுவனுடன் தாயின் முகத்தை இறுதியாக சந்திக்க வருகின்றாள். அவளது வறுமை, அவளுக்கு ஓசியஸ் சுடன் திருமணம் செய்ய நிர்ப்பந்திக்கின்றது. திருமணம் ஓர் ஒப்பந்தம். வெகு இலகுவானது. ஓசியஸ் தங்குவதற்கு வீடு தருகின்றான். டார்லின், ஓசியஸ்ற்கு சமைத்து போடவேண்டும். ஓசியஸ் வயது முதிர்ந்தவன். ஆடு மேய்ப்பவன். பிள்ளை பிறக்கின்றது. பிள்ளை கருப்பு நிறம். ஊட்டச் சத்து குறைவு என கருத்துக் கூறுகின்றாள். ஆனாலும் கருப்பு நிறம் நிரந்தரமாகிவிடுகின்றது. இவர்களது வீட்டில் தங்க, தனது வீட்டால் கலைக்கப்பட்ட, ஓசியஸின் ஒன்று விட்ட உறவினன் சிசின்கோ (Zezinho) வருகின்றான். இவனும் ஓசியஸின் வயதை ஒத்தவன். இவனுக்கும் டாலினுக்கும் உறவு ஏற்படுகின்றது. டார்லின் மீண்டும் கர்ப்பமாகின்றாள். டார்லின் கரும்புத் தோட்டத்திற்கு வேலைக்கு செல்கின்றாள். மூன்றாவது பிள்ளை பிறக்கின்றது. சிசின்கோ நன்றாக சமைப்பான். இதனால் ஓசியஸ் எதுவும் கூறவில்லை. மீண்டும் கரும்புத் தோட்டத்திற்கு வேலைக்குச் செல்லும் டார்லின், இளைஞனான சைரோ வைச் சந்திக்கின்றாள். அவளது வீட்டில் தங்க வைக்கின்றாள். இவர்களுக்கு உறவு ஏற்பட்டு, மற்றொரு பிள்ளை பிறக்கின்றது. இப்பொழுது மூன்று கணவன்கள். நான்கு பிள்ளைகள் ஒரே வீட்டில். ஒரு நாள் காலை, புதிதாக பிறந்த பிள்ளையும், ஏனைய பிள்ளைகளையும் காணவில்லை. தேடிக் கொண்டிருந்த பொழுது ஓசியஸ் இந்தப் பிள்ளைகளுடன் வந்து கொண்டிருக்கின்றான். ஓசியஸ் ஒரு பத்திரத்தை டார்லினிடம் நீட்டுகின்றான். அது பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சி பத்திரம். அந்த பிள்ளைகள் அனைத்தும் தனது பிள்ளைகள் என ஓசியஸ் அதில் பதிந்துள்ளான்.

இது உண்மைக்கதையை மையமாகக் கொண்டது. இந்த லத்தீன் அமெரிக்கப் படத்துக்கான திரைக்கதையை Elena Soarez என்ற பெண் எழுதியிருந்தார். சில வருடங்களுக்கு முன்னர் ரொரண்ரோ சர்வதேச திரைப்படவிழாவில் இப்படம் திரையிட்ட போது பல மேற்கத்திய விமர்சகர்கள், இப்படம் படமாக்கப்பட்ட முறைக்காக பாராட்டினார்கள். திரைக்கதையை பெரிதாக வரவேற்கவில்லை. காரணம் மூன்று கணவன்மார். மேற்கத்திய முற்போக்கு கலாசாரம் என்று கூறிய போதும் இவர்கள் பெண்கள் விடயத்தில் பிற்போக்கானவர்களே.



இப்படத்திலும் ஆணாதிக்க வெளிப்பாடுகள் சிறப்பாக வெளிப்படுகின்றன. ஆணாதிக்க சமுதாயத்தில் வளர்ந்த ஓசியஸ், தனது மனை-வயின் உறவுகளை அங்கீகரிப்பதன் காரணம் என்ன? முதலில் டார்லினை வயிற்றில் கருவுடனும், கையில் குழந்தையுடனும் ஏற்றுக் கொள்கின்றான். தனது வீடு அவளது வீடு எனக் கூறுகின்றான். பின்னர் அதன் விளக்கத்தை கூறுகின்றான் “நீ எனக்கு சொந்தமானவள், எனவே உனது வீடும் என்னுடையதே”. சைரோ வீட்டினுள் வரும் பொழுது, ஓசியஸ் அழுத்தமாக கூறுகின்றான் “இது எனது வீடு, இவள் எனது மனைவி”. இவ்வளவு அழுத்தமுள்ள பாத்திரம், இறுதியாக தனது ஆணாதிக்க வெளிப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. சகல பிள்ளைகளையும் தனது பிள்ளைகளாக பதிவு செய்வதன் மூலம். இது தியாகமாக வெளிப்படலாம், ஆனால் உண்மையில் இதுவும் ஓர் ஆணாதிக்க வெளிப்பாடே. அனைத்தும் எனக்கே சொந்தம்.

கதாசிரியர், இவற்றையெல்லாம் மீறி டார்லினை தனது மூன்று கணவன்மாருடனும் தொடர்ந்து சேர்ந்து வாழவைக்கின்றார்.

இங்கு டார்லினின் வாழ்க்கை நேரடியாக காட்டப்படுகின்றது. எதுவும் ஒளித்து வைக்கப்படவில்லை. டார்லினுக்கு எந்த குற்ற உணர்வும் இல்லை. இயல்பாகவே உள்ளாள். சிசின்கோ விடம் (இரண்டாவது கணவன்) சென்று சைரோ தங்குவதற்கு அறை கட்டி தருமாறு கேட்கின்றாள். அத்துடன் தனக்கும் சைரோவுக்கும் உள்ள உறவைப்பற்றியும் கூறுகின்றாள். பார்வையாளரிடம் இந்த தன்மை உணர்வு வெகு யதார்த்தமாக கொண்டு செல்லப்படுகின்றது. இது ஒரு பெண் கதாசிரியரால் தான் முடியும். அவளது பாத்திரக் கூறுகள் முக்கியமானவை. திருமணம் தனது வறுமைக்கே. குறிப்பாக தனது இரு கருக்களுக்காக. பின்னால் குடும்பத்துக்காக உழைக்கின்றாள். பின்னர், தனது புதிய கணவனுக்காக தங்குவதற்கு இடமும் குடும்பமும் ஏற்படுத்துகின்றாள். இவள் ஒரு சுமை தாங்கியாக செயற்படுகின்றாள். ஒவ்வொரு கணவனிடமும் ஒவ்வொன்று உண்டு. ஒருவனிடம் காசு, மற்றவனி டம் பாசம், உழைப்பு, மற்றவனிடம் நவீனத்துவம்.

டார்லின் ஓசியஸ் எனது கணவன் என அழுத்திக் கூறுகின்றாள். ஓசியஸ் அவளுக்கு சொந்தமானவன். அதேபோல் தனது மற்றைய இரு கணவன்மாருக்கும் “குஞ்சை அடை காப்பது போல்” தனது மற்றைய இரு கணவன்மாரையும் காக்கின்றாள். மீண்டும் தாய்வழி சமுதாய முறைக்கு சென்று விட்டோம் என நினைக்கத் தோன்றுகிறது. வெகு தூரத்தில் இல்லை தாய்வழி சமுதாய முறை.

டார்லினாக நடித்த Regina Casé பிரேசிலின் பிரபல அழகி. படத்தில் அவரது அழகை பார்க்க முடியாது. அவரது சுமையைத்தான் பார்க்க முடியும். அவளது மன அழுத்தங்களின் வித்தியாசமான பரிமாணங்களைத்தான் காணலாம். படத்தின் மையமாக இவர் இருந்த பொழுதிலும், இவர் படைப்பு எந்த வணிக தன்மைகளையும் கொண்டிருக்கவில்லை.




## வானரன்

லத்தீன் அமெரிக்க படங்கள் இன்று உலகின் சிறந்த படங்களுக்கு வழிகாட்டி. தனி நபர், சமூக மரபுகள், ஒழுக்கங்கள் மீதான விமர்சனங்களை விமர்சிக்கின்றன. கேள்வி கேட்கின்றன. ஆண்களின் உடல் உறவுக்கும், அதிகாரத்துக்குமான தொடர்புகள், அரசியல் சக்திகளுக்கு சமூகத்தின் மீதான அக்கறை போன்றவற்றின் மீதான தொடர்ச்சியான விமர்சனங்கள், எதிர்-முரண் நிலை மீதான கருத்தியல்கள். குற்ற உணர்வுகள் மீதான பார்வைகள் இவற்றையெல்லாம் தாங்கி படைப்புக்கள் வெளிவருகின்றன. இந்த விமர்சனவியலே இன்றைய சினிமாவின் தேவை.

இறுதியாக இப்படத்தின் இயக்குனர் Andrucha Waddington டம் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அவர் அளித்த பதில் இது.

If you were given $10 million to be used for movie making, how would you spend it?
First I would need a great script and then the money.
இதுவே இப்படத்தின் சிறப்புக்கு காரணம்.



# நிகழ்வும் விளைவும்

## ஓடும் நீர் உறைவதில்லை 32

இயற்கையின் விதிப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு முடிவு உண்டு என்கிறோம். உலகில் எதுவுமே நிலையற்றது என்கிறோம். இந்த நிலையற்ற நிலையை உருவாக்கும் ஒன்று நிலையானது என்பது தான் உண்மை. எனவே நிலையான ஒன்று மிகுதி அனைத்தையும் நிலையற்றதாக்குகின்றது. அந்த நிலையானது என்னவெனில் மாற்றம் (Change) எனப்படும். உலகில் நிலையான ஒன்றே ஒன்று இந்த மாற்றம் தான். மாற்றங்கள் நிரந்தரமானவை. மாறிக்கொண்டே இருக்கும் தன்மையால் அவை நிலையானதாக அமைகின்றன.

மாற்றங்கள் நிலையானதாக அமைவதற்கு அடிப்படையாக இருப்பது எது என்பதுதான் பலருக்குப் புரியாத புதிர். ஒன்று நிலையாக இருப்பதற்கு அதாவது மாற்றங்கள் நிலையாகவும் தொடர்ச்சியாகவும் இருப்பதற்கு ஏதோ ஒன்று அடிப்படையாக இருந்தே ஆகவேண்டும். அந்த அடிப்படை என்ன? ஒன்றின் மாற்றமும் மாற்றம் இன்மையும் எதை அடிப்படையாக வைத்துத் தீர்மானிக்கப் படுகின்றது? சுருக்கமாகக் கூறுவதாயின் மாற்றங்களுக்கான அடிப்படை அந்த மாற்றங்களை உருவாக்கும் நிகழ்வுகள் தான். எனவே நிலையான மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்ச்சியாக இடம்பெறும் நிகழ்வுகளே. எனவே நிகழ்வுகள் நிலையானவை மட்டுமல்ல மாற்றங்களுக்கான அடிப்படையும் கூட.

உலகியல் மாற்றங்கள் மட்டுமல்ல நமது வாழ்வியல் மாற்றங்களுக்கும் அடிப்படையாக அமைபவை இந்த நிகழ்வுகளே. இந்த நிகழ்வுகள் ஒருவருக்கு ஒருவர் வேறுபட்டதாகவும், நேரத்திற்கு நேரம் மாறுபட்டதாகவும் அமையும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நிகழ்வுகளின் தாக்கங்கள் பற்றி நுண்ணறிவு நமக்குத் தேவைப்படுவதில்லை. ஏனெனில் அந்த நிகழ்வுகள் நாம் அறிந்தோ அறியாமலோ இயல்பாகவே இடம்பெறுவதால் அவை தவிர்க்கப்பட முடியாதவையாகவும் அமைகின்றன. உதாரணமாக உடலியல் மாற்றங்கள் இயல்பாகவே இடம்பெறும் நிகழ்வுகளின் தொகுப்பாக அமைவதனால் முதிர்ச்சி என்பது தவிர்க்கப்பட முடியாதது. இதே போன்று நமது வாழ்வியலில் ஏற்படும் பல்வேறு நிகழ்வுகள் எம்மால் தவிர்க்கப்பட முடியாதவையாகவும் அதனால் ஏற்படும் மாற்றங்கள் எமது கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாகவும் அமைவது இயல்பு.

இங்கே நிகழ்வுகள் தவிர்க்கப்பட முடியாதவை என்பது மறுக்கமுடியாததாயினும் அதனால் ஏற்படும் விளைவுகளைக் கட்டுப்படுத்த முடியுமா என்பது தான் இக்கட்டுரையின் அடிப்படையாக அமைகின்றது. எமது கட்டுப்பாடுகளுக்கு அப்பால் நிகழும் நிகழ்வுகளுக்கு எம்மால் எதையும் செய்ய முடியாது என்பது நாம் எல்லோரும் அறிந்த விடயம். உதாரணமாக காலையில் வேலைக்குச் செல்லுகின்ற போது திடீரென ஏற்படும் வானிலை மாற்றங்கள், போக்குவரத்து நெரிசல்கள் என்பன எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் என்பதால் இவை சம்பந்தமாக எதையும் நாம் மாற்றமுடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறோம். இங்கு எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்களையிட்டு நாம் கோவிப்பதோ அல்லது கவலைப்படுவதோ எந்த விதத்திலும் எமக்குச் சாதகமான நிலையை உருவாக்குவதில்லை.



நிகழ்வுகள் நிலையானதாயும் அவற்றில் பெரும்பாலானவை எமது கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்டதாயும் அமைவது தான் நமது வாழ்வின் அடிப்படை என்ற உண்மையை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளல் வேண்டும். ஏனெனில் ஒரு மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைவது நிகழ்வுகளை இனங்கண்டு அவை எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவையா அல்லது அதன் விளைவுகளை நாம் நெறிப்படுத்தவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியுமா என்ற அளவீட்டைச் சிறப்பான முறையில் கையாளுவது தான். நிகழ்வுகள் எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாக இருப்பின் அவற்றைக் கையாளும் முறையும் கட்டுப்படுத்தக் கூடியவையாக அல்லது நெறிப்படுத்தப்படக்கூடியவையாக இருப்பின் அவற்றைக் கையாளும் முறையும் அறிவியல் அனுபவம் சார்ந்ததாக அமைவது என்பதை விட ஒரு பொதுவான புரிந்துணர்வுடன் தொடர்புடையது என்பதே பொருத்தமானதாகும்.

துரதிஷ்டவசமாக நிகழ்வுகளைவிட நிகழ்வுகள் சார்ந்த விளைவுகள் பற்றிய மனிதனது செயற்பாடே அவனது வெற்றிக்கும் தோல்விக்கும், மகிழ்ச்சிக்கும் கவலைக்கும், இன்பத்திற்கும் துன்பத்திற்கும் ஆணிவேராக அமைகின்றது. ஏனெனில் நிகழ்வுகள் தவிர்க்கப்படமுடியாதவை என்பதனால் நாம் விரும்பியோ, விரும்பாமலோ அவை நம்மை வந்தடைவதையும் தவிர்க்கமுடியாது. இந்த நிகழ்வுகளில் நாம் எதிர்பார்க்காமல் இடம்பெறும் நிகழ்வுகளும் எதிர்பார்த்து இடம்பெறும் நிகழ்வுகளும் உள்ளடங்கும். இங்கு நாம் எதிர்பாராத நிகழ்வுகள் எம்மை வந்தடையும் போது அந்த நிகழ்வுகளை நாம் எதிர்ப்பதில் அர்த்தம் இல்லை. ஏனெனில் எதிர்பாராத நிகழ்வுகள் எதிர்பாராத விளைவுகளை உருவாக்குகின்றன. இந்நிலையில் இவ் விளைவுகளை நாம் எதிர்க்காமல் ஏற்றுக்கொள்வதே ஒரேயொரு வழி என்பதை நாம் மிகத்தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். உதாரணமாக எதிர்பாராதவிதத்தில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களின் தாக்கங்கள், திடீரென ஏற்படும் சுகவீனங்கள், எதிர்பாராத விபத்துக்கள் போன்றவை மூலம் ஏற்படும் விளைவுகளையிட்டு நாம் வெறுப்படைவதோ அல்லது ஆத்திரப்படுவதோ அல்லது கவலைப்படுவதோ முற்றிலும் புத்திசாலித்தன மற்ற முயற்சியே. எனவே இவ்வாறான நிகழ்வுகளை அப்படியே ஏற்றுக்கொள்வதே புத்திசாலித்தனமானது மட்டுமல்ல சரியான அணுகுமுறையுமாகும். ஏனெனில் இவ்வாறான நிகழ்வுகளுக்கு எதிராகப் போராடுவது புவியீர்ப்புக்கு எதிராகப்போராடுவதற்குச் சமமானது.

மாறாக எமது கட்டுப்பாட்டுக்குள் அல்லது நெறிப்படுத்தலுக்குள் ஏற்படும் நிகழ்வுகளையும் அதன் விளைவுகளையும் நாம் கையாளக்கூடிய வகையில் மாற்றிக்கொள்வதன் மூலம் பல்வேறுபட்ட பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளலாம். உதாரணமாக ஒருவருக்கு இருதய நோய் இருப்பதாக எடுத்துக்கொண்டால் அதன் தாக்கத்தை எவ்வாறு குறைத்துக் கொள்ளலாம் என்பதைப் பல்வேறு வழிகளால் நாம் நடைமுறைப்படுத்தலாம். நீரிழிவு நோய் உள்ள ஒருவர் அதன் தாக்கத்தைக் குறைப்பதற்குப் பல்வேறு வழிமுறைகளைக் கையாளலாம். எனக்கு ஏன் நீரிழிவு ஏற்பட்டது என்று கவலைப்படுவதைவிட அதனை எவ்வாறு பராமரிக்கலாம் என்பதற்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதே அவசியமாகும்.

துரதிஷ்டவசமாகப் பெரும் பாலானவர்களது வாழ்வியல் பிரச்சினைகளுக்கு அடிப்படையாக அமைவது நிகழ்வுகளின் விளைவுகளைக் கையாளும் முறையாகும். பெரும்பாலானவர்கள் தமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளின் விளைவுகளுக்கு எதிராகப் போட்டியிட்டுத் தமது சக்திமுழுவதையும் வீணடித்து விடுகிறார்கள். இவர்களது பட்டறிவு கூட சுட்டுப்போய்விடுகிறது. முடியாத, சாத்தியமல்லாத ஒன்றுக்காகத் தமது வாழ்க்கையை வீணாக்கிக் கொள்கிறார்கள். எம்மால் மாற்றமுடியாத விடயங்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்ப்பதற்குப் பதிலாக அதை எதிர்த்துப் போராடியே வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவருகிறார்கள். இவர்கள் இறந்துபோன பாம்பு ஒன்றை ஆடவைப்பேன் என்று ஓயாது மகுடியை ஊதி வாய்ப்புண்ணுக்கு வழி வகுப்பவர்கள். அதுமட்டுமல்ல வாய்ப்புண்ணின் வலியால் அவதிப்படும் போது கூட "வாயில் புண் ஏற்படாதிருந்திருந்தால் பாம்பை ஆட வைத்திருப்பேன்" என்று தம்மைப் பறை சாற்றுபவர்கள். இன்னொருவகையானவர்கள் தம்மால் கட்டுப்படுத்தக்கூடிய அல்லது நெறிப்படுத்தக் கூடிய விடயங்களை உதாசீனம் செய்வதன் மூலம் பிரச்சினைகளுக்குள் தம்மை உட்படுத்துபவர்கள். இவர்களுக்கு ஒரு நிகழ்வின் விளைவும் அதனை எவ்வாறு தவிர்க்கலாம் என்பது தெரிந்தும் அதை நடை முறைப்படுத்தாமல் அவதிகளுக்கு உட்படுபவர்கள். உதாரணமாக நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட இருந்தும் கூட அதிகளவு இனிப்புப் பண்டங்களை தவிர்க்க வேண்டும் என்று தெரிந்தும் அதற்கு மாறாகச் செயற்படுபவர்கள். ஏனெனில் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை இவர்கள் வளர்த்துக் கொள்வதில்லை.

### ஆம் வாசகர்களே!

ஒரு மகிழ்ச்சிகரமான வாழ்வியலின் அடிப்படை நமது கட்டுபாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளையும் அதன் விளைவுகளையும் முழுமையாக ஏற்றுக்கொள்வதும், நமது கட்டுபாட்டிற்கு உட்படும் நிகழ்வுகளை சிறப்பான முறையில் நெறிப்படுத்தி அதன் விளைவுகளை நமக்குச் சாதகமாக மாற்றுவதும் தான். ஏனெனில் நிகழ்வுகள் தவிர்க்க முடியாதவையாயினும் அவற்றின் விளைவு களை நாம் இனங்கண்டு கொள்வது இலகுவானதே. நமது வாழ்க்கை எவ்வாறு அமைக்கப்படுகின்றது என்பதைச் சிறிது ஆழமாகப் பார்ப்போமாயின் எமக்கு ஏற்படும் நிகழ்வுகள் பத்து சதவீமாகவும் இந்த நிகழ்வுகள் சம்பந்தமாக நாம் செயற்படும் முறை தொண்ணூறு சதவீதமாகவும் அமைவதைக் காணலாம். இந்த தொண்ணூறு சதவீதமான அணுகுமுறை நேர்த்தியானதாயின் மகிழ்வான வாழ்க்கையையும் எதிர் மறையானதாயின் துன்பமான வாழ்க்கையையும் தருகிறது. எனவே நிகழ்வுகளல்ல அதன் விளைவுகள் சம்பந்தமான அணுகுமுறையே மகிழ்ச்சியையும் துன்பத்தையும் தீர்மானிக்கின்றது.


KG Master
416.725.5112







கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை

Education = Intelligence + Character

KG Master

(Over 25 years of experience)

(416) 291-2611

(416) 725-5112

Memory Power, Concentration
Listening Skill, Reading Skill
Goal Setting, Team Work
Performance, Presentation Skill
Time Management

Training Classes for children 7 to 16 years old

Self-Confidence, Self-Image
Self-Discipline, Patience
Obedience, Positive Thinking
Winning Attitude,
Taking Responsibility
Leadership Qualities



# படிதாண்டா பத்மினி

பத்மினி எங்கள் வீட்டின் செல்லப் பிள்ளை. வாளிப்பான உடல். மழை நீர் உடல் மேல் விழுந்தால் அப்படியே வழிந்தோடக் கூடிய அளவினுக்கு மழுமழுவென்ற உடல் வாகு. பழுப்பு நிறமான தோல். பார்ப்போரைக் கவர்திழுக்கும் கோலம். கவர்ச்சி என்றால் அத்தனை கவர்ச்சி.

சிறிய கொம்புகளுடன் மருட்சி நிறைந்த கண்ணுடன் ஒரு தனிக் கவர்ச்சிப் பிம்பமாக எமது யாபேரினதும் அபிமானத்துக்குரிய பிராணியாய் வீட்டில் உலவி வந்தது பத்மினி. அம்மாவுக்கு அதன் மேல் அலாதிப் பிரியம், அது தன்தாய் வீட்டில் இருந்து வரும்போது சீதனமாய்க் கொண்டு வந்ததென்பதால். அப்புவுக்கோ அதன், பால் வீட்டுத் தேவைக்கும் தாராளமாய் தேறியது போக எஞ்சியது அக்கம் பக்கத்தாரிடம் இருந்து பணம் வருகிறதற்குக் காரணமாக இருப்பதால் பாசம் பொங்குவதற்கு வேறு காரணம் வேண்டுமா? அக்காவுக்கு அதன் அமைதியான பார்வையும் அடக்கமான நடவடிக்கையும் பத்மினி எனக் குரல் கொடுத்ததும் பாந்தமாய் வந்து நிற்கும் பண்பும் மெத்தப் பிடிக்கும். வீட்டு முற்றம் எங்கும் நிறையப் பூக்கன்றுகள், சிறப்பாகச் செவ்வரத்தை இருந்தாலும் அதில் ஒன்றின் மேலாவது வாய் வைக்கவேணுமே, பத்மினியின் பார்வை கூட அப்பக்கம் போனதில்லை. எனவே பத்மினி என் மதிப்புக்குரிய பிராணியாய் வலம் வர வேறென்ன தேவை.

எம் வீட்டின் குறூசோவுக்கோ அது ஒரு விளையாட்டுத் தோழி என்பதால் மிகவும் பிடிக்கும். மாட்டுத் தொழுவம் ஒன்று எமது வீட்டில் இருந்த போதிலும் பத்மினியை என்றுமே அங்கு கட்டிப் போட்டதில்லை. பத்மினியும் மழை பெய்யும் காலம் தவிர ஏனைய நேரங்களில் அந்த இல்லத்தில் தங்கியதும் இல்லை. பத்மினி கன்று போட்ட காலங்களில் கூட கன்றுதான் தொழுவத்தில் கட்டப் பட்டிருக்கும். பத்மினி சுதந்திரப் பிரசையாகவே வாழ்ந்து வந்தது.

எமது வீட்டின் முற்றமே அதன் வாசஸ்தலமாக அமைந்து வந்தது. ஆகவே அதற்கும் குறூசோவுக்கும் இடையே உள்ள நட்பின் ஆழத்தை எம்மால் காணக் கூடியதாக இருந்தது. பத்மினியின் வாலிலே கௌவி இழுத்து விட்டு குறூசோ ஓடுவதும் அதனை பத்மினி மிரட்டியபடி கலைத்து ஓடுவதும், குறூசோ அங்கும் இங்குமாகப் பத்மினியுடன் தாச்சி மறிப்பதும் நாம் அன்றாடம் காணும் இனிய காட்சிகள். இரவு நேரங்களிலும் இருவரும் அருகருகே தான் படுத்து உறங்குவார்கள். சில சமயங்களில் பத்மினி வழக்கத்துக்கு மாறாக நாலு கால்களையும் எறிந்த நிலையில் படுத்திருக்க அந்தக் கால்களுக்கிடையே குறூசோவும் அதே மாதிரிப் படுத்திருப்பதைக் காண எமக்கு ஆச்சரியமாக இருக்கும். பத்மினி தனது கன்றுகளுடன் இத்தனை வாத்ஸல்யமாக இருந்திருக்க வில்லை என்பது எமது அபிப்பிராயம். அதற்கும் காரணம் எமது பெற்றோர்களே. கன்றுகளை பத்மினி ஈன்ற ஒரு சில நாட்கள் மாத்திரம் சுயாதீனமாக ஓடித் திரிய விட்டனர். பின்னர் தொழுவத்தில் கட்டி விடுவார்கள். பால்கறப்பதற்கு முன்னர் பால் ஊட்டுவதற்காக அவிழ்த்து விடுவார்கள். பத்மினி அப்போ தனது கன்றினை நாக்கினால் நக்கிய படி தனது வாஞ்சையைக் காட்டும்.

பத்மினியின் பெயர் ஊர் முழுவதும் பிரபலம். ஆகவே பத்மினி கன்று போட்டுள்ளது என்று அறிந்ததுமே எனக்கு, உனக்கு என்று ஊரவர்கள் முன்கூட்டியே கன்றினுக்குவிலை பேசித் தமக்கெனச் சொல்லி வைத்து விடுவார்கள். நான் அறிந்த வரை பத்மினி அதிகம் பேர்களை ஏமாற்றவில்லை. ஈன்றவை பெரும்பாலும் பசுக்கன்றுகளே.

விடியக் காலை அம்மா துயில் விட்டெழுந்ததும் முகம் கழுவி பெரிய பால் செம்பினை சாம்பல் போட்டு மினுக்கி பத்மினியிடம் சென்று அதன் மடிக்குக் கீழே தனது இரு முழங்கால்களுக்குமிடையே பால் செம்பினை வைத்து அதன் முலைக் காம்புகளை மாறி மாறி இழுக்க சொர், சொர் என்ற சத்தத்துடன் பால் செம்பு மெல்ல மெல்ல நிரம்பும். பத்மினியோ நீ தேவையானதை எடுத்துக் கொள் எனத் தன்னிச்சையாக நின்றபடி முன்னே நிற்கும் கன்றினை நாக்கால் உடற்பரப்பு எங்கும் நக்கியபடி இருக்கும். குறூசோவோ ஒரு பக்கத்தில் தன் பின்கால்கள் இரண்டையும் மடித்து, முன் இரு கால்களையும் ஊன்றி முண்டி கொடுத்த வண்ணம் நாக்கினை வெளியேயும் உள்ளேயும் இழுத்தபடி கவனமாகக் கண்காணித்துக் கொண்டிருக்கும். அம்மா பால் நிரப்பி நுரை ததும்பிய செம்புடன் குசினி போய் எமக்கெல்லாம பால்காய்ச்சி கோப்பி கலந்து தருவா. குறூசோவுக்கும் அதன் பங்கு கட்டாயம் இருக்கும். மிஞ்சிய பாலை அருகு வீடுகளுக்கு விநியோகிக்கும் பணி என்னுடையது. மாதாந்தம் அதில் வரும் வருமானம் அம்மாவின் உண்டியலுக்குள் உபயம். அது பற்றி என்றுமே அப்பு கேட்டதில்லை. அப்பு கொஞ்சம் கசவாரப் பேர்வழி. ஆகவே, எனது சில்லறைத் தேவைகளுக்குப் பணம் அப்புவிடமிருந்து கறப்பது கொஞ்சம் கல்லிலே நார் உரித்தமாதிரி. ஆகவே அம்மாவின் நல்லெண்ணத்தால் தான் எனது சீவனம் ஓடியது. நண்பர் வட்டமும் நிலைத்தது.



**- கனக்ஸ் -**

பத்மினி வேலி தாண்டாப் பத்தினி. ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்கு ஒரு முறைதான் அவள் எமது வீட்டின் வேலியைத் தாண்டுவாள். அதாவது அம்மா அப்புவிடம் பத்மினி கமறுகிறாள், சீதம் போகிறது, மாட்டைத் தேடுகிறாள் போலத் தெரிகிறது எனக் கூறியதும் அப்பு அவளை சங்கானையில் உள்ள சினைப்படுத்தும் நிலையத்திற்கு அழைத்துச் செல்லும் பொழுது மாத்திரமே. கழுத்துக் கயிற்றில் பிடித்தபடி அப்பு முன்னே போக பத்மினிக்குப் பின்னே குறூசோ ஓடி ஓடிச் செல்லும். சினைப்படுத்தும் நிலையத்தில் அப்போ காளை மாடுகளே இருந்தன. பத்மினிக்கு நடைபெறும் சடங்கு அத்தனையையும் குறூசோ கண்காணித்தபடி நிற்கும் பின்னர் பத்மினியுடன் வீடேகும்.

சில வருடங்களுக்குப் பின்னர் ஒரு முறை அப்பு பத்மினியைச் சினைப்படுத்தச் சங்கானைக்குப் போன போது, செயற்கை முறையில் சினைப்படுத்தும் முறைமை ஆரம்பமாகிவிட்டது. பொறுப்பாளர் அப்புவிடம் இப்போ எம்மிடம் மிகவும் உயர்ந்த ரகக் காளைகளின் சுக்கிலம் உள்ளது. பெரிய ஆறு அடி உயரமான வர்க்கம். இதனை முயற்சித்துப் பாருங்களேன் என ஆசை காட்டினர். அப்புவுக்குச் சபலம் தட்டியது. இம்முறை நாம்பன் கன்றாக இருந்தால் பெரிய இனம் நல்ல காசுக்கு விற்கலாம் என்ற பேராசை. சரி என, அப்புவும் ஒப்புக் கொடுத்தார். பத்மினியும் சினைப்பட்டு விட்டது. பேறுகாலம் வந்தது. எப்ப என்றாலும் பத்மினி கன்று போடலாம். அம்மா பத்மினியைக் கண்காணித்த படி இருந்தா. இரவு வேளைகளிலும் கண்முழித்தால் சென்று பார்ப்பார். அதற்காகவென்றே லாந்தர் விளக்கினை நூத்து விடாமல் திரியைக் குறைத்து வைத்திருப்பார்கள்.

அன்று எல்லோரும் நல்ல உறக்கத்தில் இருந்தோம். குறூசோ அங்கும் இங்கும் ஓடியபடி ஒரு விதமான ஊளையிட்டமாதிரி குலைத்துக் கொண்டிருந்தது. அம்மாதான் முதலில் எழும்பினார்கள். விளக்கின் திரியைத் தூண்டிவிட்டு வெளியே எழுந்து சென்று பார்த்த பொழுது பத்மினி பிரசவ வேதனையில் சங்கடப் பட்டுக் கொண்டிருந்தாள். பன்னீர்க் குடம் வெளியே தெரிந்தது. ஆனால் கீழே இறங்குவதாகத் தெரியவில்லை. பத்மினி இத்தனை கஷ்டம் முன்னர் எப்போதும் பட்டதில்லை. அதன் கண்களின் கருமுழிகள் மறைந்து காணப்பட்டன. இது நாள் வரை பத்மினி கன்று போடுவது என்பது. 'எடுத்து கண்டனர் இற்றது கேட்டனர்' என்ற கதைதான். கணப்பொழுதில் முடித்து விடுவாள். அம்மா செயற்கை முறைச் சினைப்படுத்தலுக்கு வசை பாடியபடி ஓடிச் சென்று அப்புவை எழுப்பி வந்தார். சிறிதாகக் கால்கள் வெளியே தெரிந்தன. அப்பு பன்னீர்க் குடத்தை உடைத்து விட்டார். அதனுள்ளே இருந்த பாய் பொருள் வெளியெறியது, கன்றின் இரு பின் கால்கள் தெரிந்தன. பத்மினி தீவிர முயற்சி செய்வது தெரிந்தது. ஆனால் அதற்கு மேல் கன்று ஈனுதல் முயற்சி பலிக்கவில்லை. பத்மினி களைத்துப் படுத்து விட்டாள்.

அவள் கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்தது. அதற்கு மேலாக அம்மாவின் கண்களில் இருந்து கண்ணீரும், வாயிலிருந்து வசவும் வெளிவந்தன. குறூசோவோ ஓர் இடத்தில் நிற்காமல் பரிதவித்த வண்ணம் அங்கும் இங்குமாக ஓடியவண்ணம் இருந்தது. பொழுதும் விடிந்தது ஆனால் பத்மினிக்கோ விடிவு ஏற்படவில்லை. களைத்துப் போய்ப் படுத்தபடி கிடந்தாள். மேலும் முயற்சி செய்ய அவளிடம் வலு இருக்கவில்லை. அம்மாவில் புலம்பல் அப்புவை இம்சைப் படுத்தியது. அப்புவிற்கும் பொறுமை எல்லையைத் தாண்டியதால் மெல்லக் கைகளை வைத்து கன்றின் கால்களை மெதுவாக இழுத்தார். அந்த இழுவை படிப்படியாகப் பலமானது. இறுதியில் கன்று வெளியே வந்தது ஆனால் உயிர் போன நிலையில். கன்று. கன்று இறந்ததையிட்டு அம்மாவிற்குத் துன்பம் எனினும் பத்மினியின் அவலம் தீர்ந்ததையிட்டு மனம் நிம்மதி. கன்று புதைக்கப் பட்டது. இளங்கொடி வழமைபோல் ஓலை உமல் ஒன்றினில் வைத்துக்கட்டித் தோப்பின் இலுப்பை மரத்தில் தொங்க விடப்பட்டது.

எமக்குப் பால் பிரச்சினை. அப்பு ஒரு கறவையை வாங்கி வந்து விட்டார். அது தரும் பால் எமது தேவைக்குப் போதுமாக இருந்தது. ஆனால் பிரச்சினை அம்மாவுக்கும் எனக்குமே. அம்மாவின் உண்டியலுக்குள் காசு விழவில்லை. எனக்கோ சில்லறைத் தேவைகளுக்கு அப்புவை நச்சரித்து கேட்பதில் அரைவாசி கால்வாசி பெறுகின்ற பரிதாப நிலை. காலம் எப்படியோ ஓடியது. பத்மினி மாட்டைத் தேடுகின்ற அறிகுறியைக் காணோம். அம்மா கவலைப் பட்டா. அப்பு உள்ளூர் மிருக வைத்தியர் ஒருவரிடம் காண்பித்தார். அவர் பத்மினியின் பிறப்பு, வளர்ப்பு எல்லாம் கேட்டுச் சாதகம் கணித்து இனிப் பத்மினிக்கு அந்தச் சாத்தியம் இல்லைப்போல் என அடித்துக் கூறாவிட்டாலும் எடுத்துக் கூறினர். அப்பு காரியவாதி. யார் யாரிடமோ கெஞ்சி பத்மினியின் பேரப் பிள்ளை ஒன்றினைக் கொண்டு வந்து விட்டார்.

ஒரு நாள் காலை நான் தலைவாசலில் இருந்தேன். ஒருவர் வந்தார். அவரை ஊரில் 'அடிமாடு கந்தையா' எனவே எல்லோரும் அழைப்பார்கள். காரணம் விளங்கும் தானே. பெயர் கந்தையா என்றாலும் ஊரிலே உள்ள கிழடு தட்டிய மாடுகளுக்கு அவர்தான் விமோசனம் கொடுப்பவர், அவற்றினை வாங்கிக் கொண்டு போய் இறைச்சிக் கடைக்காரருக்கு விற்பவர் என்பதால் அந்த அடைமொழி அவருக்கு ஊரார் உபயம். 'பொன்னண்ணை' என்றார். நான் அப்புவிடம் போய்ச் சொன்னேன். அப்பு வந்தார். அம்மாவுக்கு விசயம் புரிந்தது.

கோபம் கொப்பளித்தது. 'என்ன விசர் வேலை செய்யிறியள் பத்மினி இங்கே நிற்கட்டும்' என்றார். அப்பு ஜதார்த்தவாதி. வெறும் சாணிக்காக இத்தனை தீனி பத்மினிக்குப் போட வேண்டுமா என்பது அவர் எண்ணவோட்டம். ஆள் கொஞ்சம் பிடிவாதக் காரரும் கூட. எனவே அவர் தீர்மானம் எடுத்தால் தீர்மானமே. 'அதற்காகத் தானே இன்னொன்று வாங்கி வந்து விட்டேன், நீ சும்மா இரு' என்றார். அம்மாவோ 'இல்லை அதை விற்கமுடியாது' என்றார். கந்தையாவுக்கோ அதை எப்படியாவது வாங்கிவிட வேண்டும் என்ற நப்பாசை. இத்தனை வாளிப்பான மாட்டினை அவர் தனது வியாபாரத்தில் என்றுமே சந்தித்ததில்லை. ஆகவே 'தங்கச்சி இனி இதனாலே என்ன பிரயோசனம்' என்றார் அம்மாவுக்கோ கோபம் உச்ச நிலையை அடைந்தது. அப்புவுக்குக் கொடுப்பதற்கு ஆயத்தம் பண்ணிய அத்தனையையும் கந்தையாவில் உதிர்த்துக் கொட்டி விட்டார். கந்தையா பெட்டிப் பாம்பானார். அப்பு லேசுப் பட்டவர் இல்லை. அவர்களுக்கிடையே ஏற்பட்ட வாக்கு வாதம் கடைசியில் அப்பு சார்பாகவே போனது. அம்மா கண்ணீருடன் திண்ணையில் உட்கார்ந்து விட்டா. கந்தையா அப்புவுடன் பேரம் பேசி எப்படியோ நூறு ரூபாவிற்கு இருவரும் சம்மதித்தனர். கந்தையா கொடுத்த நூறு ரூபாயை அப்பு பெரிது பண்ணி அம்மாவிடம் நீட்டினார். அம்மாவோ திரும்பியும் பார்க்கவில்லை. அப்பு அதனை அவர் பக்கத்திலே போட்டு விட்டு: கந்தையாவிடம் பத்மினியைக் கொண்டு போகுமாறு சொன்னார் பத்மினி நகர்ந்தால்த் தானே. 'அண்ணை இதை ஒழுங்கை மட்டும் கொண்டு வந்து தாருங்கள்' என்றார் கந்தையா. அப்பு கயிறிலே பிடித்துக் கொண்டு போக பத்மினி சாதுவாக அவர் பின்னே தொடர்ந்தாள். குறூசோவும் பின்னே ஓடிச் சென்றது.

அப்பு தோப்பு ஒழுங்கை மட்டும் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு அப்படியே வயல் பக்கம் போய்விட்டார். பத்மினி திரும்பி அப்புவைப் பார்த்தபடி பரிதாபமாக நின்றது. குறூசோ இரண்டு முன்கால்களையும் மண்டி கொடுத்தபடி பத்மினிக்கு அருகே நாக்கினை உள்ளும் வெளியேயும் இழுத்தபடி குந்தியிருந்தது. கந்தையா கயிறைப் பிடித்து இழுத்தார். பத்மினி கோவில் வாகனம் போன்று அசையாது நின்றாள். கந்தையா, 'வா பத்மினி வா' என அன்பாக அழைக்கத் தொடங்கியவரின் குரல் படிப்படியாக உயரத்தொடங்கி ஏக வசனத்துக்குப் போனது. எதுவும் பத்மினியின் காதில் ஏறினால் தானே! கந்தையாவின் கோபம் உச்சக் கட்டத்துக்குப் போய் விட்டது. அடியில்லாவிட்டால் அண்ணன் தம்பி உதவாது என்றது அடிமாட்டுக் கந்தையாவுக்கா தெரியாது. வேலியில் ஒரு கதியாலைப் பிடுங்கினார் தனது கோபம் தீர பத்மினில் முதுகில் ஒரு போடு போட்டார்.

வந்ததே வினை. அருகிலே எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்த குறூசோ பாய்ந்தது கந்தையாவின்மேல். அவர் 'அடி நாயே நாயே' என்று தடியை அதனை நோக்கி அசைக்க அது ருத்திர மூர்த்தியாகி விட்டது. வேறு வழி அவருக்குப் புலப் படவில்லை. பத்மினியைப் பிடித்த கயிறினை விட்டுவிட்டுத் தன்னைக் காப்பாற்ற முனைந்தார். குறூசோவோ விடவில்லை நன்றாகப் பதம் பார்த்தது. பத்மினி இதுதான் சந்தர்ப்பம் எனத் திரும்பியது. நாலுகால் பாய்ச்சல் எடுத்தது. அடுத்த நான்காவது நிமிடம் அம்மாவின் முன்வந்து நின்றது. அம்மாவுக்கோ ஆச்சரியம். உடனடியாக விசயம் விளங்கவில்லை. ஆனால் சிறிது நேரத்தில் அடி மாட்டுக்காரர் கடிகளுடன் பிரசன்னமான பொழுது, குறூசோவும் பழையபடி நாக்கினை வெளியேயும் உள்ளேயும் இழுத்தபடி பத்மினிக்கு அருகே வந்து நின்ற பொழுது விசயம் விவரமாகப் புரிந்தது. 'அண்ணை பொன்னன்னை உந்தச் சனியனும் வேண்டாம் இந்தக் கடியும் வேண்டாம் என்ரை காசைத் தா' அண்ணே என்றார் அடி மாட்டார். சீண்டப் படாமல் திண்ணையில் இருந்த நூறு ரூபாவை அம்மா அவரை நோக்கித் தள்ளி விட்டார்.

# “நான் தனிமனிதன். என்னால் என்ன செய்ய முடியும்?”

## நேர்காணல் : பாலுமகேந்திரா

பாலுமகேந்திராவுக்கு அறிமுகம் தேவை இல்லை. சினிமாவை நேசிக்கிற அசல் கலைஞன். அதன் மூலம் தமிழுக்கு, தமிழ் சமூகத்துக்கு ஏதாவது செய்ய துடிக்கின்ற கலைஞன். “வீடு”, “சந்தியாராகம்” இரண்டும் தமிழ் சினிமா வரலாற்றில் பாலுமகேந்திராவால் வரையப்பட்ட “அழியாத கோலங்கள்”. இப்போது, புதிதாக ஒரு திரைப்படக் கல்லூரி தொடங்கும் முயற்சியில் இருக்கிறார்.

திரைப்படக் கல்லூரி முயற்சி வெற்றிபெற வாழ்த்துக்கள் சொல்லிவிட்டு பேசத் தொடங்கினோம். நேரம் குறித்த பிரக்ஞை இன்றி பேசிக்கொண்டே இருந்தார் பாலுமகேந்திரா. ஒலிநாடா நின்ற பிறகும் பாலுமகேந்திரா குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

கேள்வி: உங்களது இளமைக் காலங்கள் பற்றி சொல்லுங்கள். எப்படி நீங்கள் சினிமாவை நோக்கி வந்தீர்கள்?

பாலுமகேந்திரா: இலக்கியம், போட்டோகிராபி, சினிமா இந்த கலைகள் மீதான எனது ஆர்வத்துக்கு முதல் விதை போட்டவர் என் அப்பாதான். என்னுடைய தமிழ் அறிவு, ஆர்வம் எல்லாம் அவர் சொல்லிக் கொடுத்து வந்ததுதான். சமஸ்கிரதத்திலும் தமிழிலும் நல்ல பாண்டித்தியம் உள்ளவர். ஸ்ட்ரோபிஸிக்ஸ் பேராசிரியர். பல வகைகளிலும் அப்பா என்னை பாதித்திருக்கிறார். என்னுடைய பதிமூன்றாவது பிறந்த தினத்தன்று அப்பா எனக்கொரு “கொடாக் கேவி க்ரெவுனிக்” காமிரா அன்பளிப்பாக கொடுத்தார். அப்போது அந்த காமிரா விலை 19 ரூபாய் 50 பைசா. அதில் புகைப்படங்கள் எடுக்கத் தொடங்கினேன். நன்றாக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்புறம் இந்த பாராட்டுகளை கேட்கவேண்டும் என்பதற்காகவே தொடர்ந்து புகைப்படங்கள் எடுத்தேன்.

### சந்திப்பு: கிருஷ்ணா

தங்கன் என்ற நண்பன் ஒரு நாள் அம்புலிமாமா புத்தகம் கொண்டுவந்து கொடுத்தான். அந்த புத்தகம் எனக்குப் பிடித்திருந்தது. தொடர்ந்து அம்புலிமாமா, குமுதம், ஆனந்த விகடன், கல்கி, எழுத்து, தீபம், கணையாழி என்று என் வாசிப்பு படிப்படியாக சென்றது. நான் படித்த பள்ளிக்கூடம், அமெரிக்க ஜெஸ்விக்ஸ் நடத்தின ஒரு கத்தோலிக்கப் பள்ளிக்கூடம். அங்கு பாதர் நோபிரியல் என்பவர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 16 எம்.எம்.-இல் திரைப்படம் காண்பிப்பார். அவர் தேடித் தேடி உலகத்தரமான படங்களை கொண்டு வந்து போட்டார். உலகின் தலைசிறந்த பல திரைப்படங்களை பார்ப்பதுக்கான வாய்ப்பு எனக்கு அப்போது கிடைத்தது.
இப்படி இலக்கியம், போட்டோகிராபி, சினிமா என்ற மூன்று குதிரைகளின் பயணம் செய்தது எனது இளமைக்காலம். கல்லூரி செல்லத் தொடங்கிய போது எழுத ஆரம்பித்து விட்டேன். “தினகரன்”, “வீரகேசரி”, “சுதந்திரன்” ஆகிய பத்திரிகைகளுக்கு கதை, கவிதை, சினிமா விமர்சனங்கள் எழுதினேன். கொழும்பில் நான் வேலை பார்த்து வந்த காலகட்டத்தில் “தேனருவி” என்றொரு இலக்கியப் பத்திரிகையை நானும் சில நண்பர்களும் இணைந்து நடத்தினோம். “தேனருவி” யில்தான் பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோருடைய மிக முக்கியமான இலக்கிய கட்டுரைகளும் செ. யோகநாதன், பாலன் ஆகியோ ரது தொடக்ககால எழுத்துகளும் வெளியாகின.

கல்லூரி படிப்பு முடிந்ததும் கொழும்பு சென்று சர்வே டிபார்ட்மெண்டில் ஏரியல் புகைப்படக்காரராக இரண்டு வருடங்கள் பணி செய்தேன். கொழும்பில் திரைப்படச் சங்கம் தொடங்கி படங்களை திரையிட்டோம். ஹிந்திப் படங்கள் கொழும்புக்கு வரும். அவற்றை விழுந்து விழுந்து பார்ப்பேன். அப்போது, எனக்கு சினிமாவில் வேலைகள் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து அதனை முறையாக கற்க விரும்பினேன். ஹார்வர்டு, கலிபோர்னியா, பார்ஸன் உட்பட பல அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுக்கும் விண்ணப்பித்தேன். இரண்டு பல்கலைக்கழகங்களில் எனக்கு இடம் கிடைத்தது. ஆனால் அங்கே சென்று படிப்பதற்கு ஆகும் செலவுகள், நானோ என்னுடைய அப்பாவோ கற்பனை செய்துகூட பார்க்க முடியாததாக இருந்தது. அப்போது, இந்தியாவில் இருக்கும் பூனா திரைப்படக் கல்லூரி பற்றிக் கேள்விப்பட்டு, இயக்குநர் பயிற்சிக்கு விண்ணப்பித்தேன். போட்டோகிராபி கிடைத்தது. ஒருவகையில் அதுவும் எனக்கு மிகவும் நல்லதாக கிவிட்டது. அங்கே போட்டோகிராபி, டைரக்ஷன், எடிட்டிங் என்று எல்லா வகுப்புகளிலும் நான் கலந்து கொண்டேன்.

கேள்வி: அப்போது, உங்களுக்கு “ரோல் மாட” லாக இருந்த திரைப்பட ஆளுமைகள் யார், யார்?

பாலுமகேந்திரா: சத்யஜித்ரேவும் அகிரா குரோசவாவும்தான். குரோசவாவின் “ரஷோமான்”, “ரெட் பியர்ட்” படங்களை நான் கொழும்பிலேயே பார்த்திருந்தேன். அவருடைய சினிமா மொழி, ஆளுமை அட்டகாசமான ஒன்று, அடர்த்தியானது. இன்றும் அவருடைய பழைய படங்களைத் திரும்பிப் பார்க்கும் போது எனக்கு பிரமிப்புதான் ஏற்படுகிறது. ரேவுடைய ஆளுமை இதற்கு மாறாக மிகவும் நிதானமானது. எந்த ஆர்பாட்டமும் அலட்டலும் ஆரவாரமும் பிரயத்தனமும் இல்லாதது. இயல்பானது. என்னைப் பாதித்த ஒளிப்பதிவாளர்... சத்யஜித்ரே காமிராமேன் சுப்ரதோமித்ரா. ஹாலிவுட்டில் ஜேம்ஸ் வார்ன், பிற்காலத்தில் வெஸ்ட் அல்மர், மேக்ரோ சாப்மென்.

கேள்வி: நீங்கள் விரும்பிப் பார்த்த தமிழ் படங்கள் எவை, எவை என்று சொல்லமுடியுமா?

பாலுமகேந்திரா: “பாசமலர்”, “தேவதாஸ்” , “அந்தநாள்”, சமீபத்தில் “ ஆட்டோகிராப்”, “காதல்”. அதிகம் பாதித்த தமிழ் படம் “தேவதாஸ்” தான். 49 முறைகள் அந்த படத்தை நான் பார்த்திருக்கிறேன். நான் ஒரு படைப்பாளி என்கிற கோணத்தில் இருந்து பார்க்கும்போதும் பிரமிப்பு இன்னும் அதிகிரிக்கத்தான் செய்தது. அதனுடைய நேர்த்தியான ஒளிப்பதிவு, சவுண்ட் ரிக்கார்டிங், ஒலி உபயோகிக்கப்பட்டிருந்த விதம் என்னை கவர்ந்தது.

கேள்வி: ஒளிப்பதிவாளராகத்தான் உங்கள் சினிமா பயணம் தொடங்கியது. ஆனால், பிறகு இயக்குனராகி விட்டீர்கள், ஏன்?

பாலுமகேந்திரா: பூனா கல்லூரியிலிருந்து நேரே சிறிலங்காவுக்குப் போய்விட்டேன். அங்கு லெஸ்ட் ஜேம்ஸ் பிரிஸ் என்று ஒரு அற்புதமான இயக்குநர் இருக்கிறார். சத்யஜித்ரேவின் தாக்கங்கள் அவரி டம் உண்டு. அவருடைய ஒரு படத்துக்கு ஒளிப்பதிவு செய்வதுக்கான ஆயத்த வேலைகளில் இருந்த போது, மலையாளத்தில் பிரபலமான “செம்மீன்” இயக்குநர் ராமுகரியாத், “உடனே புறப்பட்டு இங்கே வா” என்று எனக்கு ஒரு தந்தி அனுப்பினார். நான் வந்ததும் ராமுகரியாத் கேட்டார்: “என்னுடைய செம்மீன் பார்த்திருக்கிறாயா?” நான், “ஆமாம், பார்த்திருக்கிறேன்” என்றேன்.” அதே கூட்டணி மீண்டும் ஒரு படத்தில் வேலை செய்யப் போகிறோம். ரிஷிகேஷ் முகர்ஜி எடிட்டிங். சலீல் சௌவுத்ரி இசை. போட்டோகிராபி நீ” என்றார். நான் பிரமித்துப் போய்விட்டேன். இதனை எதிர்பார்க்கவில்லை. ராமுகரியாத், பூனா கல்லூரியில் நான் செய்த, “எ வியூ இன் தி போர்ட்” என்ற டிப்ளமோ சினிமாவைப் பார்த்திருக்கிறார். அந்த படத்தை பார்த்துதான் என்னை அழைத்திருக்கிறார். இப்படி, ராமுகரியாத் தின் “நெல்லு” என்ற மலையாளப் படத்தில் நான் ஒளிப்பதிவாளராக அறிமுகமானேன்.

தமிழில் நான் ஒளிப்பதிவு செய்த முதல் படம் மகேந்திரனின் “முள்ளும் மலரும்”. அப்புறம் கே. விஸ்வநாத்தின் “சங்கராபரணம்”. பிறகு, மணிரத்னத்தின் முதல் படமான “பல்லவி அனுபல்லவி”, பரதனின் முதல் படமான “பிரயாணம்” ஆகியவற்றுக்கும் ஒளிப்பதிவு செய்தேன். இவர்கள் அனைவருமே முக்கியமான இயக்குனர்கள். மணிரத்னம் திரைக்கதையை சொன்ன போது, திரைக்கதை மட்டுமல்லாமல் அவரது ஆர்வமும் சினிமா மீது அவருக்கு இருந்த காதலும் எனக்குப் பிடித்திருந்தது. எனக்கு அவருக்கும் இடையேயான அதிர்வுகள் நன்றாக இருந்தன. இந்த இளைஞனுடன் நான் வேலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை முதல் சந்திப்பிலேயே அவர் உருவாக்கினார். மகேந்திரனுடன் வேலை செய்ததும் இதே காரணங்களால்தான். எல்லோருமே ஒத்த அதிர்வுள்ள இளைஞர்கள். ஆனால் அதற்குப் பிறகு அவர்கள் மாதிரி என்னை யாரும் வசீகரிக்கவில்லை. பல வாய்ப்புகள் வந்தன. நான் ஒப்புக் கொள்ளவில்லை. 1976-ல் நானே படங்களை இயக்கத் தொடங்கிவிட்டேன். எனவே, பிறகு மற்ற இயக்குநர்களின் படங்களில் பணியாற்ற எனக்கு கால அவகாசம் இல்லாமல் ஆகிவிட்டது.

கேள்வி: தமிழ் சினிமா கதாநாயகர்களுக்கு என்று ஒரு பிம்பம் இருக்கிறது. நீங்கள் அந்த தோற்றத்திலிருந்து மாறுபட்டிருக்கும் பிரதாப் போத்தனை கதாநாயகனாக நடிக்க வைத்தீர்கள், ஏன்?

பாலுமகேந்திரா: “மூடுபனி”, “அழியாத கோலங்களில்” இரண்டிலும் அந்த கால படித்த, ஒரு சராசரி இளைஞனாக நடிக்க, அவருடைய தோற்றம் எனக்கு பொருத்தமாக பட்டது.

கேள்வி: அதுபோல் அர்ச்சனா போன்ற ஒரு கருப்பு பெண்ணை கதாநாயகியாக்கியது.

பாலுமகேந்திரா: எனக்கு கருத்தப் பெண்களை பிடிக்கும்.

கேள்வி: படப்பிடிப்பைத் தொடங்கிய பிறகு அதன் போக்கில் கதையில் சில மாற்றங்கள் செய்யவேண்டும் என்று உங்கள் உள்ளுணர்வு சொன்னால் அதற்கு செவி சாய்ப்பீர்களா அல்லது அமெரிக்க இயக்குநர்கள் போல் எழுதப்பட்ட திரைக்கதையை மாற்றமாட்டேன் என்று அடம் பிடிப்பீர்களா?

பாலுமகேந்திரா: அது அந்தக் கதையையும் சூழலையும் பொறுத்தது. “ வீடு“ படப்பிடிப்பைத் தொடங்கிய போது திரைக்கதையில் மழை இல்லை. படப்பிடிப்பு ஆரம்பித்ததும் புயல் சின்னம் காரணமாக 13 நாட்கள் சென்னையில் தொடர்ந்து மழை பெய்தது. அப்போது இந்த மழையைக்கூட உபயோகப்படுத்திக் கொள்ளலாமே என்று எனக்குப் பட்டது. உடனே படமெடுத்தோம். அப்புறம் படம் முடிந்து முதல்பிரதி பார்த்த போது மழை படத்துக்கு இன்னொரு பரிமாணத்தைக் கொடுத்ததை உணர்ந்தோம்.

ஒரு ஏசி அறையில் உட்கார்ந்து நான் ஒரு திரைக்கதையை உருவாக்குகிறேன். அது திரைப்படமாக உருவாகி வரும்போது பல்வேறு பரிமாணங்களை அடையக்கூடும். பிரசவ சமயத்தில் நிகழும் அந்த வலிகளுக்கு ஏற்ப அல்லது புல்லரிப்புகளுக்கு ஏற்ப சில மாற்றங்கள் தோன்றினால் நிச்சயம் செய்வேன்.

கேள்வி: “மூன்றாம் பிறை”தான் ஒரு இயக்குநராக உங்களைப் பிரபலமாக்கியது. “மூன்றாம் பிறை” படத்தின் கதைக்கான உந்துதல் உங்களுக்கு எங்கேயிருந்து கிடைத்தது.?

பாலுமகேந்திரா: பாலியல் ரீதியாக உடலுறவுக்குத் தகுந்த குழந்தைப் பெண் மீது உலகம் முழுக்க ஆண்களுக்கு ஒரு வசீகரம் இருக்கிறது. ஆண்களுக்கு வயதாக வயதாக பெண்ணின் வயது குறைந்து கொண்டே வருகிறது. 20 வயது ஒரு ஆண் 16 வயது பெண் மீது ஆசை கொண்டிருக்கிறார். அவரே 40 வயதாகும் போது பெண்ணின் வயது 14ஆக குறைகிறது. அப்புறம் அது 12, 11. . .என்று குறைந்து கொண்டே வருகிறது. இதனை “சைல்ட் வுமன் பேன்டஸி” என்று சொல்கிறார்கள். இதன் அடிப்படைதான் “மூன்றாம் பிறை”யின் கதை. ஸ்ரீதேவி அம்னிஸியாவால் பாதிக்கப்படுவதும் ஏழு வயது ஞாபகங்களுடன் மட்டுமே இருப்பதும் சும்மா ஒரு கண் துடைப்புதான். கட்டுக்கதை. வயது வந்த ஒரு ஆணுக்கும் முதிர்ச்சி இல்லாத ஒரு பெண்ணுக்குமான உறவுதான் அதில் இருக்கிறது.



விபச்சார விடுதியில் இருந்துதான் அவளை, கமல் காப்பாற்றிக் கொண்டு வருகிறார். எனவே அவளுக்கு ஆண்களுடன் தொடர்பு இருந்திருக்கக்கூடிய ஒரு பின்புலம் இருக்கிறது. அவர்கள் இருவரும் ஒரே கட்டிலில் படுத்துக் கொள்கிறார்கள். ஸ்ரீதேவி, செக்ஸ் வழிகிற ஒரு பெண். கமலஹாசன், காதல் இளவரசன் என்று சொல்லப்பட்டவர். இவர்களையும் இந்த பின்புலத்தையும் வைத்து ஒரு காதல் கதை சொல்லவேண்டும். கத்தி மீது நடக்கிற மாதிரி யான ஒரு விடயம் அது. பாலியல் ரீதியாக நெருடல் இல்லாமல், தகப்பனுக்கும் குழந்தைக்கும் இடையிலான ஒரு உலகமாக அது உருவாகி வந்தது. எனக்கு மனவளர்ச்சி இல்லாத ஒரு பெண்ணை மிகச் சின்ன வயதில் தெரியும். ஏறக்குறைய அவளுடைய பாதிப்பில் பண்ணப்பட்ட பாத்திரப் படைப்புதான் ஸ்ரீதேவி.

நடிப்பைப் பொறுத்தவரைக்கும் ஸ்ரீதேவிக்கு அதில் நிறைய வாய்ப்புகள் இருந்தன. ஒவ்வொரு காட்சியும் அவருடையதுதான். கமலஹாசனின் பங்கு அவருக்கு ஈடுகொடுக்க வேண்டும் என்பதுதான். நான் அதை இப்படி சொல்லிப் பார்க்கிறேன். ஸ்ரீதேவி என்னும் ஒரு காட்டருவி மலை உச்சியிலிருந்து கொட்டிக் கொண்டிருக்கிறது. காட்டருவியின் அழகே, அது கீழே ஒரு பாறையில் விழுந்து சிதறுவதில்தான் இருக்கிறது. “மூன்றாம் பிறை” யில் ஸ்ரீதேவி என்னும் காட்டருவி விழுந்து சிதறும் இடமாக கமலஹாசன் இருந்தார். கமலஹாசன் என்பதால் மட்டும்தான் அந்த காட்டருவியை தாக்குப்பிடிக்க முடிந்தது. வேறு ஒரு நடிகனாக இருந்தால் சுக்குசுக்காக சிதறிப் போயிருந்திருப்பார்.

நிறைய பேர் “மூன்றாம் பிறை” பார்த்துவிட்டு, “என்ன சார் இந்த மாதிரி முடித்திருக்கிறீர்கள்” என்று என்னிடம் சண்டைக்கு வந்தார்கள். தியேட்டரில் பெண்கள், “திரும்பிப் பாருடி” என்று ஸ்ரீதேவியைப் பார்த்து கத்தினார்கள். அந்தக் காட்சி, அந்த காலகட்டத்தில் என்னிடமிருந்து ஒரு பெண் பிரிந்து போனபோது எனக்கு ஏற்பட்ட வலியின் துகள்கள்தான் அது.

கேள்வி: நீங்கள், மகேந்திரன், பாரதிராஜா மூன்று

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 2 to 12 & OAC Special classes in Calculus & Algebra - Geometry English for all grades from Gr. 2 ta Gr. 10 Individual & group classes available By an experience teacher: S.F. Xavier

**CONTACT: 416 - 431- 6774** (Markham & Ellesmere)

***ENGLISH TUITION***

**ENGLISH & ENGLISH LITERATURE**

**YOUNG & EGLINTON பகுதியில் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் கற்பிக்கப்படுகிறது.**

***Upto Grade 12, IB (International Baccalaureate), Toefl***

***By trained graduated teacher. Pl. call:* 416.489.5329**

After 5:00pm - 10:00pm

# பவளவிழாக் காணும் படைப்பாளி

தமிழ் இலக்கிய ஊழியத்தில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தடம்பதித்து ஈழத்திலும், தமிழகத்திலும் மட்டுமல்லாது, பூமிப்பந்தின் ஐந்து கண்டங்களிலும் தமது கால்பதித்து தமது இலக்கிய இலக்கினையும், நோக்கினையும், போக்கினையும் இலக்கியப் படைப்பாளிகளுடனும், இலக்கியச்சுவைஞர்களுடனும் சல்லாபித்து வரும் எஸ். பொ. என அழைக்கப்படும் எஸ். பொன்னுத்துரை 1932 ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தார். ஆரம்பத்தில் யாழ். பெருமாள் கோவிலடியில் அமைந்திருந்த 'வேதப்பள்ளி' என்று அழைக்கப்பட்ட 'மெதடிஸ்மிசன் ஆரம்பபாடசாலையிலும், பின்னர் சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும், பரமேஸ்வராக்கல்லூரியிலும் கல்விகற்று தமிழகம் சென்று அண்ணாமலைப் பல்கலைக்கழத்திலும், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும் படித்து B.A பட்டதாரியானார்.

தனது பதினைந்தாவது வயதிலிருந்தே வீரகேசரி பாலர் வட்டத்தில் ஆரம்பித்த எழுத்துப்பணி இன்றும் தொடர்ந்துகொண்டே செல்கின்றது என எஸ். பொ. குறிப்பிடுகின்றார்.

"எஸ். பொவின் அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட இலக்கியத்திலே பரிச்சையம் உடையவர்கள், அவர் முரண்பாடுகளின் பொதியாக (A Bundle of Contradiction) திகழ்வதைக் காண்பார்கள். மரபுகளை உடைப்பதில் அவர் முன்னுக்கு நிற்பார். அந்தக் கட்டுடைப்புகள் மரபின் தொடர்ச்சியே என்று வாதாடுவார். கட்டுடைத்தல் தேவையையும், நியதியையும் பின்பற்றுகின்றது என்று நியாயம் கற்பிப்பார். சங்கத்தமிழுக்கு 'பண்டித' ஆவேசத்துடன் வக்காலத்து வாங்குவார். அதே மூச்சில் பாமரர் வழக்கே படைப்பிலக்கியத்திற்கான உயிர்துவ மொழி என்பார். இவற்றின் மத்தியிலே உறுதியான, தொடர்ச்சியான, தெளிவான இலக்கியக் கொள்கையை அநுசரித்து வாழ்வதாகவும் அறிக்கையிடுவார்." என எஸ்.பொ. பற்றி அவரின் மூத்தமகன் டாக்டர். பொன். அநுர எஸ்.பொ. வின் 'அப்பாவும் மகனும்' என்னும் காவியநூலின் பதிப்புரையில் குறிப்பிடுகின்றார்.

1946ஆம் ஆண்டு வீரகேசரியில் வெளிவந்த 'மலர்கள்' என்ற கவிதையுடன் எனது இலக்கியப்பயணம் தொடங்கிற்று. 1955வரை கதைகள், கட்டுரைகள், ஓரங்க நாடகங்கள் எழுதினேன். ஆயினும் இவை எழுத்துலகில் நான் சாதித்தவைகள் என்று சொல்ல முடியாது. 1955இன் பின்னரே எனது எழுத்துக்கள் அங்கீகாரம் பெற்றன. மார்க்ஸிஸம் மனிதகுலத்தின் ஈடேற்றத்திற்கும், பொருளியல் விமுக்திக்கும் ஏற்ற ஒரே வழி என்ற நம்பிக்கையை வரித்த அதே காலத்தில் தான் என் தமிழ் ஊழியம் துவங்கிற்று என எஸ். பொ. குறிப்பிடுகின்றார்.

எஸ்.பொ. சிறுகதைத்துறையில் பல பரிசோதனைகளைச் செய்து பாராட்டுப் பெற்றவர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பிராந்திய மொழி வழக்குகளையும், கிழக்குமாகாண முஸ்லீம்களின் பேச்சுவழக்கினையும் கையாண்டு சிறுகதைகள் எழுதியுள்ளார். இவர் எழுதிய சிறுகதைகள் வீ, அவா, ஆண்மை என மூன்று சிறுகதைத் தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

இவரது சிறுகதைத் தொகுதிகளுள் ஒன்றான ஆண்மைக்கு பாயிரம் எழுதிய இந்திரா பார்த்தசாரதி அவர்கள் "எழுதத் தொடங்கிய காலத்திலிருந்தே எஸ்.பொ. எழுத்துப் போராளி. மனிதனுக்காக சித்தாந்தமேயன்றி, சித்தாந்தத்துக்காக மனிதன் என்று சொல்வது மதியீனமென்று போராடியவர். எழுத்தில் தீட்டு, தூய்மை என்று எதுவுமில்லை, சிந்தனையில் நேர்மையும், சொல்லில் கபடமின்மையுமிருந்தால் போதும், அதுவே உன்னத எழுத்து என்று போராடியவர்" என்று குறிப்பிடுகின்றார்.

எஸ். பொ. வின் மற்றொரு சிறுகதைத் தொகுதியான 'அவா' விற்கு முன்னுரை வழங்கிய வல்லிக்கண்ணன் அவர்கள்; "ஈழத்து இலக்கிய உலகத்தில் ஒரு தனி சிறப்புடையவர் எஸ். பொன்னுத்துரை. எஸ்.பொ. என்று அறியப்பட்டுள்ள அவர் தனது சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், விமர்சனங்கள், கட்டுரைகளால் தனக்கென சிறப்பான ஒரு இடத்தைப் பெற்றிருக்கிறார். தனது இலக்கியக் கொள்கைகளினாலும், கண்டன விமர்சனங்களினாலும், பிரச்சினைக்குரிய ஓர் எழுத்தாளர் ஆகவும் எஸ். பொ. கருதப்படுகிறார்" என்று குறிப்பிடுகின்றார்.

இவரது முதல் சிறுகதைத் தொகுதியான "வீ" 1966 இல் வெளிவந்தது. இதன் முகப்புக்கதையான தேர் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் புனைகதை அமர்வில் மிகச் சிறந்த தமிழ் சிறுகதையாக அறிஞர்களால் சிலாகிக்கப்பட்டது. இவரது இரண்டு நாவல்கள் 1961இலும், 1971இலும் வெளியானது. முதல் நாவலான "தீ" தமிழில் வெளிவந்த பாலியல் குறித்த முதல் முயற்சிகளில் ஒன்று. நனவோடை உத்தியில் எழுதப்பட்ட முதலாவது தமிழ்நாவல்.



## எஸ் சந்திரபோஸ்

இரண்டாவது நாவல் 'சடங்கு' சுதந்திரன் பத்திரிகையில் தொடர் கதையாக வந்து 1971இல் நூலுருப்பெற்றது. யாழ்ப்பாணத்தின் பருத்தித்துறையில் வாழும் ஒரு சாதாரண குடும்பத்தின் ஆறுநாட்கள் நடைபெறும் நிகழ்வுகளின் தொகுப்புத்தான் சடங்கு. யாழ்ப்பாணம் நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த, கொழும்பில் தொழில்புரியும் அரசாங்க ஊழியரான செந்தில்நாதன் என்ற கதாபாத்திரம் வார இறுதியில் கொழும்பிலிருந்து சொந்த ஊருக்கு வந்து மீண்டும் கொழும்பு செல்வதற்கிடையில் நடைபெறும் நிகழ்வுகள் பிரதேசமொழி வழக்கில் யாழ்ப்பாண சடங்குகள், சம்பிரதாயங்களையும், தனிமனித இயல்பூக்கத்தையும் (Motives) சொல்லிச் செல்கின்றது. இந்நாவல் தமிழ்நாட்டில் ராணிமுத்துவின் மறுபிரசுரத் திட்டத்தின் கீழ் பிரசுரமான ஒரே ஒரு ஈழத்துநாவல். சுமார் மூன்று பதிப்புக்கள் கண்டு ஒன்றரை இலட்சம் பிரதிகள் விற்பனையான நாவல் சடங்கு.

எஸ்.பொ. அங்கதச்சுவையில் அரச உயர்மட்டங்களில் இடம்பெறும் லஞ்சலாவண்ணியங்களை 'பந்தநூல்' எனப்படும் வினாக்குறியின்? தலைப்புடன் 1991 இல் வெளியீடு செய்தார். இந்நூல், 'நச்சாதார்க்கும் இனியர்' உரையுடன் கூடியதாக பண்டைய நூற்பதிப்புப் பணிகளின் ஊடாக யாத்திரா செய்யும் பிரமிப்பினை ஏற்படுத்தும்.

எஸ்.பொ. ஈழத்து இலக்கிய ஊழியத்தில் சகோதர எழுத்தாளர்களின் திறமைகளை ஊக்குவித்தும், கௌரவித்தும் வந்துள்ளார். இதன் வெளிப்பாடாக ஈழத்தில் முதன்முதல் கூட்டுமுயற்சியாக மத்தாப்பு என்ற குறுநாவல் ஒன்றும், 'சதுரங்கம்', காந்தீயக்கதைகள்' என்னும் இரு தொகுப்பு நூல்களும் வெளிவந்தன.

'மத்தாப்பு' என்னும் குறுநாவல் இ. நாகராஜன், ரசிகமணி கனக செந்திநாதன், சு.வே (சு. வேலுப்பிள்ளை) குறமகள் (வள்ளிநாயகி இராமலிங்கம்) ஆகிய நால்வருடன் இணைந்து எஸ். பொ. இறுதி அத்தியாயத்தை எழுதி முடித்தார். இக்குறுநாவல் வீரகேசரியில் ஆறுவாரங்கள் தொடராக வந்து பின்னர் நூலுருப்பெற்றது.

'சதுரங்கள்' 1972 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஆர். பாலகிருஷ்ணன், வ. அ. இராசரத்தினம், எம். ஏ. ரஹ்மான், மற்றும் தமிழக சாலை இளந்திரையன் ஆகியோருடன் எஸ். பொ. வும் எழுதி வெளியிட்ட நூலாகும்.

'காந்தீயக் கதைகள்' என்னும் தலைப்பில் 1969இல் காந்தீய நூற்றாண்டை ஒட்டி ஆர். பாலகிருஷ்ணன், யாழ்ப்பாணம் தேவன், ராஜநாயகன், என். எஸ். எம் இராமையா, வ. அ. இராசரத்தினம், தெளிவத்தை யோசப், இரசிகமணி கனக செந்திநாதன், கே. வி. நடராஜன், எம். ஏ. ரஹ்மான் என்னும் ஒன்பது எழுத்தாளர்களுடன் எஸ். பொ இணைந்து எழுதிய 'சில நேரங்களில் சில தோழர்கள்' என்ற சிறுகதையை ராஜமித்திரா என்ற புனைப்பெயரில், பத்துத் சிறுகதைகள் கொண்ட தொகுப்பு நூலாக இளம்பிறை வெளியீடாக வெளியிடப்பட்டது.

மலரும் நினைவாக எஸ்.பொவின் இளமைவரலாற்றை இனைத்து, அரைநூற்றாண்டிற்கு முன்னர் வாழ்ந்த யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு, பழக்கவழக்கங்களை வரலாறு போல கூறிச் செல்லும் 'நனவிடைதோய்தல் (1992) வெளியிடப்பட்டது. இதனை எஸ்.பொ. 'Creative Essay' என்ற இலக்கியவகையைச் சார்ந்தது என்று குறிப்பிடுகின்றார். இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய அபிராமி வெளியீடுகள் விமல் அரவிந்தன் 'நனவிடை தோய்தல், புதிய இலக்கிய முயற்சி, நடைபுதிது, அமைப்பு புதிது, நோக்கம் புதிது, அநுபவம் புதிது, ஆக்கம் புதிது, இதனால் ஈழத்து இலக்கியம் மேலும் வளம் பெறுகின்றது என்று குறிப்பிடுகின்றார்.

ஈழத்தின் தமிழ் பேசும் இனங்களுடைய எதிர்காலத்தினைப் பாதிக்கவல்ல முக்கிய பிரச்சினை ஒன்றுகுறித்து 1970 களில் 'எச்.எம்.பி முஹிதீன் அறிக்கை' வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை வெளிப்படையாகப் பார்க்கும் போது ஈழத்துப் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைவது போன்று தோற்றம் காட்டினாலும், உள்ளார்ந்தமாக தமிழ்தேசிய எழுச்சியைத் தடுத்து, ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சியினை முடமாக்கும் நோக்கே இருந்தது. இதனை எதிர்த்து பல்வேறு ஈழத்தமிழ் எழுத்தாள அமைப்புக்களை இணைத்து 'எஸ்.பொ அறிக்கை 31.10.1970 இல் வெளியிடப்பட்டது. எஸ்.பொ. வின் ஆய்வு நூலாக 'இஸ்லாமும் தமிழும்' என்னும் நூல் இஸ்லாமிய வாலிபர் இயக்கத்தால் 1975 இல் கொழும்பில் வெளியிடப்பட்டது. இஸ்லாமியமக்களின் தமிழ்த்தொண்டுகளை ஆவணப்படுத்தும் நூலாக வெளிவந்தது.

எஸ்.பொவின் 'கீதை நிழலில்' என்னும் குட்டிக்கதைகள் உருவத்தில் அமைந்த தத்துவக்கதைகளின் தொகுதி, இதில் இடம் பெற்ற பல கதைகள் கல்கி வார இதழில் தொடர்ந்து பல வாரங்கள் வெளிவந்தது 'இராஜாஜி' என அழைக்கப்படும் இராஜகோபால் ஆச்சாரியார் அவர்களின் பாராட்டுக்களைப் பெற்றவை.

எஸ்.பொ. தமிழ் நாடக உலகிலும் தடம் பதித்துள்ளார். நடிப்பின் மூலமே நாடகக் கலைக்குள் நுழைந்தார். 1953ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற சமாதானமகாநாட்டில் அவர் எழுதி நெறிப்படுத்தி நடித்த 'சாவு' என்னும் நாடகம் எம். ஜி. இராமசந்திரன் தலைமையில் அரங்கேறிப் பாராட்டைப் பெற்றது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாடக உலகின் தொடர்புகளையும், ஞானங்களையும் விரிவுபடுத்திக் கொண்டார். பின்னர் மட்டக்களப்பு மண்ணிலே தான் நாடகத்துறையில் முழுமையுடன் ஈடுபடும் வாய்ப்பு ஏற்பட்டது. 'முதல் முழக்கம்', அந்தநாள்', 'தலைக்குமேல்', 'கூண்டுக்கு வெளியே', 'வலை' ஆகிய நாடகங்கள் எஸ்.பொ. வால் எழுதப்பட்டு மட்டக்களப்பிலும், கொழும்பிலும் மேடை ஏற்றப்பட்டது. 'தினை விதைக்காதார்' என்னும் வரலாற்று நாடகம் தினகரன் ஆண்டுமலரில் வெளிவந்தது.

தொடர்ச்சி 19ஆம் பக்கம்

# எஸ்.வி.வி. என்னும் எஸ்.வி. விஜயராகவாச்சாரியார்

## கடந்த இதழ் தொடர்ச்சி

